# திருக்குறள்

# ஆராய்ச்சி

ஆசிரியர் இறையனார்.

தமிழகம்

உறையூர்.

76

பதிப்புரிமை] 1949 [விலை ரூ. 1—8—0

# திருக்குறள் ஆராய்ச்சி

ஆசிரியர் இறையனார்

*

தமிழகம்
இலிங்காயத்தார்தெரு
உறையூர் :: திருச்சிராப்பள்ளி

பதிப்புரிமை] 1949 [விலை ரூ. 1—8—0

# பொருள் அடைவு


| | பக்கம் |
|---|---|
| மக்கட் பிறப்பும் வாழ்வின் சிறப்பும் | 3 |
| வாழ்விற்குரிய இரு பொருள்கள் | 5 |
| பொது நூல் | 20 |
| திருக்குறளின் பெருமை | 22 |
| ஆசிரியர் காலம் | 33 |
| ஆசிரியர் சமயம் | 43 |
| பண்டைத்தமிழர் கண்ட செந்நெறி | 49 |
| அறிஞர்கள் அளித்த பெருமை | 54 |
| திருக்குறளின் தெளிந்த கொள்கைகள் | 72 |
| திருக்குறளின் பிறமொழிப் பதிப்புகள் | 85 |
| திருக்குறளும் உரைகளும் | 87 |
| பரிமேலழகர் உரை ஆராய்ச்சி | 96 |
| மனுதரும சாத்திரம் | 101 |
| நூலில் நுழைப்பு | 110 |
| தொகுப்புரை | 141 |


## பிழையும் திருத்தமும்

| பக்கம் | பிழை — திருத்தம் |
|---|---|
| 55 | ஜெர்மன் - ஜெர்மன் |
| 64 | உயிர் - உயர் |
| 74 | என்றும - என்றும் |
| 94 | ஈகவர் - E. கவர் |
| 96 | கேடல் - கோடல் |
| 109 | கொள்ளல்ாம் - கொள்ளலாம் |
| 110 | ஊண் - ஊன் |
| 111 | பொருட்டு - பொருட்கு |
| 112 | அதிகாரம - அதிகாரம் |

# முன்னுரை

உலகில் உள்ள நூல்கள் எல்லாவற்றினும் எல்லாவகைகளிலும் சிறந்து விளங்குவது திருக்குறள் ஒன்றேயாகும். திருக்குறளைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணம் இது வரையில் பொதுமக்களிடம் ஏற்படாதிருந்தபோதிலும் இப்போது அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஆர்வம் ஒருவாறு அரும்பியுள்ளது. திருக்குறள் தமிழ் மரபிற்குரிய தனிப் பண்பாட்டறிவினால் ஆக்கப்பட்டது. ஆதலால், அறிவுக்குப் பொருத்தமான உலகப் பொது நெறிகளைக் கொண்டு பொலிகின்றது. இதனால், உலகப் பேரறிஞர்கள் பலர் 'திருக்குறள் அறிவிற்குப் பொருந்தாத மூடக் கொள்கைகளை முற்றும் விலக்கி, அறிவியல் நெறிகளை உலகிற்கு எடுத்துரைக்கும் ஒப்புயர்வற்ற செப்பமுடைய உயரிய நூல்' எனப் பாராட்டிப் புகழ்ந்துள்ளார்கள்; புகழ்கின்றார்கள்.

இதற்குப் பழைய உரைகளும் புதிய உரைகளும் பல உள்ளன. பழைய உரைகளில் பரிமேலழகர் உரையே உயர்ந்தது எனப் புலவர் பலரும் போற்றியுள்ளார்கள். ஆதலால், அதைத் தழுவியே பின்னால் தோன்றிய உரைகள் பெரும்பாலும் எழுதப்பட்டன. ஆனால், பரிமேலழகர் உரையில் இடையிடையே வடநூற் கொள்கைகளை வலிந்து திணித்தும், பலவிடங்களில் அக்கொள்கைகளுக்கேற்ப மூலபாடத்தையே திருத்தி அமைத்தும் வடநூல்களைத் தழுவியே திருக்குறள் ஆக்கப்பட்டுள்ளதென்பதை நிலைநாட்ட அரும்பாடுபட்டிருக்கிறார். இதனால், திருக்குறளுக்குரிய தனிச் சிறப்பை (உரையால்) மறைத்துவிட்டார். ஏன் குறளின் பெருமைக்குக் குழி பறித்துவிட்டார் என்றே கூறலாம்! இவ்வாறு இவர் எழுதிய உரையும் திருத்தியமைத்த மூலபாடமும்தான் இன்று சிறந்த உரையாகவும் சரியான மூலபாடமாகவும் மதிக்கப்பட்டும் பதிக்கப்பட்டும் வெளியில் உலவுகின்றன.

பரிமேலழகரைத் தவிரப் பலர் எழுதிய உரைகளிருக்கவும் இவர் திருத்திய மூலபாடம்தான் பதிப்பாகி உலவுகின்றதென்று உரைப்பது பொருந்துமா எனப் பலர் வினவலாம். அச்சாகாமல் உள்ள ஏட்டுச் சுவடிகளில் பரிமேலழகர் கொண்டுள்ள மூலபாடங்களுக்கு மாறான மூலபாடங்கள் மிகப் பலவாகக் காணப்படுகின்றன. மூலபாடங்கள் வேறாக - மாறாக இருந்துள்ளன என்பதற்கு

இவைகளே தகுந்த சான்றுகளாம். சரியான மூலபாடங்கள் எவை என்பதைத் **திருக்குறள் விஞ்ஞான ஆராய்ச்சி உரையில்** அகச் சான்றுகளுடன் எடுத்துக்காட்டியுள்ளோம். பரிமேலழகர் கொண்ட மூலபாடமே பதிப்பில் மூலபாடமாக வந்ததற்குரிய காரணங்களை யும் அங்கு நன்கு விளக்கியுள்ளோம். ஆதலால், ஈண்டு விரிவாகக் கூறாது விடுத்தனம்.

இங்ஙனம் இடையில் நுழைத்த வடநூற் கொள்கைகளால் தமிழ் மரபிற்குரிய அறிவுடனமைந்த திருக்குறளின் தனிப் பெரு மைக்கு இழுக்கு ஏற்பட்டுள்ளதென்பதை மறைக்கவோ மறுக்கவோ எவராலும் இயலாது. திருக்குறளைப் படித்தறிய வேண்டுமென்ற ஆர்வம் பொதுமக்களிடம் தோன்றியுள்ள இக்காலத்தில் மேற்கண்ட உரைகளையும் மூலபாடத்தையும் பொதுமக்கள் படித்தால் குறளில் திணித்தும் திருத்தியும் அமைத்துள்ள வடநூற் கொள்கைகள் அனைத்தும் திருவள்ளுவரின் கொள்கைகள்தான் என்று கருதவும் இடமுண்டாகும்.

"திருக்குறள், ஆரிய வழக்கொடு உடன்பட்ட நூலே". "திருக்குறள் வேத உபநிடதங்களின் சாரம்" எனப் பலர் ஆராயும் திறனின்றிப் பரிமேலழகர் திணித்ததைக்கொண்டே துணிவாகக் கூறியிருப்பதாலும், பரிமேலழகர் ஏற்படுத்திய வழியில் (பகுகுழி யில்) நின்று, திருக்குறள் ஆரிய வேத வருணாசிரமக் கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டே ஆக்கப்பட்டதென்பதைத் திருக்குற ளில் இருந்தே எடுத்துக்காட்டி நிலைநாட்டும் பெருமுயற்சி சங்கராச் சாரியார் மடத்தில் நடைபெற்று வருவதாலும், சில புல்லுருவிக் கொள்கையினையுடைய புலவர்களையும் தொண்டர்களையும் கொண்டே இக்கொள்கைகளைப் பொதுமக்களிடம் அவர்கள் விரை வில் பரப்பலாம்.

இப்போதுள்ள உரையும், மூலமும் இவர்கள் விளம்பரத்திற்கு ஒத்திருப்பதால் ஊன்றி ஆராய்ந்து உண்மை உணரும் தன்மை அமையப் பெறாத பொதுமக்கள் உள்ளத்தில் வள்ளுவர் வடநூல் களைத் தழுவியே இயற்றியுள்ளார் என்ற எண்ணமும் ஏற்படலாம். இந்நிலையில் அவர்கள் "திருக்குறள் தமிழ் மரபிற்குரிய தனி நூல்; ஆரிய நூல்களுடன் மாறுபட்டது" என்று அறிஞர் பலர் அன்று கூறியுள்ளவைகளும், இன்று இதற்காகப் பல மாநாடுகள் கூட்டிப் பல அறிஞர்கள் இவ்வாறு கூறி வருபவைகளும் இனி கூறக்கூடிய வைகளும் வெறும் குழப்பங்களை உண்டாக்கும் முழக்கங்கள் என

வும், மக்களுக்குள் ஆரியர் தமிழர் என்ற பிளவை உண்டாக்கும் கிளர்ச்சி எனவும் கூறிப்பொதுமக்களை ஏமாற்றிப் பழைய மடைமையிலேயே அழுத்தி வருணாசிரம அடிமைகளாகவே வாழ்ந்து வரும்படியான வழியைத் தேடிவிடுவார்கள்.

தமிழர் மரபிற்குரிய தனி வுணர்வுடையோர்களும் இவ் வடநூற் கொள்கைகள் இடையில் திணிக்கப்பட்டவைகள் எனத் தெளியாமல் 'திருவள்ளுவர் ஆரியக் கொள்கைகளைத் தழுவியே—ஆரியக் கொள்கைகளுக் கடிமைப்பட்டே திருக்குறளைச் செய்துள்ளார். ஆதலால், இதைத் தமிழர்க்குரிய தனிநூலெனக் கொள்ளவும் பொது நூலெனப் போற்றவும் முடியாது' என்ற முடிவுக்கும் வரலாம். இதனால், திருக்குறளைப் புறக்கணித்து அதன் துணை கொண்டு வாழ்வில் அடைய வேண்டிய அறிவு விளக்கத்தையும் அரும் பெரும் பயனையும் தமிழ் மக்கள் இழந்தும் விடலாம்.

இங்ஙனம் திருக்குறளைப்பற்றிப் பலவகையான கருத்துக்களும் கொள்கை விளம்பரங்களும் குழப்பங்களும் மிகுந்துள்ளமையால் திருக்குறளைப்பற்றிய உண்மையை உணர்ந்துகொள்ள வேண்டுமென்ற உள்ளக் கிளர்ச்சியை உணர்ச்சியின் எழுச்சியைப் பொது மக்களிடம் உண்டாக்கவே **திருக்குறள் ஆராய்ச்சி** என்ற இந்நூல் எழுதப்பெற்றது. ஆரியக் கொள்கைகளைத் தழுவியே திருக்குறள் செய்யப்பட்டதென நிலைநாட்டப் பலர் முயல்வதால் ஆரியக் கொள்கைகளுக்கு வள்ளுவர் கொள்கைகள் எல்லா வகைகளிலும் முற்றும் மாறுபட்டவைகள் என்பதை வேதங்களில் மனுநூலில் கண்ட விதிகளையும், திருக்குறளிற்கண்ட விதிகளையும் எடுத்துக் காட்டி **வள்ளுவர் கொள்கையும் வடவர் கொள்கையும்** என்ற ஆராய்ச்சி நூல் ஒன்றும் எழுதப் பெற்றுள்ளது. மனித இனம் என்ற முறையில் வடவர்கள் பண்டைத் தமிழரின் வழி வழி வந்த குழுவினராயினும் அவர்கள்கொண்ட பழக்க வழக்க ஒழுக்க மாறுபாடுகளால் அறிவிற்குப் பொருந்தாத் தன்னலக் கொள்கைகளால் வேறுபட்டார் என்ற உண்மையும் வேற்றுமை நீங்கி ஒற்றுமை உண்டாகும் வழியும் அதில் விளக்கப்பட்டுள்ளன.

உலகில் பல மொழிகளிலும் வேதங்கள் ஆகமங்கள் என்ற பெயர்களில் பல நூல்கள் உள்ளன. அவைகள், கடவுளாலும் கடவுள் தூதர்களாலும் செய்யப்பட்டவை — கூறப்பட்டவை என்றே கூறப்படுகின்றன. ஆனல், அவைகளில் தேசம் நாடு சாதி மதம் சமயம் இவைகளுக்குரிய சில தனிக் கொள்கைகளைச் சிறப்பித்தும்

மக்களுக்குள் உயர்வு தாழ்வு கற்பித்தும் கூறப்பட்டுள்ளன. உலகமும் உயிர்களும் மனிதர்களும் கடலும் வானும் கதிரும் மதியும் கடவுளால் படைக்கப்பட்ட விதங்களும் பொருந்தா முறையில் கூறப்பட்டுள்ளன. மக்களில் பலர் கதைகளையும் கடவுளால் நிகழ்ந்த கதைகளையும் நம்ப முடியாத முறையில் வரலாற்று நூலில் கூறுவனபோல் கூறப்பட்டுள்ளன. ஆயினும் அவை கடவுளால் ஆக்கப்பட்டவை, நம்ப வேண்டியவை என்ற கொள்கை இன்றும் இருந்து வருகிறது.

திருக்குறள் இவைபோன்ற நூல்களில் ஒன்று அன்று; சாதி மத முதலான பேதங்களைக் கடந்து மனிதனுக்குரிய பொது நீதியைப் பொதுக் கொள்கைகளைப் புகட்டும் உலகப் பொது நூல். உணர்வைப் பெருக்கி உண்மையை விளக்கும் அறிவு நூல். ஆதலால் அறிவுக்குப் பொருந்தாக் கருத்துக்களும் கதைகளும் பிற நூல்களைப்போல இதில்வர இடமில்லை. பிறநூற் கருத்துக்கள் கதைகளைக் குறிப்பிடும் சொற்களும் தொடர்களும் குறளில் புகுத்தப் பட்டுள்ளனவென்பது ஆராய்வோர்க்கு வெளிப்படையாக விளங்கும்.

திருக்குறள் உலகில் மனித வாழ்விற்குரிய அறம், ஒழுக்கம், நீதி, அரசியல், பொருளியல், இன்பவியல், இவைகளை மட்டும் எடுத்துரைக்கும் நூல் என்று கருதலாகாது. உயிர்களின் முன்னேற்றத்தில் படிப்படியே பெருமுயற்சியால் மனித உடலையும் வாழ்வையும் பெற்ற உயிர்கள் அறிவு விளக்கத்தால் அருள் முயற்சியால் இவ்வுலகிலேயே இவ்வுடலிலேயே துன்பங்கள் நீங்கிய மேலான இன்ப நிலையில்—தெய்வ நிலையில் தெய்வ வாழ்வைப் பெற்றுத் திகழ்வதற்குரிய சிறந்த முறைகளையும் தெரிவிக்கும் சிறந்த அறிவுநூல் என்றே கருதவேண்டும். எனவே, இது விதிநூலன்று, மதிநூல் என்றே கொள்ளவேண்டும். இங்ஙனம் உயிர்களின் உயர்வுக்கு இந்நூல் உதவிபுரியும் முறைகளை முதலில் முறையாகவும் சற்று விரிவாகவும் விளக்கப்பட்டுள்ளது.

தன்னலங்கருதும் தனிப்பட்ட உலக நூல்களைப் போலன்றிப் பொது நூலாகவும் புகழுக்குரியதாகவும் விளங்கும் திருக்குறளின் பெருமைகளைப் பற்றியும், ஆசிரியர் பெயர், நூற்பெயர், ஆசிரியர் காலம், சமயம், கொள்கை இவைகளைப்பற்றியும் தெளிவாக ஆராயப் பட்டுள்ளன. திருக்குறளைப்பற்றி அறிஞர்கள் பலர் தெரிவித்துள்ள உண்மைக் கருத்துக்களை எடுத்துக் காட்டியும், இவற்றிற்கு மாறாக ஆராய்வின்றிக் கூறுவோர் கருத்துக்களை மறுத்தும், திருக்

குறளின் தெளிந்த கொள்கைகள் இவையெனத் தெளிவாக்கப் பட்டுள்ளன. திருக்குறளின் சரியான பொருளடைவும் (வைப்பு முறை) நூலில் உரைக்கப்படும் பொருளின் சுருக்கமும் இவை யெனத் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. பின் குறளுக்குள்ள உரைகளைப்பற்றியும் பரிமேலழகர் உரையைப்பற்றியும் ஆராய்ந்து திருக்குறளில் இடையிடையே வடநூல் கொள்கைகளை வலிந்து திணிக்கவும் அவற்றிற்கேற்ப மூலத்தைத் திருத்தவும் எண்ணியே பரிமேலழகர் உரை எழுத முன் வந்தார் என்ற திடமான முடிபும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குச் சான்றாக உரைப்பாயிரத்திலும் நூலினுள்ளும் இவர் வடநூற் கொள்கைகளை எடுத்துக் கையாண்டுள்ள முறைகளையும், அவற்றிற்கேற்ப எழுதியுள்ள உரைகளையும் எடுத்துக்காட்டி அவை கள் ஆசிரியர் கருத்துக்குப் பொருத்தமற்றவைகள் எனவும் விளக் கப்பட்டுள்ளன. வள்ளுவர் உள்ளம் இவர் திணித்த வடநூற் கொள்கைகளுக்கு மாறானது என்பதை குறளிலிருந்தே அறிந்து கொள்ளு முறைகளையும் குறிப்பாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. திருக்குறளில் ஐயத்திற் குரியவைகளும் உண்மை மூலத்தின் வடி வம் பொருளும விளங்க வேண்டியவைகளுமாகிய பல சொற்கள் இறுதியில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இவை அறிஞர்களின் சிந்தனைக்குச் சிறந்த விருந்தாக அமையலாம்.

இம்முறையில் எழுதப்பட்ட இச்சிறு நூல் தமிழ் மக்களின் தமிழ் அறிஞர்களின் தமிழ்ப் புலவர்களின் உள்ளத்தில் புத்துணர்ச் சியையும் புத்தெழுச்சியையும் உண்டாக்கித் திருக்குறளைப்பற்றிய உண்மையைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற அறிவாராய்ச்சி யில் ஆர்வத்தை ஏற்படுத்துமெனத் திண்ணமாக எண்ணுகின்றோம். இந்த ஆர்வம் உணர்வையும் அறிவையும் ஊக்கி அறிவாராய்ச்சி புரி யும் இடைவிடாப் பெருமுயற்சியில் ஈடுபடுத்தி உண்மை கண்டு தெளிய உதவி புரியுமெனவும் உறுதியாகக் கருதுகின்றோம். இந் நூலைக் கண்ணுறும் அன்பர்கள் அறிஞர்கள் ஆராய்ச்சியாளர்கள் தங்கள் உள்ளத்தின்கண் எழும் கருத்தைக் கரவாது எமக்கறிவித் துத் திருத்தியும் ஊக்கியும் உண்மை அறிவு விளக்கத்திற்குப் பணி புரியும் துறையில் வேண்டிய உதவியளிக்க வேண்டுகின்றோம்.

ஆய்வகம்
உறையூர்

இங்ஙனம்
ஆசிரியர் இறையனார்

# தமிழகம்

மொழி, இலக்கியம், இலக்கணம், கலை, அறிவியல், முதலான துறைகளில் பணியாற்றித் தமிழின் தனிப்பெருஞ் சிறப்பை விளக்குவதே தமிழகத்தின் நோக்கமாகும்.

## வெளிவரும் ஆராய்ச்சி நூல்கள்

### உலக முதன்மொழி - தமிழ்

தமிழ் மொழியே உலக முதன்மொழி என்னும் உண்மையை நிலநூல், வானநூல், இயல்நூல், உயிர்நூல் இவைகளைக்கொண்டு விஞ்ஞான முறைப்படி ஆராய்ந்து விளக்கும் நூல்.

விலை ரூ. 1—0—0

### தமிழே உலகத் தாய்மொழி

உலக முதன் மொழியாகிய தமிழைத் தாய்மொழியாகக் கொண்டே—தமிழிலிருந்தே உலகில் உண்டான மற்ற மொழிகள் தோன்றின என்னும் உண்மையை உலக வரலாற்று ஆராய்ச்சி, மொழியாராய்ச்சி, நிலவியல் ஒலியியல் ஆராய்ச்சிகளைக்கொண்டு விளக்கும் நூல். விலை ரூ. 2—0—0

### தமிழ் இயற்கை அறிவியல் மொழி

[Natural and Scientific Language]

தமிழ்மொழி, ஐம்பூத வியற்கையுடன் தொடர்புடையதாகவும், பூதவிரிவியல்கள் சேர்க்கைகள் மாற்றங்கள் முதலான விஞ்ஞான முறைகளுக்கும் ஒலியியற்கை முறைகளுக்கும் பொருத்தமாகப் பொருள்தரும் இயல்புடையதாகவும் அமைந்துள்ளதென்பதை விஞ்ஞான ஒற்றுமை காட்டி விளக்கும் நூல். விலை ரூ. 2—0—0

### மொழிப்பொருட் காரண விளக்கம்

இன்ன சொல்லுக்கு இன்ன பொருள், இன்ன பொருளுக்கு இன்னசொல் என்ற முறை எப்படி வந்தது? என்ற வினவிற்கு விடை இதுவரையில் இல்லை. **மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்று** என்று தொல்காப்பியரே சொல்லிவிட்டார். சொற்கள்—மொழிகள் யாவும் ஏதாவதொரு காரணத்தைக்கொண்டே அமைந்துள்ளன வென்பதையும், இன்னசொல் இன்னின்ன காரணங்

களால் இன்னின்ன பொருள்களைத் தரும் என்பதையும் மொழியியல், ஒலியியல், உளப்பண்பியல், விஞ்ஞானவியல்களைக் கொண்டு விளக்கும் நூல்.

விலை ரூ. 2—0—0

## சொல்லாக்க விளக்கம்

தமிழ்ச் சொற்கள் முதலில் இயற்கையோடமைந்தும் பின் இயற்கையையும் அறிவியலையும் கொண்டாக்கப்பட்டும் வழங்கி வந்துள்ளன வென்பதையும், இனி வேண்டிய எல்லாவிதமான புதுச் சொற்களையும் மொழிபெயர்ப்புச் சொற்களையும் இயற்கைக்கும் அறிவியலுக்கும் விஞ்ஞானத்திற்கும் பொருந்த எப்படி ஆக்கி அமைத்துக்கொள்ள வேண்டுமென்பதையும் விளக்கும் நூல்.

விலை ரூ. 2—0—0

## தமிழ் மொழிநூல்

தமிழ் மொழியின் தன்மை, தொன்மை, செம்மை, மேன்மைகளைப் பற்றியும, தமிழ் தோன்றி வளர்ந்து பிரிந்து பெருகிக் கிளைத்துப் பல மொழிகளான வழிகளைப் பற்றியும், தமிழ் மொழி பொருள்தரு முறைகளைப் பற்றியும், இலக்கிய இலக்கண அமைப்பைப் பற்றியும், தமிழ்மொழி உலகிலே சிறந்த உயர்தனிச் செம்மொழி என்ற உண்மையைப் பற்றியும், விளக்கும நூல்.

விலை ரூ. 3—0—0

## தமிழின் இயற்கையுண்மை இலக்கணம்

தமிழ் மொழியின் இயற்கை அமைவும் அதற்கேற்ற இலக்கண அமைவும் எழுத்து, சொல், சொற்பொருள் முதலானவற்றின் அமைவும் இத்தன்மையன வென்பதையும், இப்போதுள்ள இலக்கணங்களில் காணப்படும் மாறுபாடுகளின்னவை என்பதையும், இனி அமையவேண்டிய இயல்புகளையும் இனிது ஆராய்ந்து தமிழின் இயற்கை யுண்மைக்கேற்ப எழுதப்பெற்ற இலக்கண நூல்.

விலை ரூ. 5—0—0

## திருக்குறள்
## விஞ்ஞான ஆராய்ச்சி உரையும் விளக்கமும்

தமிழ் மரபிற்குரிய தனிப்பண்பாட்டறிவினால் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர், அறிவுக்குப் பொருந்தாத ஆரியக் கொள்கைகளை இடையிடையே திணித்தும்

அவற்றிற்கேற்ப மூலத்தையே திருத்தியும் குறளின் பெருமைக்கே குழி பறித்துள்ளார். இதைத் தழுவியே இன்னும் பல உரைகள் வெளிவருகின்றன.

இங்ஙனம் திணித்தவைகளையும் திருத்தியவைகளையும் எடுத்துக்காட்டி அகற்றியும், இவ்விடங்களுக்குப் பொருத்தமான உரையும் பாடமும் இவைதாம் எனக் குறளினின்றே அகச் சான்றுகள் காட்டி அமைத்தும், தமிழ் மரபிற்குரிய தனிப் பண்பாட்டறிவுக்கும் வள்ளுவர் உள்ளத்திற்கும், கொள்கைக்கும் பகுத்தறிவு விஞ்ஞான அறிவுக்கும் மெய்யறிவியல் முறைக்கும் பொருந்தும் வகையில் நன்கு ஆராய்ந்து எளிய நடையில் தெளிவான உரை எழுதப் பெற்றுள்ளது. கருத்தும் பொருத்தமும் விளங்கும்படி விரிவான விளக்கமும் அளிக்கப்பெற்றுள்ளது. விலை ரூ. 10—0—0

## சாகாக்கலை - மரணமிலாப் பெருவாழ்வு

உயிர்களின் முன்னேற்றப் படிகளில் மாண்புடைய மக்கட் படிவத்தில் அறிவு வளர்ந்து விளங்குவதற்குரிய மனித உடம்பினை எடுத்தோம்; வாழ விரும்புகின்றோம். ஆனால் வாழ்வு நிறைவுறாமல் சாகின்றோம்—மடிகின்றோம். உயிர் முன்னேற்ற முறையில் மனித உடம்பிற்கு மடிவுதான் முடிவா? சாவினின்றும் நீங்கி மரணமிலாமல் வாழ வழியுண்டா? அவ்வழி எது? சமய மத வேத சாத்திரங்களாலும் சடங்குகள் மலிந்த கடவுள் வழி பாடுகளாலும் அரை குறை விஞ்ஞானத்தினாலும் அடைய முடியுமா? இதற்குரிய சாகாத கல்வி — சாகாக்கலை எது? இவ்வுடல் உயிருடன் மரணமிலாத தெய்வ வாழ்வில் வாழ்வதற்கு சிறந்த அறிவும் நிறைந்த விஞ்ஞானமும் காட்டும் நெறிமுறைகள் எவை? என்பவைகளை மெய்யறிவுக்கும் விஞ்ஞானத்திற்கும் பொருத்தமான முறையில் விளக்கும் நூல். ரூ. 10—0—0

## வள்ளுவர் கொள்கையும் வடவர் கொள்கையும்

ஆரிய நூல்களைத் தழுவியே திருக்குறள் ஆக்கப்பட்ட தென் போர் கூற்றை மறுத்து, வடவர்களின் ஆரியக் கொள்கைகளுக்கு வள்ளுவர் கொள்கைகள் முற்றும் மாறுபட்டனவென்பதை வேதம் மனுநூல் விதிகளையும் திருக்குறள் விதிகளையும் எடுத்துக்காட்டி விளக்கும் நூல். இதில் வள்ளுவர் யார்? வடவர் யார்? கொள்கைகளினால் வேற்றுமையான தெங்ஙனம்? ஒற்றுமையாவ தெங்ஙனம்? இவைகள் நன்கு ஆராயப்பட்டுள்ளன. விலை ரூ. 1—0—0

# திருக்குறள் ஆராய்ச்சி

பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ?—பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ?

உலகில் பலவகையான பொருள்கள் நிறைந்துள்ளன. அவை, இயற்கைப் பொருள்கள், செயற்கைப் பொருள்கள், தனிப் பொருள்கள், கூட்டுப் பொருள்கள், நுண் பொருள்கள், பருப் பொருள்கள், காணப்படும் பொருள்கள், காணப்படாத பொருள்கள், உயிர் இல்லாப் பொருள்கள், உயிர் உள்ள பொருள்கள் எனப் பல வகைப் படுவனவாம். இவற்றில் மக்களாகிய நாம் உயிர் உள்ள பொருள்களின் இனத்தைச் சார்ந்தவர்கள். எனவே நாம் உயிரினம் எனப்படுவோம்.

உயிர் உள்ள பொருள்கள் பலகோடிக் கணக்கில் பல நூருயிர வகையில் காணப்பட்டாலும், உயிர்நூல் உடல்நூல் அறிவுநூல் அறிஞர்கள், அவற்றின் உடலின் அமைப்பு, உணர்வின் இயல்பு, அறியுமாற்றல், முன்னேற்ற முறை முதலான வகைகளைக்கொண்டு பலவகையாகப் பகுத்துள்ளார்கள்.

உயிர்கள் தமக்கெனத் தனி உடல்கள் பெறுத நிலையில் நுண்ணிய அணுத்தன்மையில் ஐம்பெரும் பூதப் பொருள்களில் கலந்தும், அலைந்தும், அமைதற்குரிய இடங்களில் அமைந்தும் கிடந்தன. இங்ஙனம் கல்லிலும் மண்ணிலும் மற்றவைகளிலும் உணர்வு வெளிப்படா உறக்க நிலையில் அமைந்து கிடந்த உயிர் அணுக்கள், இயற்கை மாறுதல்களால் எழுச்சிபெற்று இணைந்து இயைந்து அசையும் உயிர் அணுக்களாயின.

அவை, இயற்கைப் பொருள்களின் இயைபால் (ஐம் பூதக் கூட்டுறவால்) ஏற்ற பருவத்தில் பலவகையான உடல்களை அடைந்து வளர்ந்தன. இங்ஙனம் உயிர்கள் இயற்கையின் துணைகொண்டு உடல்பெற்றகால முதல் படிப்படியாக உணர்ந்தும், அறிவு வளர்ந்தும், உயர்ந்தும் அவற்றிற்கேற்பப் பலவகை உடல்களெடுத்தும் முன் னேற்றமடைந்து வந்துள்ளன. இனியும் இதைவிட முன்னேற்ற மடைந்து அறிவு நிறைவான நிலையை அடைய இருக்கின்றன - அடையப்போகின்றன.

இங்ஙனம் உயிர்கள் பலவகையான உடல்கள் எடுத் துப் பிறந்த பிறவிகளில் மனித உடலெடுத்துப் பிறந் துள்ள மக்கட் பிறப்பே மிக்க சிறப்புடைய பிறப்பாகும். அடைதற்கரிய அறிவையடைந்து. செய்வதற்கரிய செய லைப் புரிந்து, எய்தற்கரிய இன்பத்தை எய்துவதற்கு ஏது வாய் இப்பிறவி அமைந்துள்ளது. இம்மக்கட் பிறப்பின் மாண்பினை உணர்ந்து, நல்லதன் நலனும் தீயதன் தீமை யும் நன்கு தெரிந்து, தவிர்வன தவிர்ந்து, புரிவன புரிந்து, வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து, பேரா இயற்கையாகிய இணையிலாப் பேரின்பம் பெறுவதற்குப் பெருந்துணை புரிவது அறிவேயாகும். இத்தகைய அறிவை நமக் களிக்க வல்லது-வளர்க்க வல்லது அறிவுடைய பெரியோர் களின் உரைகளும் உரைகளடங்கிய அறிவு நூல்களுமே யாகும். இன்று இவ்வுலகில் பலமொழிகளிலும் உள்ள நூல்களில் ஒப்புயர்வற்றுச் சிறந்து ஒளிர்வதும், மக்கள் அகத்தில் அறிவெனும் விளக்கைப் பொருத்திப் பொலி யும் வண்ணம் செய்வதும் உலகப் பொதுநூலாகிய திருக்குறள் ஒன்றே ஆகும். ஆதலால் மக்கட் பிறப்பின் சிறப்புக்குத் திருக்குறள் புரியும் பெருந்துணையையும், அத் திருக்குறளின் தனிச் சிறப்பையும்பற்றி ஆராய் வோம்.

# மக்கட் பிறப்பும் வாழ்வின் சிறப்பும்

அறிவும் அன்பும் வளர்ச்சி அடைவதற்காக உயிர்கள் பெற்றுயர்ந்து வரும் பல பிறவிகளில் மக்கட் பிறவியே சாலச் சிறந்தது என்று கூறக் காரணம் என்ன? இதன் இயல்பு எத்தகையது? இவற்றை ஆராய்வோம். இம் மக்கட் பிறவி, வாழ்க்கையை வகைப்படுத்தி அமைத்து, வளமும் நலமும் கண்டு, இன்புற்று வாழும் இயல்பினையுடையதாய் அமைந்துள்ளது; துன்பங்களின் இயல்புகளையும் அவை தோன்றும் வகைகளையும் அறியும் ஆற்றலுடையது; அவற்றை அகற்றி வாழ்வு முழுதும் இன்பமாகவே இலங்க வேண்டுமென்றெண்ணும் இயல்புடையது; இதற்கு ஏற்ற பெருமுயற்சிகளைச் செய்ய வல்லது; இன்ப துன்ப உணர்ச்சிகள் தமக்குள்ளன போலவே மற்றவர்களுக்கும் உண்டென உணரும் உணர்வினை யுடையது. ஆதலால், மற்றவர் நலனையும் மதித்து வாழும் மன நலமுடையது. அதற்கேற்ற முறைகளையும் நெறிகளையும் வாழ்வில் வகுத்துக்கொண்டு நடக்கும் குணமும் கொள்கையும் உடையது. இதனால் எல்லாரும் இன்புற்று வாழும் இயல்புடைய ஒரு பெருநெறியைக்கண்டு அதன்வழி அனைவரும் நின்று எல்லாருடைய நலத்திற்காகவும் எல்லாரும் வாழ வேண்டும் என்ற பொதுநல நோக்கமும் உடையது. இதற்குமேல் தன்னலத்தை விட்டுக்கொடுத்தாவது பிறர் நலத்திற்காக வாழ வேண்டுமென்ற பெரு நோக்கத்தையும் அதற்குரிய அருட்பெருங் குணங்களையும் கொண்டு, பிறர் நலத்திற்காகவே வாழும் பெருமைபெற்று விளங்குவது.

## பெருவாழ்வு

மேலும், இது பல பிறவிகளில் படிப்படியாக வளர்ச்சி பெற்று பண்படைந்து வந்த அறிவும் அன்பும் அருள்

முயற்சியால் குறைவு நீங்கி, நிறைவுற்றோங்கி, பேரறிவும் பேரன்பும் நிறைந்து, பேராற்றலுடன் விளங்க வேண்டு மென்ற பேரார்வத்தையுமுடையது. மேற்கண்ட பேரறிவும், பேரன்பும், பேராற்றல்களும் பெற்ருல் உடல், உயிர், உள்ளம், குணம் முதலானவைகளில் இயற்கையாக அமைந்துள்ள குற்றம் குறைகள் எல்லாம் நீங்கப் பெற்று, பூரண இன்பநிலையை யடைந்து பொலியலா மென்னுந் தெளிவினையுடையது. இவைகளை அன்புநெறி நின்று அருளொழுக்கம் பூண்டு நடப்பதால் அடையும் பேரருட் பெருந்திறத்தைக் கொண்டு பெறலாமென்ற உறுதியினையுமுடையது. ஆதலால், அன்பு நெறியில் ஆர்வம் வளர்ந்து, அயர்விலா ஊக்கமிகுந்து, அருள் ஒழுக்கமே நிறைந்து, அருள் உணர்வு உயர்ந்து உயர்ந்து, விரைந்து விரைந்து நிறைந்து, அருட் பூரண நிலையினை யடைந்து எதிர்பார்த்திருந்த இலக்கு (குறிக்கோள்) ஆகிய பேரின்ப வாழ்வை—பிணி, பசி, அச்சம், மரணம் முதலான எல்லாத் துன்பங்களும் நீங்கிய பூரண இன்பமயமான * "மரணமிலாப் பெரு வாழ்வை" ப் பெற்று வாழும் இயல்பினையும் உடையது. இத்தகைய மனமும் உணர்வும் அறிவும் ஆற்றலும் வாய்ப்பும் இம்மக்கட் பிறவிக்கே சிறப்பாக அமைந்து விளங்குவதால் மக்கட் பிறவியே மாண்புடைய பிறவியாகும்.

---

* **மரணமிலாப் பெரு வாழ்வு** :—இவ்வுலகில் இவ்வுடல் உயிரோடு இருந்துகொண்டே உடலுயிர் வாழ்க்கைக்குப் புறத்தில் இடையூருகிய ஐம்பூத வியற்கை மாறுபாடுகளால் உண்டாகும் தாக்குதல்களையும், அகத்தில் இடையூருகிய கருவி கரண குற்றங்களையும் வென்று, இவற்ருல் உண்டாகும் பிணி மரணம் முதலான எல்லாவிதத் துன்பங்களையும் நீக்கி, மற்ற மக்களை விட மேலான நிலையில் நிலைத்துவாழும் பூரண இன்ப மயமான வாழ்வே **மரணமிலாப் பெரு வாழ்வாகும்.** ஐம்பூத வியற்கையின் மாறுபாடுகளால் விளையும் இடையூறுகளையும் அகக்கருவிகரண

# வாழ்விற்குரிய இரு பொருள்கள்

பெருஞ்சிறப்பும் பெறுதற்கரிய பெருவாழ்வைப் பெற்று வாழும் வாய்ப்பும் உடைய மக்கட் பிறப்பிற் பிறந்தவர்கள் உடல் உயிர் வளர்ச்சிபெற்று உலகில் சிறந்து வாழ்ந்து, நிறைந்த பயனைப் பெற்று இன்பமடைவதற்கு, இயற்கையும் செயற்கையுமாகிய எல்லாப் பொருள்களின் உதவியும் இன்றியமையாதனவாகும். எனினும், எல்லாவற்றிலும் மிக மிக இன்றியமையாதவை இரண்டேயாகும்.

---

குற்றங்களையும் வென்று இவற்றின் குற்றங்களால் அழியும் உடம்பையும் உயிரையும் அழியாத நிலைமையில் வளர்த்து வைத்துக் கொள்வதற்குரிய கல்வி-கலை ஒன்றுள்ளது. அதுவே **சாகாத கல்வி - சாகாக் கலை** ஆகும். அதனால் மேற்கண்ட **மரண மிலாப் பெரு வாழ்வை** அடையலாம். இதன் முழு விவரமும் "**சாகாக் கலை அல்லது மரணமிலாப் பெரு வாழ்வு**" என்னும் பெரு நூலில் காண்க. திருக்குறளில் இறையருட்சார்பு, (கடவுள் வாழ்த்து) தவம், மெய்யுணர்தல் முதலிய அதிகாரங்களிலும் இடையிடையில் மரணமிலாப் பெருவாழ்வின் தன்மை விள்க்கப் பெற்றுள்ளன.

மக்கள் உலக வாழ்வில் இருந்துகொண்டே மரணமிலாப் பெரு வாழ்வு பெறுதற்குரிய பெருநெறியை வள்ளுவர் தம் குறளில் வகுத்துரைத்துள்ளார். இதை மெய்யுணர்வாளர்கள் உணர்ந்தும், எடுத்து உரைத்தும் இருக்கின்றார்கள். இதன் உண்மையை உணராத உரையாசிரியர்களால் அதை விளக்க வியலவில்லை. ஆதலால் மறைந்து (புதைந்து) கிடக்கின்றது. பரிமேலழகர் போன்ற போலியுரைகாரர்கள் அதைப் புதைக்கவே வழிதேடிவிட்டார்கள். இதனால் திருக்குறளின் பெருமையை வெளிப்படுத்தவே திருக்குறள் விஞ்ஞான ஆராய்ச்சி உரையும் விளக்கமும் எழுதப் பெற்றுள்ளது. அதில் இதன் உண்மைகளை விளங்கக் காணலாம்.

உயிர்தங்கி வளர்வதற்குரிய இடனுய் அமைந்துள்ள உடல், பிறந்தது முதல் பருவங்களுக்கேற்ப முறையே படிப்படியாய் வளர்ச்சியடைந்து வாழ்வதற்கு உறுதுணையாக அமைந்துள்ளது உணவு. உடலையும் உடலில் அகத்தும் புறத்தும் அமைந்துள்ள கருவி கரணங்களையும் இயக்கும் உயிர், பல நிலைகளிலும் வளர்ச்சியடைந்து, நிறை வெய்துவதற்குப் பெருந்துணையாக அமைந்துள்ளது உணர்வு (அறிவு). எனவே உடலும் உயிரும் வளர்ச்சியடைய உணவும், உணர்வும் ஆகிய இரு பொருள்களுமே முதல் துணையாக இருக்கின்றன.

## உடலும் உணவும்

உள்ளே கொள்ளக் கூடியவை உணவாம். வாய், மூக்கு, உடல் (தோல் புழைகள்) இவற்றின் மூலமாக உட்கொள்ளக் கூடியவை யாவும் உணவே ஆகும். இம் முறையில் ஆகாயம், காற்று, ஒளி இம்மூன்றும் இயற்கையாகவே எல்லார்க்கும் கிடைக்கும் உணவுப் பொருள்களாம். இயற்கையாக உள்ள ஆகாயத்திலும், புடைபெயர்ந்தியங்கும் காற்றிலும், கதிர், மதி, தீ இவற்றின் ஒளியிலும் உயிர் வாழ்வதற்குரிய உணவுப் பொருள்கள் நிறைந்திருப்பதாகவும், அவற்றைப் பிரித்து உட்கொள்ளும் முறை தெரிந்து உட்கொண்டால் வேறு உணவு இல்லாமலே உயிர் வாழலாமென்றும் முற்கால மெய்யறிஞர்களும் யோகிகளும் மொழிந்துள்ளார்கள். இக்கால விஞ்ஞானிகளும்கூட இயம்புகின்றுர்கள். இந்த முறை தெரியாமையால் இவற்ருல் சிறு பயனே பெறுகின்ருேம். இவற்றைப் பயன்படுத்தும் முறைகளைத் தமிழ்ச் சித்தர் நூல்களில் தெரிந்துகொள்ளலாம். நீர்ப்பொருள் உணவும், பருப்பொருள் உணவும் இயற்கையாகவும் செயற்கை முறையிலும் கிடைக்கக்கூடியவை.

உடல் அமைப்பில் இயற்கையாக அமைந்துள்ள எழுவகைத் தாதுக்களும் தனித்தனி வளர்ச்சியடைந்து வழுவின்றி விளங்க, அவைகளுக்கேற்ற எழுவகைச் சத்துக்கள் நிறைந்துள்ள உணவுப் பொருள்களை, பாலப் பருவமுதலான எழுவகைப் பருவங்களுக்கும் அறுவகைப் பருவ காலங்களுக்கும் உரிய முறையில், ஏற்ற வகையில் உட்கொள்ள வேண்டும். இதனால்தான் பலவகை சத்துக்களும் நிறைந்த பலவகையான உணவுப் பொருள் களைக் காலம் பருவம் உணர்ந்து உண்ண வேண்டு மென்று உடற்கூற்று நூல் அறிஞர்களும், மருத்துவ நூல், காயகற்ப நூல் அறிஞர்களும் உரைக்கின்றார்கள்.

மேற்கண்ட உணவு வகைகளும், நிலத்தின் பகுதி களாகிய கண்டங்கள், நாடுகள் இவற்றின் தட்ப வெப்ப நிலைகட்கும், நீர்வள நிலவள இயற்கைக்கும், இவற்றிற் கேற்ப உண்டாகும் விளை பொருள்களுக்கும் உரிய முறையில் ஆங்காங்கு வாழும் மக்களுக்கும் பலவிதமாக அமைந்துள்ளன. எனவே இடம், இயற்கைநிலை, பருவம் இவற்றிற்கேற்ப உணவும் பலவகைப்படுமென உணர்ந் தோம். ஆயினும் எல்லா நாட்டினர்க்கும் பாலர் முதல் முதியோர் வரையில் உள்ள எல்லாப் பருவத்தினர்க்கும் எல்லா நிலைமைக்கும் பொருத்தமான உணவு ஒன்று உள்ளதா என்றால், அறிஞர்கள் ஆராய்ச்சியால் அறிந்துகொண்ட உணவு ஒன்றுள்ளது. அது பாலுணவே யாகும்.

## பாலுணவின் பண்பு

பாலில் எல்லாவிதமான சத்துப் பொருள்களும் நிறைந்திருக்கின்றன வென்றும், பால் ஒன்றையே உட் கொண்டு உயிர் வாழலாமென்றும் உணவுப் பொருள் ஆராய்ச்சியாளர்கள் உறுதியாக உணர்கின்றார்கள்.

குழந்தைகள் பிறந்ததும் முதலில் தாய்ப் பாலேயோ அது கிடையாதபோது பசு முதலானவற்றின் பாலேயோ உண்டுதான் வளர்கின்றன. இதனுலேயே பாலர் - பாலகர் என்ற பெயரையும் பெறுகின்றன. பாலப் பருவம் நீங்கி, பலவித உணவுகளை உண்டு உடல் வளரும் மற்றப் பருவங்களிலும்கூட உடல் வளர்ச்சிக்கு வேண்டிய சத்துக்கள் உடலில் குறைந்திருந்தால் அவற்றை நிறைவாக்கவும், வளர்ச்சியும், வலுவும், வனப்பும் அதிகமாக வேண்டுமென விரும்பினுல் அவற்றைப் பெறவும் பாலுணவைச் சேர்த்துக்கொள்வது இயற்கையாகவும் மருத்துவ நூல் உடல் நூல் அறிவிற்குப் பொருத்தமாகவும் இருக்கின்றது.

உணவு கொள்ள முடியாது நோயுற்ற காலங்களிலும், உணவை விலக்கி இருக்கும் நோன்பு காலங்களிலும், உணவே இறங்காத முதுமைப் பருவத்திலும் உடலுக்கு வேண்டிய சத்துக் குறையாதிருக்கப் பலவகை உணவுப் பொருள்களுக்கும் பதிலாகப் பாலேயே உட்கொள்ளும் வழக்கம் இருக்கின்றது. அறுவகைச் சுவைகளுடன் கூடிய பலவகை உணவுகளால் உடல் நலம் அறிவு நலங்களுக்கு ஊறு நேருமென உணர்ந்து அவற்றை விலக்கிய யோகிகள், சித்தர்கள், அறிவர்கள் யாவரும் பாலேமட்டும் பருகித் தங்கள் சாதனேகளேத் தடையின்றி முடிக்கின்றுர்கள். இங்ஙனம் எல்லாச் சத்துக்களும் நிறைந்துள்ள பாலுணவு, பலவகைப்பட்ட மக்களின் உடல் வளர்ச்சிக்கும் உதவி செய்கின்றது. இத்தகைய பால், அதுவும் நல்ல முறையில் வளர்த்துப் பாதுகாக்கப் பட்ட நல்லாவின் பால் எல்லா உணவை விடவும் எல்லார்க்கும் பயன் தரும் ஏற்ற உணவாக அமைந்து இருக்கின்றது. இதனுல்தான் "பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ" என்றுர்.

தட்பநிலை மிகுந்த சில நாடுகளில் உள்ளவர்கள் பாலை அப்படியே உட்கொள்ளாவிட்டாலும் கட்டியாக்கியும், பின் பொடியாக்கியும், பலவித பொருள்களோடு சேர்த்துக் கலப்புணவாக்கியும் உணவாகப் பயன் படுத்து கின்றார்கள்.

## உயிர்க்கு உணவு உணர்வு

உடல் வளர்ச்சிக்கு உணவு உதவியாய் அமைந்துள்ளது போலவே, உயிர் படிப்படியாக வளர்ந்து உயர் நிலையடைந்து நிறை வெய்துவதற்கும் உணர்வு உதவியாக அமைந்துள்ளது. உயிர், உணர்வு வெளிப்படாத உறக்க நிலையிலிருந்து ஓரறிவு முதல் ஆறறிவு பெறும் வரை வளர்ச்சியடைவதற்கு உணர்வுதான் முதற்காரணமாக இருந்தது. இதற்கு மேலும் ஏழாவதாகிய பேரறிவு - மெய்யறிவு பெற்று, நிறைவினை யடைவதற்கும் இவ்வுணர்வுதான் பெருந்துணை புரியக்கூடியதாயிருக்கின்றது.

## உணர்வும் அறிவும்

உணர்வும் அறிவும் ஒன்றெனக் கூறப்பட்டாலும் நிலையில் பாகுபாடு உடையனவாம். ஒன்றைப்பற்றிய அறிவு உண்டாகுமுன் உட்கரணங்களில் – உள் நரம்புகளில் உண்டாகும் அக நிகழ்ச்சியே உணர்வாகும். இது ஒன்றைப்பற்றி அறிவதற்கு முன் உள்ள நிலை அல்லது முன் உள்ள பெயர் என்னலாம். இவ்வுணர்வின் மூலமாகவே அறிவு விரிவாகும்; பெருகும். உணர்ந்துதான் அறிய வேண்டும். உணர்வு இல்லாதவர்க்கு—உணரும் நுட்பமில்லாதவர்க்கு அறிவு வளர்ச்சியும், அறிவு விளக்கமும் உண்டாகா. உணர்வில்லையேல் அறிவுமில்லை. உள்ளமென்னும் நிலத்தில் தோன்றும் உணர்வென்னும் முளையில்தான் அறிவென்னும் விளைவு உண்டாகும்.

இதனால்தான் அறிவென்ற சொல்லுக்குப் பதில் உணர்வென்று உரைக்கப்பட்டது.

## உணர்வின் விரிவே உயர்ந்த அறிவு

நாம் எடுத்த ஒவ்வொரு பிறவியிலும் உணர்வு விரிவடைந்ததன் பயனாக அறிவும் உயர்ந்து இப்போது ஆறு அறிவுடைய மக்கட் பிறப்பைப் பெற்றுள்ளோம். இப்பிறவியிலும் நுணுகி உணரும் நுண்ணுணர்வின் விரிவினால் அஃகியகன்ற அறிவையும் பெறலாம். இதனினும் மேலாகிய மெய்யுணர்வின் பெருக்கத்தால் எல்லாம் அறியும் பேரறிவையும் பெறலாம். மெய்யுணர்வுப் பெருக்கத்தின் மேல் நிலையையே தெய்வ உணர்வு-விளக்கவுணர்வு என்று சொல்வார்கள். இவ்வுணர்வினால் உண்டாகும் அறிவுதான் எல்லாமறியும் பேராற்றலுடையதாய் விளங்கும். இது எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருளின் மெய்த்தன்மை காணும் இயல்புடையது; பொய்யி னீங்கிய மெய்யினை உணரும் மேன்மையுடையது; எல்லாம் செய்யும் வன்மையுடையது. மெய்யறிவென்றும், தெய்வ அறிவென்றும் மேலாகச் சிறப்பித்துக் கூறப்படுவதும் இதுவே. இத்தகைய மெய் அறிவை—தெய்வ அறிவை—வினையினீங்கி விளங்கும் பேரறிவைப் பெறுவதே மக்கட் பிறப்பில் பெறுதற்கரிய பெரும் பயனாகும்.

இங்ஙனம் மெய்யுணர்வைப் பெருக்கி மெய்யறிவைப் பெறாதவர்கள் பெற்ற மக்கட் பிறவி பயனற்றதாகி விடும். அவர்கள் மக்கட் பிறவி எடுத்திருந்தபோதிலும் மெய்யறிவைப் பெறவியலாத விலங்குகளுடன் சேர்த்து மாக்களாக எண்ணப்படுவார்கள்.

ஆசிரியரும், "ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே—மெய்யுணர்வில்லா தவர்க்கு" என்றும்

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல், கற்ருேரோடு ஏனையவர்" என்றும் கூறுகின்ருர்.

மெய்யுணர்வில்லாதவர்க்குப் பிறவியால் பயனில்லையென்றும், மெய்யறிவு விளங்கும் நூல்களைக் கற்றவர்க்கும் மற்றவர்க்கும் வேறுபாடு உண்டென்றும் கூறுவதைக் காண்க. அறிவை விளக்கும் நூல்களைக் கற்று அறிவு விளக்கம் அடையாதவர்கள் மக்கட் பிறவியிலிருந்தாலும் விலங்கனையராவர் என விளக்குகின்ருர்.

## வாழ்வும் அறிவும்

மெய்யுணரும் உணர்வுடையவர்கள் தம் வாழ்க்கையின் பல துறைகளில் பலவிதமான சூழ்நிலை நிகழ்ச்சிகளில் அகக் கருவிகளாகிய மன முதலியனவும் புறக் கருவிகளாகிய உறுப்புக்களும் ஈடுபடுவதால் உண்டாகும் செயல்களையும் அவற்ருல் விளையும் பயன்களையும் நன்கு உணர்ந்திருந்தனர். இங்ஙனம் உணர்ந்த நுண்மாண் நுழை புலனுடையோர் செய்யத்தக்கன இவை எனவும் செய்யத் தகாதன இவையெனவும் அறிந்திருந்தார்கள். ஆதலால், செய்வன செய்தும் தவிர்வன தவிர்ந்தும் வாழும் வகையினையும், அதனுல் அடையும் நலங்களையும், செய்யத் தக்கவைகளைச் செய்யாமையாலும், செய்யத் தகாதவைகளைச் செய்வதாலும் வாழ்க்கையில் உண்டாகும் கேட்டினையும் தமது அஃகியகன்ற அறிவால் அறிந்து தெளிந்தார்கள். இங்ஙனம் தெளிந்த அறிஞர்கள் வாழ்க்கையில் மற்ற மக்களும் இவ்வுண்மைகளை உணர்ந்து பின்பற்றி நடந்து பெரும்பயனடைய வேண்டுமென்ற பெருங் கருணையால் மற்றவர்களுக்கும் எடுத்துரைத்தார்கள்; நூல்களின் மூலமும் வெளியிட்டுள்ளார்கள்.

## உழைப்பும் பயனும்

உழவர்களின் உழைப்பினுல் விளையும் உணவுப் பொருள்கள், உணவுண்டு உயிர் வாழ்வோர் அனைவர்க்கும் வாழ்க்கையில் முதன்மையான உதவியாயிருப்பது போலவே உணர்வாளர் உழைப்பினுல் விளையும் அறிவுப் பொருளும் அறிவில் உயர்ந்து விளக்கமடைந்து, அதன் பயனை அடைய விரும்பும் அனைவர்க்கும் பேருதவி புரிகின்றது. விஞ்ஞானிகளும் மற்ற ஆராய்ச்சியாளர்களும் பன்னெடு நாட்களாக—ஏன் தங்கள் வாழ்நாள் முழுவதுமே உழந்து ஆராய்ந்த உழைப்பின் பயனுகக் கண்டு பிடித்த கருவிகள், பொறிகள் முதலியனவும் வாழ்க்கையில் பயன்படுத்தக் கருதி முயலும் மக்களனைவர்க்கும் பயன்படுகின்றன. அதுபோலவே உணர்வாளர் பன்னுள் நுகர்வில் கண்ட அறிவும், அதனைக்கொண்டு பயன்காண விரும்பி முயலும் அனைவர்க்கும் பயன்படுகின்றது.

ஒரு பொறியைப் (பொருளை) புதிதாய்த் தாமே ஆய்ந்து முயன்று செய்து முடித்துக் கையாண்டு பயன் பெறுவதைவிடவும் பிறர் அத்துறையில் பலநாள் உழைத்து முறை தெரிந்து செய்து முடித்த பொறியை (பொருளை)ப் பயன் படுத்திஞல் எளிதில் பயனை அடையலாமன்றே? அங்ஙனமே மக்கள் தம் வாழ்வில் பல செயல்களின் இயல்பறியாதும் பயன் உணராதும் புரிந்து, தீய பயன் வருங்கால் வருந்தி, வாணுளை வீணுளாக்கிப் பின் தன் அறியாமையை உணர்ந்து, உய்யும்வழி தெரிந்து நடந்துகொள்வதைவிட, அறிவுடையோர் வாழ்வில் அறிந்துரைத்த அறிவைப் பயன்படுத்தி இனிய வாழ்க்கையை நடத்தி இன்பமடையலாமன்றே!

## அறிவு நூல்

அறிவுடைய பெருமக்கள், மற்ற மக்களின் நன்மைக்காகத் தாம் அறிந்த அறிவை எடுத்து உரைப்பது அறி

வுரை என்றும், பிற்காலத்து மக்களுக்கும் பயன்படும் வண்ணம் எழுதிவைப்பது அறிவு நூல் என்றும் சொல்லப்படும். அறிவுரை எவர்க்காக உரைக்கப்படுகின்றதோ அவர்கள் உள்ளத்தின் – உணர்ச்சியின் தகுதிக்குத் தகுந்ததாக அமைந்து இருக்கும். ஆனால், பிற்கால மக்களுக்கு நூலாக எழுதிவைக்கும்போது, பல நிலைகளில் உள்ள மக்களின் தகுதிக்குத் தகுந்ததாகவும் எவ்வகையிலும் எல்லார்க்கும் எக்காலத்தும் பயன்படக் கூடியதாகவும் இருக்கும் வகையில் இயற்றியமைப்பார்கள். ஆதலால் அறிவு நூல் என்றால் மக்கள் அனைவர்க்கும் பயன்படும் நூல் எனவே அறிய வேண்டும். சிலர்க்குப் பயன்படும், சிலர்க்குப் பயன்படாதென்று எண்ணலாகாது. ஏனெனில் அறிவு என்பது மக்களனைவரும் அடையவேண்டிய அரும் பொருளன்றோ? இனி அறிவு நூல் மக்களுக்கு எவ்வாறு நன்மை செய்கின்றதென்பதை ஆராய்வோம்.

## நூலின் இயல்பு

பஞ்சினால் நூற்கப்படுவதற்கும், அறிவினால் ஆக்கப்படுவதற்கும் நூல் என்ற பெயர் வழங்கி வருகின்றது. பஞ்சினால் ஆன நூல் மரத்தின் கோணலை நீக்கி நேராக்கி செம்மைப்படுத்தி நல்ல வேலைகளுக்கு உதவும்படி செய்கின்றது. மேலும் உடுக்கும் உடையாகி மானங்காத்து மக்கள் நாகரிக வாழ்வில் வாழவும் உதவி புரிகின்றது.

அறிஞர்களால் ஆக்கப்பட்ட நூல் மக்களுடைய மனத்தின் கோணலை நீக்கி, தீமைகளைப் போக்கிப் பண்பட்ட நற்குணங்களை உண்டாக்கி மானத்துடன் நாகரிக வாழ்வில் வாழத் துணை செய்கின்றது,

“உரத்தின் வளம்பெருக்கி உள்ளியதீமைப்
புரத்தின் வள முருக்கிப்பொல்லா—மரத்தின்

கனக்கோட்டம் தீர்க்கும்நூல் அஃதேபோல் மாந்தர்,
மனக்கோட்டம் தீர்க்கும்நூல் மாண்பு."

என்பதால் இதனை அறியலாம்.

எனவே நூல் என்றால் மக்களுடைய மனத்தை நல் வழிப்படுத்தி நல்லொழுக்கத்திற் செலுத்தி நன்மைகளைப் புரியவும், அதன் பயனாய் நன்மைகளைப் பெறவும் துணை செய்வது எனப் பொருள்படும். ஆதலால் நூல் என்ற சொல் ஒழுங்கு, சட்டம், திட்டம், விதி, முறை, நெறி என்ற பொருள்களிலும் வழங்கப்படும்.

## உள்ளமும் உணர்ச்சியும்

அறிஞர்கள் அருளிய அறிவு நூல் மக்களின் மனத்தைப் பண்படுத்துமென மேற்கண்ட பாடலால் அறிந்தோம். மக்கள் நல்வாழ்க்கைக்கு மனப்பண்பாடே அடிப்படையானதென்பதை இனி ஆராய்வோம். உயர்ந்த அறிவு பெறுவதற்கு முதற்காரணமாகவுள்ளது உணர்வு என்று மேலே பலவகைகளில் ஆராய்ந்தோம். அந்த உணர்வு தோன்றுவதற்கு நிலைக்களனாக உள்ளது உள்ளமேயாகும். உள்ளத்திற்கு அகம், நெஞ்சம், மனம் என்ற பல பெயர்களும் உண்டு.

உணர்வு (உள்+நர்+வு) உள்ளத்தை இடமாகக் கொண்டு உண்டாவது உணர்வு அல்லது உணர்ச்சி ஆகும். அது தொழிற்படுவதே உணர்தல் எனப்படும். எனவே, மனத்தினால் உண்டாவது உணர்வு; மனத்தின் எழுச்சியே உணர்ச்சி. இதனால், "மனத்தானும் மாந்தர்க் குணர்ச்சி" என்றார் ஆசிரியர்.

உணர்வு, உதித்து வளர்ந்து பெருகித் தெளிந்து அறிவாகி உயர்ந்து நிறைந்து விளக்கமுறுவதற்கும், ஆக்கம் பெறுவதற்கும் மனமே அடிப்படையாக உளது.

ஆதலால் உள்ளம் (மனம்) பண்பட்டு வளர்ந்து செம்மையடைந்தால் உணர்வும் அறிவும் செம்மையான முறையில் வளர்ந்து நிறைவெய்தும்.

## மனமும் வாழ்வும்

மனம் செம்மையானால் வாழ்வும் செம்மையாகும். மனத்தினால் மனிதன் வாழ்கின்றான். 'மனம்போல வாழ்வு' என்பது மறுக்கவொண்ணாத உண்மையாகும். மனித உயிர்களுக்கு மனமே எல்லாவித ஆக்கங்களையும் அளிப்பதாகும். மனனே மனிதனுடைய மதிப்பை உரைக்கும் மாத்திரைக்கல்; உணர்வே உளத்தின் உண்மையை விளக்கும் உரையாணியின் உரை; அறிவே மனிதன் உயர்வை அளக்கும் அளவுகோல். அறிவினால் மனிதனுய் உயர்ந்தான்; அறிவினால் பண்பட்டு உயர்கின்றான்; அறிவினால் இதைவிட உயர்ந்தநிலையை—இறைமைத் தன்மையை (தெய்வத்தன்மையை) எய்துவான். அறிவு உயர உயர அனைத்தும் உயரும்; அறிவு அழிய அழிய அனைத்தும் அழியும். இத்தகைய அறிவு செம்மையான உள்ளத்தின் வழியே வளரும். ஆதலால், மக்கள் உயர்வுக்கும் தாழ்வுக்கும் மனத்தின் செம்மையும் புன்மையுமே காரணமாகும். செம்மையுறாத (பண்படாத) தீய மனத்தில் உதிக்கும் தீயஉணர்ச்சிகள் தீய செயல்களில் செலுத்தித் தீமைகளையே பயக்கும்.

செயற்கரிய செயல்களைச் செய்து பெறற்கரிய பேறுகளைப் பெறுவதற்கு உறுதுணையாக உள்ளது செம்மையான மனமே ஆகும். இதனை உணர்ந்தே

"மனமது செம்மையானால் மந்திரம் செபிக்கவேண்டாம்
மனமது செம்மையானால் வாசியை நிறுத்தவேண்டாம்
மனமது செம்மையானால் வாயுவை உயர்த்தவேண்டாம்
மனமது செம்மையானால் மற்றதும் செம்மையாமே"

என மனநல உண்மையுணர்ந்த அறிஞர்கள் கூறி இருக்கின்றார்கள். செம்மை பெற்ற மனத்தினால் நன்மைகள் பலவும் செய்யலாம்; நன்மைகள் பலவும் எய்தலாம். இது கருதியே "மனநலம் மன்னுயிர்க் காக்கம்" என்று உள்ளத்தின் தன்மையுணர்ந்த வள்ளுவப் பெருந்தகையார் உரைத்தனர்.

## மனிதன்

மனிதன் (மன்+இதன்) (மன்+இதம்=மனிதம்) மன் - மனம், இதம் - நன்மை, இதன் - நன்மையுடையவன், நன்மை செய்பவன்; எனவே மனநலம் (நன்மை) உடையவனே மனிதன்; மனத்தால் நன்மையை நினைப்பவனே மனிதன்; மற்ற உயிர்களுக்கு நன்மைசெய்ய வேண்டுமென்ற நன்மனமுடையவனே மனிதன் ஆவான்.

"விலங்குத் தன்மையினின்றும் மனிதத்தன்மையையுண்டாக்குவது நல்லமனமே. மாக்களிலிருந்து மக்களைப் பிரித்துக் காட்டுவதும் நல்லமனமே. விலங்குத்தன்மை குறைந்து, கொடுமனம் நீங்கி நன்மனம் வாய்க்கப்பெற்றவர்கள்தாம் மக்களாவார்கள்; மற்றவர் மாக்களேயாவர்.

## மாக்களும் மக்களும்

மா - விலங்கு, மா+கள்=மாக்கள்—விலங்குகள். "ம" என்பது மா என்பதின் நீண்ட தன்மை குறைந்தது (நெடில் குறுகி குறிலானது) ம+கள்=மக்கள். மக்கள் என்பதற்கு, விலங்குத் தன்மை (கொடுமைகள்) குறைந்து நலம் நிறைந்த மனமுடையவர்கள் என்பது பொருளாம். மாக்கள், மக்கள் என்ற சொற்களில் அமைந்துள்ள வேறுபாடே இதன் தெளிவான பொருளை விளக்குகின்றது. இங்ஙனம் பொருள் விளக்குவது தமிழ் மொழிக்குரிய தனிப் பெருமையாகும்.

மன நலமுடையவர்கள் மனிதர்கள்; மனிதப் பண்பு பெற்றவர்கள் மக்கள். மனிதப் பிறவியிற் பிறந்திருந்தாலும் மனிதப் பண்பு இல்லாதவர்களை விலங்குகளுக்குச் சமமாகவைத்து மாக்கள் எனக் கூறுவது தமிழ் மரபாகும். ஆதலால், மக்கள் என்ற சொல்லுக்கு மனிதர்கள் என்ற பொருளும், மாக்கள் என்ற சொல்லுக்கு விலங்குகள்-விலங்குத்தன்மையுடைய மனிதர்கள் என்ற பொருளும் கொள்வதுதான் முறையாகும். இதற்குச் சில சான்றுகள் காட்டுவோம்.

"மாவும் மாக்களும் ஐயறிவினவே"
"மக்கள் தாமே ஆறறிவுயிரே"
(தொ. பொ. ம. 32-33)

என்பவற்றில் மாக்கள் வேறு மக்கள் வேறு எனக் கூறப்படுதல் காண்க. மக்கட் பிறவியில் மன்நலப் பண்பற்றவர்களையும், இழிதகைமை யுடையவர்களையும் மாக்கள் என்று கூறுவதே மரபு என்பதற்கு வள்ளுவர் வாய்மொழியையும் காட்டுவோம்

"கொலை வினையராகிய மாக்கள்" என்பதில் விலங்குகளுக்குரிய கொலைத் தொழிலைச் செய்பவர்களை மாக்கள் என்றும் "செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்" என்பதில் மனிதப்பண்பிற்குரிய கேள்வியின் சுவை உணராது வாயினல் உண்ணும் சுவையை மட்டும் அறிந்துண்ணுவோரை மாக்கள் என்றும் கூறுகின்றூர்.

"உறுப் பொத்தல் மக்கட் பண்பன்று வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு"

என்பதில் மக்களைப்போல் உறுப்புக்கள் ஒத்திருப்பதனுல் மாத்திரம் மக்களாக மாட்டார்கள், மக்கட் பண்பும்



2

ஒத்திருக்க வேண்டுமென்று கூறுகின்றார். ஆதலால் மன நலம்பெற்று விளங்குபவர்களே மக்களாவர்கள்.

இங்ஙனம் மனநலம் பெற்று வாழ்வதற்கு மக்களின் மனத்தைப் பண்படுத்தவே பண்பட்ட மனமுடைய பெரியோர்கள் அறிவு நூல்களை அருளிச்செய்துள்ளார்கள். அந்த அறிவு நூல்களைக்கண்டு கைக்கொண்டு நடக்க வேண்டியது மக்களின் கடமையாகும்.

அலகுசால் கற்பின் அறிவுநூல் கல்லாது
உலகநூல் ஓதுவதெல்லாம்—கலகல
கூஉந் துணையல்லால் கொண்டு தடுமாற்றம்
போஒந் துணையறிவா ரில்

என்றபடி அறிவுநூல் கல்லாது உலகில் உள்ள பலநூல்களைக் கற்பதால் பயன் இல்லை.

## உலக நூல்கள்

உலகில் பலநாடுகளில் உள்ள மக்களுக்கும், அவ்வந்நாட்டு தட்ப வெப்பத்திற் கேற்ப உணவு பலவகையாக அமைந்திருப்பதையொப்ப மனப்பண்புகளும் விருப்பங்களும் குறிக்கோள்களும் பலவாறு அமைந்திருக்கும். இவற்றிற்கேற்ப ஒழுக்கங்களும் வாழ்க்கை முறைகளும் அமைந்திருக்கும். காலம் செல்லச் செல்ல, வாழ்க்கை முறை வளர வளர, உணர்வும் அறிவும் உயர உயர, அவ்வக்காலத்திலிருந்த அறிஞர்கள் வாழ்க்கைக்குரிய சட்ட திட்டங்களையும் குறிக்கோள்களையும் அவரவர்கள் அறிவு விளக்கத்திற்கேற்ப வகுத்து நூல்களாக அமைத்தார்கள்.

இங்ஙனம், இடம் காலம் இவைகட்கேற்பவும், அறிவுநிலைக் கேற்பவும் அவ்வப்போது வகுக்கப்பட்ட முறைகளே—சட்டதிட்டங்களே நூல்களாக அமைந்து, அவ்வம்மக்களால் பின்பற்றப்பட்டு, அவரவர்களுக்குரிய

மதநூல்களாகவும் வாழ்க்கை நூல்களாகவும் மதிக்கப் பட்டு வந்துள்ளன. அவைகளே வேதங்கள், போதனை கள், சாத்திரங்கள் என்ற பெயர்களில் மக்களால் போற்றப்பட்டும் வந்துள்ளன.

## தன்னல நூல்கள்

இங்ஙனம் நூல் செய்தவர்களிற் பலர் தன்னலம் காரணமாகக் குறுகிய நோக்கம் கொண்டவர்களாய், தம் நாட்டவர், தம் இனத்தவர்களுக்குமட்டும் நலந்தரு முறை யில் நூல்களியற்றி, இது "கடவுள் வாக்கு—பெரியோர் வாக்கு" எனக் கூறியும், மற்ற மக்களைக் கடவுள்பேரா லும் பெரியோர்பேராலும் மயக்கி ஏமாற்றியும், வயிறு வளர்த்து உயிர் வாழவும், தன் இனத்தவர் தனிச்சலுகை பெறவும் வழிதேடிக் கொண்டார்கள்.

இங்ஙனம் அறிவு நிரம்பா முறையிலும், இன்னது தான் செந்நெறியெனத் தெளியாவகையிலும் எழுதப் பட்ட நூல்கள் உலகில் பல உள்ளன. இவற்றில் ஒரு நாட்டு மக்களுக்கு, அதிலும் ஒரு இனத்தார் ஒரு சமயத் தார்க்கு உரிய நூல்கள் யாவும் வேறுநாடு, வேறு இனம், வேறு சமயத்தில் உள்ளவர்களுக்கும் இவற்றிற் கெல்லாம் பொதுவாக நின்று பொது நோக்கோடு பார்ப் பவர்களுக்கும் பொருத்தமற்றவைகளாகவும் மாறுபாடு கள் நிறைந்தனவாகவும் காணப்படுகின்றன. ஆகையால் இவைகளில் ஒரு நூலாவது எல்லாரும் ஒத்துக்கொள்ளக் கூடிய நிலையில் இல்லையென்றே சொல்லிவிடலாம். ஆத லால் இவைகள் நூலெனக் நுவலும் தகுதியுடையனவல்ல வென்பதும் அறிஞர் துணிபாகும்.

இவற்றால் மக்களுக்குள் பழக்கவழக்க ஒழுக்க முரண் பாடுகளும், கொள்கை மாறுபாடுகளும் ஏற்படுகின்றன. ஒரு சாரார் தம் நூல்களைக் காட்டி மற்றவர்களை

ஏமாற்றிப் பிழைக்கவும், தமக்கடிமைகளாக்கித் தாழ்த்த வும் வழி செய்து கொண்டார்கள். இதனால், மக்கள் மன ஒற்றுமைகெட்டு வேற்றுமைமேலிட்டு ஒரு குழுவின ரோடு மறு குழுவினர் மாறுபட்டுப் பெரும் போரிட்டுக் கொள்ளுகின்றனர். ஆகையால் வாழ்வின் உயர்வுக்கு அடிப்படையாக அமைய வேண்டிய அன்பும் ஒற்றுமை யுணர்வும் கெட்டு அறிவு விளக்கமும் தடைபட்டுப் பல இன்னல்கள் விளைகின்றன. "ஒன்றே இனமும் ஒருவனே இறைவனும் நன்றே நினைமின்" என்ற தமிழறிஞர்களின் பொன்மொழிகள் புறக்கணிக்கப் படுகின்றன. பொது வாழ்வின் அமைதி குலைகின்றது.

## பொது நூல்

உலகில் பலவகைப்பட்ட மக்களுக்கும் பொதுவாகப் பாலுணவு பயன்படுவதுபோலவே, பலவகைக் கொள்கை களையும் உடைய பல நாட்டு மக்களுக்கும், பொதுவான நல்லொழுக்க நெறிகளையும், வாழ்க்கை முறைகளையும் வகுத்துக் கூறக்கூடிய பொதுநூலும் உலகில் ஒன்று உள்ளதா என்றால் உள்ளது. அதுதான் தமிழ்மொழி யில் முப்பால் நிறைந்து ஒப்புயர்வற்று விளங்கும் திருக்குறள் என்னும் பெருநூலாகும்.

ஒரு காலத்தில் ஓரிடத்தில் தோன்றிய—ஓர் அறிஞ ரால் செய்யப்பட்ட நூல், பின் ஒரு காலத்தில் வேறிடத் தில் உள்ள மற்றவர்களுக்கும் உண்மை அறிவிற்கும் பொருந்தாமல் பயனற்று அழிந்துபோவதைப்போல் அன்றித் திருக்குறள் காலம், இடம், இனம், சமயம் என்ற கட்டுப்பாடுகளைக் கடந்து எக்காலத்திற்கும் எந்நாட் டவர்க்கும், எச்சமயத்தவர்க்கும், எவ்வினத்தவர்க்கும், மெய்யறிவிற்கும் பொருத்தமான முறையில் அமைந் துள்ளது. பொதுவாக மக்கள் உள்ளம் பண்படைந்து

உணர்வு மிகுந்து ஒழுக்கம் நிறைந்து உயிர்க்குணம் சிறந்து அறிவு விளக்கமடைந்து சிறந்த வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்ந்து இன்பமடைவதற்கு வழிகாட்டியாகவும் உயிர் வளர்ச்சிக்கு உணவளிக்கும் அறிவு நூலாகவும் விளங்குகின்றது. இதனுல் தான் "பாரில் உள்ள நூலெல்லாம் வள்ளுவர் செய் நூலாமோ" என்று கூறப்பட்டுள்ளது.

## புகழுக்குரியது

உலகில் பல மொழிகளில் பல காலங்களில் பல அறிஞர்களால் பலநூல்கள் இயற்றப் பட்டிருந்தபோதிலும், நூலுக்குரிய நல்லிலக்கணங்களெல்லாம் நிறைந்தமைந்ததும், சாதி, மத, சமய, வருண, ஆசிரம பேதங்களையும் தேச, நிற, நிலை வேற்றுமைகளையும் கடந்ததும், பொதுவாக மக்களினத்திற்கு எக்காலத்திற்கும் பொருத்தமான பொது நெறிகளைக் கூறக்கூடியதும் ஆகிய பொதுநூல் திருக்குறள் ஒன்றேயாகும். இது உலகில் உள்ள அறிவு நூல்களனைத்திலும் உயர்ந்து சிறந்து விளங்குகின்றது என்பதை உலக அறிஞர்கள் பலரும் ஒப்புக்கொண்டு போற்றிப் புகழ்ந்துள்ளார்கள்.

இங்ஙனம் உலகம் போற்றும் ஒப்புயர்வற்ற ஒரு நூல் எம்மொழியில் உள்ளது, என்ருல் உயர் தனிச் செம் மொழியாகிய எங்கள் செந்தமிழ் மொழியில்தான் உள்ளது என்று மார்தட்டித் தோள்கொட்டி மனமகிழ்ந்து, தலைநிமிர்ந்து உரைக்கும் பெருமை தமிழ் மக்களுக்கே உரியது. ஆதலால், தமிழ்ப் பெருங்குடி மக்கள் இத் திருக்குறள் செல்வத்தால் உலகம் போற்றும் பெரும் புகழ்க்குரியவர்களாய் இன்று விளங்குகின்ருர்கள். இனியும் விளங்குவார்கள் என்பதிலும் ஐயமில்லை.

# திருக்குறளின் பெருமை

திருக்குறளின் பெருமையை, புகழை எமது ஒரு வாயால் உரைக்கவும், எளிய கையால் எழுதவும் இயலா. ஏற்ற சொற்களும் எளிதில் அமையா. திருக்குறளில் செறிந்து, நிறைந்து, பொருந்தியுள்ள சொல் வளம், பொருள் வளம், செப்பு முறை, வைப்பு முறை, தொகுத்தும் வகுத்தும் தொடர்பு படுத்தியும் அமைத்துள்ள அமைப்பு, உடன்பாட்டிலும் எதிர்மறையிலும், இன்மொழியிலும் வன்மொழியிலும், வழிமொழிந்தும் வலியுறுத்தியும், இடித்துக்காட்டியும், எடுத்துக்காட்டியும், கூறும் கூற்றுகள் முதலானவற்றின் பண்புகளைப் பல முறையும் படித்து, உள்ளத்தால் உணர்ந்து, உணர்ச்சியால் அறிந்து, அறிவால் மதித்து, மதிப்பின் பெருமையால் மகிழ்ந்து, மகிழ்வால் அகம் நெகிழ்ந்து, ஆர்வ மலர்ந்து, அன்பு கனிந்து விளைந்த விளைவாம் இன்பத்தை இனிது நுகரும்போதுதான் திருக்குறளின் தனிப்பெருமை தெளிவாக விளங்குமேயல்லாது, மொழிவதாலும் எழுதுவதாலும் அதன்பெருமை முழுதும் உரைக்கவோ, வரைந்தறிவிக்கவோ இயலாதென்பது எளியேன் கண்ட தெளிவாகும். எனினும் தெரிந்த சில சொற்களால் கூறுமவிருக்கவும் மனம் இடங்கொடுக்கவில்லை.

திருக்குறள், உயிர்களின் உணவு; உள்ளத்தின் உணர்வு; உணர்ச்சியின் ஊற்று; அறிவின் கருவூலம்; (களஞ்சியம்), அன்பின் அமளி; அருளின் தெளிவு; அகத்தின் விளக்கு; அறத்தின் பிறப்பிடம்; ஆற்றலின் தோற்றம்; இன்பத்தின் இருக்கை; ஊக்கத்தின் சேர்க்கை; செந்நெறி செறிவிடம்; ஒழுக்கம் உறைவிடம்; வாழ்க்கையின் விளக்கு; உண்மையின் உறையுள்; பண்பின் பயிலிடம்; உலகின் ஒரு நெறி; மக்களின் ஆக்கம்; மானிடர் வாழ்வு; மானத்தின் வரம்பு; பிறர்நலப் பிறப்பிடம்;

தன்னலம் தகர்விடம்; துறவின் நிறைவு; பொருளின் புதையல்; பொறையின் பொற்பு; வீரத்தின் நேர்மை; மறத்தின் மாண்பு; நாட்டின் நாட்டம்; காதலின் கனிவு; ஈகையின் இன்பம்; கடமையின் காட்சி; முயற்சியின் முகப்பு; ஊழின் பகைவாள்; கூற்றுக்கு மாற்றான்; தமிழின் அமிழ்தம்; தென்மொழிச் செல்வம்; திராவிடர் தேட்டம்; தமிழர்கள் சட்டம்; சிறப்பின் சிகரம்; கலைகளின் நிலைக்களன்; சாகாக் கல்வியின் அடிப்படை; மரணமிலாப் பெருவாழ்வின் வழி. இன்னும் எந்தெந்த வகையில் உயர்த்திச் சொன்னாலும் எல்லாம் பொருந்தும். இன்னும் எவ்வெவ்விதமாகக் கூற விருப்பமோ அவ்வவ்விதமாகக் கூறி அகமகிழ அன்பர்களுக்கு உரிமையுண்டு. ஆதலால் விடுத்தனம்.

## ஆசிரியர் யார்?

உலக முதன்மக்களாகத் தோன்றி உயர்ந்த நிலையில் வாழ்ந்த பண்டைத் தமிழ் மரபினரின் உள்ளத்தில், உணர்ச்சியில், அறிவில், இயற்கை எழுச்சியுடன் எழுந்து சொல், பொருள், செயல், பயன்களில் இயற்கையோடு பொருந்திய தொடர்புடையதாயும், ஒப்புயர்வற்ற செப்பமுடையதாயும் விளங்குவது தமிழ் மொழியாகும். இந்த அமிழ்தினுமினிய தமிழ் மொழியாகிய அளப்பருங் கடலிலிருந்து திருக்குறட்பா என்னும் பெரும் பொற்கலத்தால் முகந்த அறிவென்னும் புத்தமுதுணவை உலக மக்களின் உயிர்க்குறுதி பயக்குமுறையில் அருளினால் அளித்த கருணை வள்ளலாகிய திருவள்ளுவப் பெருந்தகையாரின் உண்மை வரலாறும், இயற்பெயரும் இன்னதென இன்னும் நமக்குத் தெளிவாக விளங்கவில்லை. எனினும் அப்பெரியார் தமிழ்ப் பெருங்குடியிற் பிறந்தவர்; தமிழ்ப்பெரு மரபிற்கேற்ற குணநலங்களோடு சிறந்து வளர்ந்தவர்;

உலகின் இயற்கை, செயற்கை முதலான எல்லாவற்றின் இயல்புகளையும் அறிந்தவர்; நல்லதன் நலனும் தீயதன் தீமையும் நன்குணர்ந்தவர்; செய்வனவும், தவிர்வனவும் தெரிந்து புரிந்தவர்; வாழ்க்கையில் அநுபவம் பெற்றவர்; தமிழர்க்குரிய தனிப்பெரும் பண்பாட்டறிவுடன் தலை சிறந்த திருக்குறளை யியற்றிய தமிழ்ப் பேரறிஞர் என் பதை எவரும் ஒப்புக் கொள்வர். இது எவராலும், எக்காலத்திலும், எக்காரணத்தாலும், எதிர்க்கவோ மறுக்கவோ மறைக்கவோ இயலாத ஒரு பேருண்மை யாகும். இவரது வாழ்க்கை வரலாறுகளை இவர் அருளிய திருக்குறளின் அகச் சான்றுகளைக்கொண்டே ஆராய்ந்து "வள்ளுவர் தோற்றமும் வாழ்க்கையும்" என்ற நூலில் வெளியிட்டுள்ளோம். அதில் இவரது இயல்புகள், இவர் வாழ்க்கையின் குறிக்கோள், மக்கள் இவரைப் பின்பற்றி வாழ்க்கை நடத்த வேண்டியவகைகள் யாவும் விளக்கப் பட்டுள்ளன. இதுவும் ஒவ்வொருவரும் வாழ்விற்கு வழிகாட்டியாக வைத்துக்கொள்ள வேண்டிய சிறந்த நூலாகும்.

### ஆசிரியர் பெயர்

நூலாசிரியரின் இயற்பெயர் இன்னதெனத் திண்ண மாக விளங்கவில்லை. எனினும் திருவள்ளுவர் என்ற பெயரே பெரும்பாலும் நூல்களில் எடுத்தாளப்பட்டும், உலக வழக்கில் வழங்கப்பட்டும் வருகின்றது. திருக் குறளின் பெருமையை கூறக்கூடிய "திருக்குறளின் சிறப்புப் பாயிரமாகிய திருவள்ளுவமாலை" யில் 55 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. அவை ஒவ்வொன் றும் ஒவ்வொரு புலவரால் இயற்றப்பெற்றவை. பாடலின் தலைப்பில் புலவர் பெயரும் பொறிக்கப்பட்டுள் ளன. அப்பாடல்களில் ஆசிரியர் பெயரை எவ்வாறு எடுத்தாண்டுள்ளார்கள் என்பதை ஆராய்வோம்:

திருவள்ளுவர் என 23, 43 ஆம் பாடல்களிலும், புலவர் திருவள்ளுவர் என 34 ஆம் பாடலிலும் தே என 8-ஆம் பாடலிலும், தெய்வத் திருவள்ளுவர் என 1, 19, 49-ஆம் பாடல்களிலும், தேவர் திருவள்ளுவர் என 41-ஆம் பாடலிலும், தேவிற் சிறந்த திருவள்ளுவர் என 39-ஆம் பாடலிலும், வாலறிவின் வள்ளுவர் என 6-ஆம் பாடலிலும், வள்ளுவர் என 10, 11, 13, 20 24, 30, 31, 32, 33, 35, 36, 42, 46, 52, 53-ஆம் பாடல்களிலும், நாப்புலமை வள்ளுவனர் என 51-ஆம் பாடலிலும், வள்ளுவனர் என 5 9, 12, 14, 15, 17, 25, 27, 29, 37, 38, 40, 43, 44, 47, 48, 50-ஆம் பாடல்களிலும், புலவன் வள்ளுவன் என 3-ஆம் பாடலிலும், வள்ளுவன் என 2, 4, 8, 28-ஆம் பாடல்களிலும், முதற்பாவலர் என 18-ஆம் பாடலிலும், மாதானுபங்கி, செந்நாப்போதார் என 21-ஆம் பாடலிலும், பெருநாவலர் என 22-ஆம் பாடலிலும் எடுத்தாண்டுள்ளார்கள்.

இவற்றில் "வள்ளுவன்" என்ற பெயர் 'அன்' விகுதிக்குப் பதிலாக பெருமை - மரியாதையை உணர்த்தும் 'அர்' என்னும் உயர்வுப் பன்மை விகுதியைப் பின்னல் பெற்றும், 'ஆர்' என்னும் விகுதியைப்பெற்றும், சிறப்பை உணர்த்தும் "திரு" என்னும் அடை மொழியை முன்னல் பெற்றும் வள்ளுவர், வள்ளுவனர், திருவள்ளுவர் என வழங்கிவருகின்றன.

தெய்வம், தேவர், தேவிற் சிறந்த, புலவன், புலவர், என்பவைகள் மிகுந்த உயர்வையும், சிறப்பையும் உணர்த்தும் அடைமொழிகளாய், திரு என்பதற்கு முன் அமையப் பெற்றுள்ளன. எனவே 47 இடங்களில் வள்ளுவன் என்ற பெயரே பலவகைச் சிறப்புக்களுடன் எடுத்தாளப் பட்டிருக்கின்றது. ஆதலால் அந்நாள் முதற்கொண்டே வள்ளுவர் என்ற பெயர் இவர்க்கு வழங்கி வந்துள்ள

தென்பது நன்கு விளங்கும். இதனால் திருவள்ளுவர் என்ற பெயரே பெரும்பாலும் வழங்கும் பெயரெனக் கொள்ள வேண்டும். தே, முதற்பாவலர், மாதானு பங்கி, செந்நாப்போதார், பெருநாவலர் என்ற பெயர்கள் சிறப்பும் காரணமும்பற்றி வழங்கப்பட்டவைகளாம்.

திருக்குறள் உரைகளிலும் மூலபாட நூல்களிலும் திருவள்ளுவரைக் குறிக்கும் பெயர்கள் பதினொன்று காணப்படுகின்றன. அவை: 1. திருவள்ளுவர், 2. தேவர், 3. முதற்பாவலர், 4 மாதானுபங்கி, 5. தெய்வப் புலவர், 6. செந்நாப்போதார், 7. பெருநாவலர், 8. புலவர், 9. பொய்யில் புலவர், 10. நாயனர், 11. நான்முகனர் என்பனவாகும். சில நூல்களில் புலவர் என்ற பெயரை விட்டு 10 எனவும், சில நூல்களில் புலவர், பொய்யில் புலவர் என்ற இரு பெயர்களையும் விட்டு 9 எனவும் கொள்ளப்பட்டுள்ளன.

எந்த நூலிலும் நான்முகனர் என்ற பெயர் தள்ளப் படாமல் கொள்ளப்பட்டுள்ளது. மற்றவைகள் பெரும் பாலும் முன் குறிப்பிட்ட பெயர்களே. பொய்யில் புல வன் என்பது மணிமேகலை ஆசிரியரால் "பொய்யில் புல வன் பொருளுரை தேராய்" என எடுத்தாளப்பட்ட தனுல் இடம் பெற்றது போலும். நாயனர் என்பது, பெருமையிற் சிறந்தவர், தலைவர், மக்களை நல்வழியில் நடத்துபவர் என்ற பொருள்களைத் தந்து நிற்கும் ஓர் சொல்லாகும்.

இனி நான்முகனர் என்ற பெயர் எந்த முறையில் கொள்ளப்பட்டுள்ள தென்பதைச் சிந்திப்போம்.

சிலர், திருவள்ளுவர் சாதாரண மனிதரல்லர் என் றும், பிரமதேவனே (நான்முகன்) தான் முன் வடமொழி யில் செய்த வேதங்களுக்குச் சமமாகத் தென்மொழியில்

(தமிழில்) இத்திருக்குறளை இயற்றினர் என்றும் கூறுவர். இது, ஆராய்ச்சியறிவும் மெய்யறிவும் அற்ற பொய்யர்கள் கூறும் புளுகுரையாகும்.

"நான் மறையின் மெய்ப்பொருளை முப்பொருளாய்
நான்முகத்தோன்-தான் மறைந்து வள்ளுவனுய்த்
தந்துரைத்த-நூல்; 4.

(உக்கிரப் பெருவழுதியார்.)

ஐயாறு நூறு மதிகார மூன்றுமா
மெய்யாய வேதப் பொருள்விளங்கப்-பொய்யாது
தந்தா னுலகிற்குத் தான்வள் ளுவனுகி
அந்தா மரைமேல் அயன் 28.

(காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனுர்)

என்ற இப்பாடல்களின் கருத்தைக்கொண்டு உரைத்தார் எனில், இப்பாடல்களே அறியாக் கருத்தில் அமைந்த பாடல்களாகும். இங்ஙனம் கூறப்படும் கருத்துக்கள் யாவும் மறுக்கத்தக்கனவேயாகும்.

ஏனெனில் நான்முகனுல் கூறப்பட்டதாக ஆரியர்கள் சொல்லிக்கொள்ளும் நான்கு வேதங்களில் என்ன கூறப்பட்டுள்ளன வென்பதை இவர்கள் அறியார்கள்.

'நான்குவேதங்கள் நான்முகனுல் சொல்லப்பட்டவை. அவைதான் உயர்ந்த நூல்கள்' என ஆரியர் சொல்லிக் கொள்வதைக்கேட்டுக் கிளிப்பிள்ளைகள்போல் சொன்னதைச் சொல்லிக்கொண்டு திரிந்தவர்கள். அந்த வழக்கப்படி கருத்தறியாது கக்கி வைத்திருக்கின்றுர்கள்.

நான்கு வேதங்கள், ஆரியர்கள் இந்தியாவில் நுழைந்த காலத்தில் பல ஆரியர்களால் இயற்றிச் சேர்க்கப்பட்டவை. அறிவிற்குப் பொருந்தாத கொள்கைகளையும் செயல் முறைகளையும் கொண்டுள்ளவை. அவை திருக்குறளின் கருத்துக்களுக்குப் பொருத்தமற்றவை—

மாருனவை என்று இன்று ஆராய்ச்சி வல்லவர்கள் அறிந்து கூறியுள்ளார்கள்.

ஆதலால், பிரமன் வள்ளுவராகப் பிறந்து வேதங்களின் கருத்தையே குறளாகக் கூறினுன் என்பது எவ்வகையில் பொருந்தும்? அதனுல் மறுக்கத் தக்கதாம். "செயற்கரிய செய்வர் பெரியார்" என்றபடி மனிதன் மனவன்மை, அறிவு வன்மைகளால் செயற்கருஞ் செயல் செய்யும் திறமையைப் பெற்றுச் செய்தால், இது தெய்வமே வந்து பிறந்து செய்தது என்பது ஆரியர் கொள்கைப்படி கூறப்படுவதாகும். இங்ஙனம் கொண்டால் மனிதனுக்கு அருஞ்செயல் புரியுமாற்றல் இல்லையென்ருகி விடுமன்ருே!

எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியர்
திண்ணிய ராகப் பெறின்.

என்ற குறளின் பொருளுக்கு முரணுக முடியுமன்ருே?

அதனுல், தமிழ் மரபிற்குரிய தனிப் பண்பாட்டறிவுடன் உலகம் போற்றி ஒப்புக்கொள்ளுமுறையில் திருக்குறளைச் செய்த தமிழ்ப் பெருமகனுகிய வள்ளுவரை, அறிவுக்குப் பொருந்தா ஆரிய வேதங்களை உளறியதாகக் கூறப்படும் அறிவற்ற நான்முகனுடைய பிறப்பு (அவதாரம்) எனக் கூறுவதும், வேத சாரங்களைப் பிழிந்து குறளைச் செய்தான் எனக் கூறுவதும், இவற்றை ஒப்புக்கொள்ளுவதும் எவ்வளவு அறியாமை என்பதை இனியேனும் அறிஞர் அறிக. திருக்குறள், வட நூல்களாகிய வேதம் மநு முதலிய நூல்களோடு மாறுபட்டதென்று பிறநாட்டு அறிஞர் கூறுவதை வேறிடத்தில் தந்துள்ளோம். அதையும் பார்த்துணர்க.

இனி, வள்ளுவர் என்பது குடிப் பெயர் என்றும், அலுவற் பெயரென்றும், அறிவு, புலமை இவை காரண

மாக வழங்கும் பட்டப்பெயர் என்றும், அவருடைய பண்பினால் (வள்ளல் தன்மையால்) வந்த பெயரென்றும் பலர் பலவிதமாகப் பகர்வார்கள்.

### நூற் பெயர்

திருவள்ளுவர் இயற்றிய நூல், நால்வகைப் பாக்களில் முதற் பாவாகிய வெண்பா வகைகளில் குறள் வெண்பா என்னும் பாவால் அமைந்துள்ளது. குறள் வெண்பா குறைந்த அடிகளை (இரண்டடிகளை) யுடைய வெண்பா. இரண்டடிகளிலும் குறைந்த – குறுகிய அடிகளையுடைய செய்யுள் இல்லை.

ஆதலால், குறுமை என்னும் பண்பின் பெயர் அப் பண்பினையுடைய பாவிற்குப் பெயராகி குறுமை+அள் =குறள், என்று பண்பு ஆகுபெயராய் நின்றது. பின் மறுமுறையும் குறள் என்னும் பாவின் பெயர் அப்பாக்களால் அமைந்த நூலுக்குப் பெயராய் ஆகி வந்தமையால் குறள் என்பது கருவியாகு பெயர். சிறப்பைக் குறிக்கும் 'திரு' என்னும் அடைமொழி பெற்றுத் திருக்குறள் என நூலை உணர்த்தி நின்றது. இதனை அடை அடுத்த கருவி ஆகு பெயர் என்று சொல்லலாம். இருமுறை மடங்கி ஆகு பெயராய் வந்துள்ளமையால் இருமடி ஆகு பெயர் என்றும் கூறலாம். மேற்கண்ட திருவள்ளுவ மாலையில் நூலின் பெயரை எவ்வாறு எடுத்தாண்டுள்ளார்கள் என்பதையும் ஆராய்வோம்.

திருவள்ளுவமாலைச் செய்யுள் 36-ல் வெண்பா எனவும், செய்யுள் 19-ல் முதற்பா எனவும், செய்யுள் 5, 48ல் வெள்ளைக் குறட்பா எனவும், செய்யுள் 7, 37-ல் வெண் குறள் எனவும், செய்யுள் 6, 32, 38, 39, 40, 45, 51, 52ல், குறள் வெண்பா எனவும், 47ல் குறும்பா எனவும், 43-ல் குறட்பா எனவும், செய்யுள் 14, 16, 33, 44, 49, 54, 55ல்

குறள் எனவும் குறிப்பிட்டுள்ளார்கள். இவைகள் யாவும் பாவின் பண்பைக்கொண்டு பெற்ற பெயர்களேயாம். ஆதலால், திருக்குறள் என்னும் பெயரே இதற்கேற்புடைப் பெயராகும். செய்யுள் 23ல் பொய்யாமொழி எனவும், செய்யுள் 35-ல் வாயுறை வாழ்த்து எனவும் குறிப்பிடுகின்றார்கள். இவை சிறப்புக் காரணமாக வழங்கும் பெயர்களாம். இவைகளைத் தவிர 9, 10, 11, 12, 15, 17, 18, 19 30, 31, 39, 40, 41, 46, 49, 53 ஆம் செய்யுட்களில் முப்பால் என்ற பெயரை எடுத்தாண்டுள்ளனர். இதன் பண்பைப் பின்னர் ஆராய்வோம்.

உரை நூல்களிலும், பிற நூல்களிலும் திருக்குறளுக்கு வழங்கும் பெயர்களும் பதினொன்றாகும். அவை :— 1. திருக்குறள், 2. முப்பானூல், 3. பொய்யா மொழி, 4. வாயுறை வாழ்த்து, 5. உத்தரவேதம், 6. தெய்வ நூல், 7. திருவள்ளுவர், 8. தமிழ்மறை, 9. பொதுமறை, 10. திருவள்ளுவப் பயன், 11. பொருளுரை என்பனவாகும். சில நூல்களில் இவற்றில் "பொருளுரை" என்ற பெயரை விட்டு 10 எனவும், திருவள்ளுவப் பயன் என்ற பெயரையும் விட்டு 9 எனவும் கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில், மணிமேகலையில் ஆசிரியர் சாத்தனார் "பொய்யில் புலவன் பொருளுரை" என்று கூறியுள்ளதால் பொருளுரை என்ற பெயரைக் கொண்டுளார் போலும். புறநானூற்றில் 34-ம் செய்யுளில் "செய்தி கொன்றோர்க்கு உய்தியில்லென அறம் பாடிற்று" என, ஆலங்குடி கிழார் திருக்குறளை அறநூல் என எடுத்தாளுகின்றார். அப்பெயரும் ஏற்றுக்கொள்ளத்தக்கதே. ஆனால் உத்தரவேதம் என்ற பெயர் மட்டும் ஒப்புக்கொள்ளத்தக்க தொன்றன்று. பிரமனால் முன் வடமொழி வேதம் செய்யப்பட்டு, அதன் பின்னர் தமிழில் அவனால் செய்யப்பட்ட வேதம் என்ற பொருளில் கிறப

தால் மறுக்கத்தக்கது. இதற்குக் காரணம் நான்முகனார் என்ற இடத்தில் முன் கூறியுள்ளதேயாகும்.

## முப்பால்

உடல் வளர்ச்சிக்குத் துணைபுரியும் பால் உணவை மூன்று வகையாகப் பகுக்கலாம். அவை தாயின்பால், ஆவின் பால், தாவரப்பால் (சோற்றுப்பால்) என்பனவாம். பயிர், செடி, கொடி, மரம் முதலான தாவர உயிர்களினின்று உண்டாகும் தானியம், பருப்பு, கொட்டை, காய், கனி, கிழங்கு, முதலான உணவுப் பொருள்கள் யாவும் தாவரங்களின்பால் பற்றி முற்றி விளைவதால் உண்டாகக் கூடியவைகளேயாகும். இவைகளை அரைத்துண்டாகும் பால் உடலிற் கலந்து வளர்ச்சியையும், வலுவையும் உண்டாக்குகின்றது. இதுவே நமக்கு நிறைந்த உணவாகவும் அமைந்துள்ளது.

இங்ஙனம் மூன்று வகைப் பால்களும் உடல் வளர்ச்சிக்கு உதவுவது போலவே உயிர் வளர்ச்சிக்குத் திருக்குறளில் அறம், பொருள் இன்பம் என அமைந்துள்ள முப்பால்களும் ஒப்புயர்வற்ற உதவியைப் புரிகின்றன. இந்நுட்ப முணர்ந்த அறிஞர்கள் திருக்குறளுக்கு 'முப்பால்' என்ற சிறப்புப் பெயரைச் சூட்டினர். இங்கு பால் என்ற சொல் பகுப்பு, பிரிவு, வகை என்ற பொருள்களை மட்டும் உணர்த்தி நிற்கவில்லை. இக்கருத்தில் மட்டும் கூறுவதானால், முப்பகுதி, மூவகை, முப்பிரிவு எனக் கொண்டு அறப்பகுதி, பொருட்பகுதி, காமப்பகுதி எனக் கூறியிருப்பார்கள். இங்ஙனம் கொண்டதாகக் கருதியே பிற்கால உரையாசிரியர் ஒருவர் 'அறப்பகுதி' என்னும் தலைப்பு தந்துள்ளார்போலும்.

மேற்கண்ட வண்ணம் உடலுக்கு முப்பால் பயன் அளித்தல்போல அறப் பண்பு, பொருட் பண்பு, இன்பப்

பண்புகளாகிய மூன்று பண்புகளும் பால் போல் சுவையில் பருகுதற் கினிமையும், பண்பில் பழகுதற்கினிமையும், பயனில் நுகர்வதற்கினிமையும் தரும் சிறப்புக்களை உடையனவாய் உயிர்க்கு உறுதி பயத்தலால், முப்பால் என்னும் ஒப்பற்ற சொல்லைக்கொண்டு உரைத்தார்கள் என்றுணர வேண்டும். இங்ஙனம் பால்போல் இனிமைப் பண்பினையுடைய தென்பதை "சிந்தைக் கினிய செவிக் கினிய வாய்க் கினிய" என்று கூறும் கவுணியனூர் கருத்தினால் உய்த்துணர்ந்து கொள்ளவும்.

ஒவ்வொருவரும் மக்கட் பிறப்பிற்கேற்ற செந்நெறி பிறழாது நன் முறையில் வாழ்க்கை நடத்துவதற்கும், ஏனையோர்க்கு இன்னல் இயற்றாது இயன்றவரை இனிமைசெய்து நலம் பெறுவதற்குமுரிய நற் பண்புகளையும், தன்னலங்கருதாது பிறர்நலம் பேணிவாழும் பெரும் பண்பாட்டினையும் அறப்பாலைக் கொண்டு அருத்துகின்றார். இவைகளைக் கொண்டு பயன்கண்டு உய்வதற் கேற்ற அறிவு விளக்கம்பெற மெய்யுணர்வையும் ஊட்டுகின்றார்.

உலகக் கூட்டு வாழ்வு (சமுதாய வாழ்வு) இனிது நடைபெறுவதற் கின்றியமையாத அரசியல், பொருளாக்கம், சமூக வாழ்க்கைமுறை இவைகளைச் செவ்விய நெறியில் அமைத்துக கொள்ளுதற்குரிய அறிவையும், திறனையும், பொருட்பாலைக் கொண்டு புகட்டுகின்றார்.

வாழ்வில் ஆண், பெண், இருபாலவர்க்கும் இயல்பினால் எழும் இன்ப வேட்கையை நிறையழியாத முறையில் நிறைவேற்றிக் கொள்ளும் நெறியினையும், ஒருவர் மற்றவருடைய உளத்தினையும், உயர்குணநலத்தினையும், மனமொத்த அன்பின் அக நிகழ்ச்சியினையும், உரையாலன்றிக் குறிகளால் உணர்ந்து அன்புகூட்ட ஒன்றுபடும் உணர்வினையும், இல்வாழ்க்கையில் இருவர்க்குள்

விளைந்த அன்பின் பிணைப்பினையும், பிரிந்தும் சேர்ந்தும், புலந்தும், கலந்தும், இன்பத்தைப் பெருக்கி வளர்த்து நுகரும் நுண்ணறிவின் தன்மையினையும் இன்பப் பாலைக் கொண்டு அகவுணர்வில் அறிவில் அமைக்கின்றார்.

## ஆசிரியர் காலம்

திருவள்ளுவரது காலம் எது என ஆராய்வதும் முதன்மையானதாகும். ஏனெனில் ஒரு நூலை இயற்றிய ஆசிரியர் எந்தக் காலத்தில் இருந்தவர்; அவர் காலத்தில் மக்கட் குழுவினியல்பு (சமூக வியல்பு), சமய இயல்பு, அரசியல்பு, அறிவியல்பு முதலானவைகள் எந்நிலையில் இருந்தன; அகத்தில் உளநிலையும், புறத்தில் சூழ் நிலையும் எவ்வகையில் அமைந்திருந்தன; நூல் செய்வதற்குரிய ஏது எதுவாயிருக்கலாம் என்பனவெல்லாம் ஆராய்ந்தால் தான், நூலில் கூறும் பொருளின் உண்மையுணர்ந்து பயன் அடையலாம். இவர் இருந்த காலத்தைப் பற்றி இதுவரையில் பல அறிஞர்கள் எழுதியுள்ளவைகளை முதலில் ஈண்டுக் காண்போம்.

"உக்கிரப் பெருவழுதி என்னும் பாண்டியன் மதுரையில் அரசாண்ட காலத்தில் இற்றைக்கு 1850 ஆண்டுகளுக்கு முன் திருவள்ளுவர் இவ்வுத்தரவேதமாஞ் சிறந்த நூலை அரங்கேற்றுவித்தனர்." —வி. கிருஷ்ணமாச்சாரியார்.

"திருக்குறள் நூலானது ஏறக்குறைய 1900 ஆண்டுகளுக்குமுன் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாராற் செய்யப்பெற்று மதுரையிலிருந்த மூன்றுவது தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றப்பெற்ற வோர் செந்தமிழ் நூல்" — மா. வே. நெல்லையப்பப் பிள்ளை (பி. ஏ.)

"திருவள்ளுவர் காலம் கடைச் சங்கத்தார் காலம்; அது, இற்றைக்குச் சற்றேறக் குறைய இரண்டாயிரம் வருடத்துக்கு முன் என்பர்."-V. சடகோபராமாநுசாச்சாரியார்

"திருவள்ளுவர், கடைச்சங்க காலத்திலிருந்தவ ரென்று சிலர் கூறுவர். சிலர் கடைச் சங்கத்திற்கும் சில நூற்றாண்டுகள் முற்பட்டவரென்று கொள்வர். மணி மேகலையில் சீத்தலைச் சாத்தனார், "தெய்வந் தொழாஅள்" என்னுங் குறளைக் காட்டலால், அச்சாத்தனார்க்குச் சில நூற்றாண்டுகளாவது இவர் முற்பட்டவரா யிருத்தல் வேண்டும். சாணக்கியராகிய கௌடில்யரும், அவரது சீடராகிய காமந்தகரும் எழுதிய அருத்த நூற்கருத் துக்கள் திருக்குறளுட் பலவிடங்களிலும் பயிலுதலால் அவர்கள் வாழ்ந்த கி. மு. நான்காம் நூற்றாண்டுகளுக்குப் பின்னும் கடைச் சங்கத்திற்கு முன்னும் இவர் விளங்கிய வராகலாம்.—மு. இராகவையங்கார்.

"சாணக்கியர் தமிழ் நாட்டில் அறியப் பட்டதும் வடநாட்டில் அறியப் படாததுமாகிய பொருள்களைப் பற்றிய நூல்களை இயற்றியமையால் அந்நூல்கள் வட நாட்டில் மிகவும் புகழ் பெற்று விளங்க ஏதுவாயின. சாணக்கியர் செய்துள்ள நூல்களுக்கு ஆதாரம் தமிழி லேயே இருந்திருத்தல் வேண்டுமென்பது வெளிப்படை. அவர் தமிழ் நாட்டினர் என்று அறிகின்றோம். தமிழகத் தில் நூல் வழக்கிலோ செய்யுள் வழக்கிலோ உள்ள வற்றை ஆதாரமாகக் கொண்டு நூல் இயற்றிய திரு வள்ளுவர், சாணக்கியர் என்னும் இருவர் நூல்களிலும் ஒருமைப் பாடு காணப்படுதல் இயல்பே. ஆகவே, வள்ளு வர் சாணக்கியர் நூலிலிருந்து எடுத்து மொழி பெயர்த்துக் கொண்டாரென்று கூறுதல் இயைபுடைத் தாகாது. —யாழ்ப்பாணம் N. S. கந்தையா பிள்ளை.

**குறிப்பு:** இவர் கருத்தால், மேற்கண்ட மு. இராகவையங் கார் கருத்து மறுக்கப் படுவதுடன் தமிழ் வழக்கிலிருந்தே சாணக்கியர் பொருள்நூலை வடவர்க்கேற்ப விரித்துக் கூறினார் என்றும், சாணக்கியர்க்கு முன்னரே வள்ளுவர் நூலில் பொருள்

நூற் கொள்கைகள் கூறப்பட்டிருக்கலாமென்றும் கொள்ள இடமுள்ளது.

"தொல்காப்பியத்திற்குப்பின் ஏற்பட்ட இலக்கியங்களுள் திருக்குறளே முதலாய நூல் என்று கருத இடமுண்டு. முதுகுடுமியின் காலம் கி. மு. நான்காம் நூற்றுண்டாயின், திருவள்ளுவர் காலம் அதற்கு முற்பட்டதாதல் வேண்டும். ஆகவே கி. மு. பன்னிரண்டாம் நூற்றுண்டிற்கும், கி. மு. ஐந்தாம் நூற்றுண்டின் முடிவிற்கும் இடையில் திருவள்ளுவர் நூல் தோன்றியிருத்தல் கூடும். அது, கலித்தொகைமுதலிய நூல்களுக்கு முற்பட்டதென்பது தெளிவு. — கா. சுப்பிரமணிய பிள்ளை எம். ஏ. எம். எல்.

"சங்கப் புலவர் பலராலும் சங்க நூல்களில் எடுத்தாளப்படும் குறள், அவர் தமக்குக் காலத்தால் முந்தியதாதல் ஒருதலை. நமக்குக் கிடைக்கும் சங்க நூல்களெல்லாம் கடைச்சங்கப் புலவராலேயே இயற்றப்பட்டன எனக் கொள்வதற்கும் இல்லை. சில புறப்பாட்டுக்களும், கவிகளும், இடைச் சங்கப் புலவராலேனும் கடைச் சங்கத்திற்கு முற்பட்ட புலவராலேனும் ஆக்கப்பட்டிருக்க வேண்டுமென்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். அவர் நூல்களிலும் குறள் எடுத்தாளப்படுவதால் வள்ளுவர் கடைச் சங்கத் தவருமில்லை; முதலிடை காலத்தவருமில்லை; அச்சங்கத்துக்கு (கடைச் சங்கத்துக்கு) நெடும் பல்யாண்டுகட்கு முன்பிருந்தவராவரென்பது இனிது போதரும்". —ச. சோமசுந்தர பாரதியார், எம். ஏ. பி. எல்.

## தொல்காப்பியர்க்குப் பிற்பட்டவராம்

இதுகாறும் கண்ட முடிபுகளால் ஆசிரியர் காலத்தை இன்றைக்கு 1850 ஆண்டுகளுக்கு முன்பிருந்து 1900,

2000, 2200, 2300, 2400 ஆண்டுகளுக்கு முன் வரையில் கொண்டுபோய் வைத்துள்ளார்கள். எந்த வகையிலும் தொல்காப்பியத்திற்குப் பின் ஏற்பட்ட முதனூல் இது வென்ற முடிவுவரைக்கும் வந்துள்ளார்கள். இவற்றால், கடைச்சங்க காலத்திற்கும் திருவள்ளுவர்க்கும் பொருத்தம் காட்டிக் கூறும் கதைகளும், உருத்திரசன்மன் முன் அரங்கேற்றிய கதையும், சங்கப்பலகை தாங்கிய கதையும், வள்ளுவரால் சங்கமழிந்த கதையும் கட்டுக்கதைகள் என்பதுதான் வெளிப்படையாகும்.

எனவே தொல்காப்பியத்துக்குப் பின் ஏற்பட்டதென்பதும், தொல்காப்பிய இலக்கணத்தைக் கொண்டே திருக்குறள் செய்யப்பட்டதென்பதும் எல்லாருடைய கொள்கையுமாகும். இதற்கும் சில எடுத்துக் காட்டுகள் காட்டுவோம் :

"இப்போதுள்ள தமிழிலக்கியங்களுள் திருக்குறள் முற்பட்டது. தொல்காப்பியமென்னும் தமிழிலுள்ள பேரிலக்கணம் திருக்குறளுக்கு முற்பட்டது. ஆராயுமிடத்து தொல்காப்பியர் கூறிய விதியின்படியே திருவள்ளுவர் தமது குறளை இயற்றியுள்ளார் என்பது விளங்கும்."—தி. த. கனகசுந்தரம் பிள்ளை பி. ஏ.

"தொல்காப்பியத்திற் கூறிய இலக்கணமே இதற்கு இலக்கணமென்று உணர்க" — V. சடகோப ராமாநுஜாசாரியார், சே. கிருஷ்ணமாசாரியார்.

இங்ஙனமே இப்போதுள்ள பல புலவர்களும் கூறியுள்ளார்கள். இவர்கள் கருத்துக்களும் முடிபுகளும் இங்ஙனமாக, திருவள்ளுவர் தொல்காப்பியர் காலத்திற்கு முற்பட்டவர் என்பதே எமது துணிபாகும்.

திருவள்ளுவர் தொல்காப்பியர் காலத்திற்கு முற்பட்டவராக இருத்தல் வேண்டும். பிற்பட்டவராயின்

தொல்காப்பியர் கூறிய இலக்கணத்தைப் புறக்கணித் தொதுக்கி விட்டு நூல் செய்தவராக இருத்தல் வேண் டும்.

## தொல்காப்பியர்க்கு முற்பட்டவர்

இலக்கியங் கண்டதற் கிலக்கிணம் செய்தல்தான் இயல்பும் மரபுமாகும். ஆதலால், தொல்காப்பியர் இலக்கணம் செய்யுமுன் தமிழில் சிதைந்துள்ள தனிப் பாடல்களைத்தவிர உருவான இலக்கியநூல்கள் இருந் திருக்கவேண்டும். அவைகளைக் கண்டுதான் இலக்கணம் செய்திருக்கவேண்டும். தொல்காப்பியர் காலத்தில் பல இலக்கிய நூல்கள் இருந்தன என்றும், ஆனால் அவைகள் பின்னர் இறந்துபட்டன என்றும் கொண்டால், தொல் காப்பியர் இலக்கணம் செய்தற்கு இலக்காக இருந்த இலக்கியங்கள் இறந்துபட நேர்ந்த காலத்தில் தொல் காப்பியம் மட்டும் இறந்துபடாதிருக்கக் காரணமென்ன? தொல்காப்பியர் சாபத்தால் அவர்க்கு ஆசிரியராகிய அகத்தியனார் இயற்றிய அகத்தியம் என்னும் பேரிலக் கணம் அழிந்துவிட்டதாகக் கூறிக்கொள்ளும் கதையைப் போல, முன் உள்ள இலக்கியங்களும் அழிந்துவிட வேண்டுமென தொல்காப்பியர் சாபமிட்டதாகக் கதை இனி முளைக்குமோ என்னவோ அறியோம்.

அன்றியும் தொல்காப்பியரும் அவர் கொள்கை யுடையவர்களும் தமக்குமுன் உள்ள இலக்கிய இலக் கணங்களை எவ்வகையிலாவது அழித்தாலன்றி, தம் நூலில் நுழைத்துள்ள ஆரிய நூற்கொள்கைகளுக்கு ஆதரவும் வளர்ச்சியும் ஏற்படாதெனக் எண்ணி அவை களைத்திரட்டி அழித்துவிட்டுப் பின் சாபத்தால் அழிந்து விட்டதெனச் சொல்லியிருக்கலாமோ எனவும் கருத வேண்டியிருக்கிறது.

திருக்குறள் தொல்காப்பியத்திற்கு முற்பட்டது என்பதற்குரிய ஏதுக்களை ஆராய்வோம். அறம், பொருள், இன்பம் என்ற மூன்றையும் தொல்காப்பியர் இன்பமும் பொருளும் அறனும் என எடுத்துக் கூறுகின்றார். ஏன்? பொருளதிகாரத்தில் இன்பப் பகுதிக் குரியவைகளை அகத்திணையென முதலில் வைத்தும், பொருட் பகுதிக்குரிய அரசியல் முதலானவைகளைப் புறத்திணை எனப் பின்வைத்தும் அமைத்திருப்பதாலும், இவ்விரண்டின் கண்ணும் அறம் செறிந்திருப்பதாலும் இன்பமும் பொருளும் அறனும் என எடுத்துக் கொண்டார்.

காமத்துப் பாலினுட் கண்ட கருத்துக்களைப் பெருக்கிப் பல துறைகளாக்கி அகத்திணையியல் களவியல் கற்பியல் எனப் பகுத்துக்கொண்டு விரிவாகக் கூறுகின்றார். பொருட்பாலிற் கூறும் பொருள்களைப் பெருக்கிப் புறத்திணை என்று பல பிரிவுகளையும் துறைகளையும் உண்டாக்கி இருக்கின்றார். அறத்துப்பாலில் கூறும் மக்கட்குரிய பொதுவான அறவொழுக்கம் அருளொழுக்கங்களை வாகைத்திணை என்பதில் ஆரியக் கொள்கைகளைத் திணித்து வருணத்திற்கேற்றவாறு வேறுபடுத்திக் கூறுகின்றார்.

இங்ஙனம், திருக்குறளில் சுருக்கமாகவுள்ளவைகளைப் பல பிரிவுகளாகவும் துறைகளாகவும் பெருக்கி ஆரியக் கொள்கைகள் பலவற்றை இடையில் செருகித் தொல்காப்பியர் நூல் செய்துள்ளனர் என்பது நுணுகிக் கூர்ந்து ஆராயும் நுண்ணுணர்வுடையோர்க்குத் திண்ணமாய் விளங்கும். தொல்காப்பியத்தில் கூறப்படும் வருணப்பிரிவுகள் தொழிற்பிரிவுகள், துறைப்பிரிவுகள்

திருக்குறளில் இடம் பெறவில்லை. ஆதலால், முற்பட்டதே ஆகும்.

தொல்காப்பியத்திற்குப் பிறகுதான் திருவள்ளுவர் நூலியற்றினர் என ஒருவாறு கொண்டாலும், மேலே கூறியுள்ள அறிஞர்களின் கருத்துப்படியும் கொள்கைப்படியும் தொல்காப்பியத்தை இலக்கணமாகக்கொண்டு அதைத் தழுவியே திருக்குறளை இயற்றினர் என்பது ஒருகாலும் ஒருவிதத்தும் பொருந்தாது. திருவள்ளுவர் தொல்காப்பியருடைய அறிவிற்குப் பொருந்தாத கருத்துக்களைப் புறக்கணித்து ஒதுக்கித் தள்ளிவிட்டே திருக்குறளைத் தமிழர் பண்பாட்டிற்குரிய தூயமுறையில் இயற்றியுள்ளார் என்றே கருதவேண்டும். இதைப்பற்றி விரிவாக ஆராய இங்கு இடம் போதாதாயினும் சுருக்கி விளக்குவோம்.

## சாதி பேதமும் தொழில்களின் பிரிவுகளும்

நால்வகைச் சாதிப் பிரிவுகளும் அவர்களுள்ளும் மேலோர், கீழோர், அடியோர் (அடிமை புரிவோர்) வினைவலர் (ஏவியதைச் செய்வோர்) முதலான பல பிரிவுகளும் அவரவர்க்குரிய தொழில்களும் அடையாளங்களும் ஆரிய நூல் முறைப்படியே தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளன. அவைகளைக் கீழே காட்டுவோம்.

"உயர்ந்தோர்க்குரிய ஓத்தினான"—தொல்காப்பியம்
பொருளதிகாரம் சூத்திரம் 33.

"ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன" —23

"மேலோர் முறைமை நால்வர்க்குமுரித்தே" —31

"உயர்ந்தோர் பொருள்வயின் ஒழுக்கத்தான" —36

"அடியோர் பாங்கினும் வினைவலர்பாங்கினும்" —25

"மேலோர்மூவர்க்கும் புணர்த்தகரணம்
கீழோர்க்காகிய காலமுமுண்டே" —142

இவற்றால் நால்வகைச் சாதிகளும் அவற்றில் உயர்ந்தோர், தாழ்ந்தோர், மேலோர், கீழோர் என்ற பிரிவுகளும் அடிமை செய்வோர், ஏவல் செய்வோர் என்ற பகுப்புக்களும் கூறப்படுவதும், ஓதலும் தூது செல்லுதலும் உயர்ந்தவர்களுக்கே உரிய தொழில்கள் எனத் தொழிலை வருணத்திற்கு உரியதாக்குதலும் அறிந்து கொள்ளவேண்டும்.

"அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபின் அரசர் பக்கமும்
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்
நாலிரு வழக்கில் தாபதப் பக்கமும்" —74

என்பதால், வேதம் ஓதல், ஓதுவித்தல், வேள்வி செய்தல், செய்வித்தல், தானம் கொடுப்பதை வாங்குதல், தாமே ஏற்றல் – இரத்தல் இவை ஆறும் பார்ப்பனர் தொழில்களென்றும் கூறுகின்றார். இதை "ஓதலே ஓதுவித்தல் உடன் வேட்டல் வேட்பித்திட்டல் ஈதலை வாங்கல் ஏற்றல் ஏற்கும் அந்தணர் தொழிற்பேர்" என்பதனால் அறியவும். முறையே அரசர்க்கும் வைசிகர்க்கும் உரிய தொழில்களையும் நாலாம் வருணத்தவராகிய சூத்திரர்க்கு (வேளாண் மாந்தர்) உரிய தொழில்களையும் தனித்தனியே பிரித்துக் கூறுகின்றார். அவற்றில் பசுக்காத்தல் பொருள் ஆக்கல், பயிரிடல், வேதம் மனுநூல் நீங்க மற்ற புராணங்களை ஓதுதல், தாம் ஈட்டிய-ஆக்கிய பொருள்களை மேல் வருணத்தார்களுக்குக் கொடுத்தல், மேல் வருணத் தவர்க்கு அடிமை வேலை செய்தல் இவையாறும் நாலாம் வருணத்தவர்க்குரிய தொழில்களாம்.

"நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங் காலை அந்தணர்க் குரிய" —611

"அந்தணாளர்க்கு அரசு வரைவின்றே" —625

"வைசிகன் பெறுமே வணிக வாழ்க்கை" —618

"வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி"

இவற்ருல் பார்ப்பனர்களை அந்தணரென்றும், பூணூலும், கமண்டலமும், முக்கோலும், மணியும் அவர்களுக்குரிய அடையாளப் பொருள்களென்றும், பார்ப்பனர் அரசுபுரிவதற்கும் உரியவரென்றும் கூறுகின்ருர்· வாணிகம் வைசிகனுக்கே உரியதென்றும் கூறுகின்ருர். வேளாளர்க்கு (சூத்திரர்க்கு) உழுது உழைத்து உண்டு மேல் வருணத்தவர்களுக்குத் தானம் கொடுத்தும் தொண்டு செய்தும் வாழ்வதைத் தவிர அரசியல் வணிகவியல்களைப்பற்றிக் கருதவோ புரியவோ சற்றும் இடமில்லையெனத் திட்டமாகத் தெரிவித்து விட்டார்.

மேற்கண்ட வண்ணம் திருக்குறளில் நால்வகை வருணங்களும் உயர்ந்தோர், தாழ்ந்தோர், அடிமை செய்வோர் ஏவல்புரிவோர் என்ற பாகுபாடுகளும், அவரவர்களுக்குரிய தனித் தனித் தொழில்களும் கூறப்பட்டுள்ளனவா? ஓதுதல், தூது செல்லல், வாணிகம் செய்தல் அரசாளல், பயிரிடல், தொழில் புரிதல், தொண்டு செய்தல் இவற்றிற்கு இன்னின்ன சாதியார்தான் உரியர் என்ற பிரிவுகள் கூறப்பட்டுள்ளனவா? அந்தணர் என்போர் அறவோர் என்பதன்றி பார்ப்பனர்தான் என்று திருவள்ளுவர் கூறுகின்ருரா? அந்தணர்க்கு நூல்கோல் முதலிய அடையாளங்களைக் கூறுகினருரா? தவத்திற்கு எட்டுவகை நியமங்களை ஏற்றுகின்ருரா?

கடவுள், கடவுள் வாழ்த்து என்ற பெயரில் அமரர்கண் முடியும் அறுவகை என்றும், கொடிநிலை கந்தழி வள்ளி என்றும், மாயோன் சேயோன் வேந்தன் வருணன் என்றும் பத்துக்கு மேற்பட்ட சொத்தைக் கடவுள்

களைப்பற்றிக் கூறுகின்றாரா? எந்த வகையில் திருவள்ளுவர் தொல்காப்பியரைப் பின்பற்றியே நூல் செய்தார் எனக்கூறத் துணிவு கொண்டார்கள்? அறிவுக்கும் பொது நெறிக்கும் பொருந்தாத தொல்காப்பியர் கொள்கைகளைத் தள்ளிவிட்டன்றோ திருவள்ளுவர் தனித் தமிழறிவுடன் நூல் செய்துள்ளார். ஆதலால், இனியேனும் ஆராயும் உணர்வுடையோர் இதன் உண்மையை உணர வேண்டுகின்றோம்.

## தடையும் விடையும்

திருவள்ளுவர் முற்பட்டவரென்று கொண்டால் புலவர் பலரும் கூறக்கூடிய தடைகளையும் அவற்றிற்குரிய விடைகளையும் யாம் அறிவோம். தொல்காப்பியத்தில் அமைந்துள்ள சொற்களுக்கும் தொடர்களுக்கும் குறளில் அமைந்துள்ள சொற்களுக்கும் தொடர்களுக்கும் வேற்றுமை காட்டிக் கடின சொற்களும் எடுத்தாளும் வழக்குகளும் பயின்றுவராத காரணத்தால் குறள் பிற்பட்டதெனக் கூறுவாருமுளர். இலக்கண நூலில் எடுத்தாளும் சொற்களையும் தொடர்களையும் அம்முறையிலேயே இலக்கியநூலில் எடுத்தாள வேண்டுமென்ற சட்டதிட்ட மொன்றுமில்லை.

இலக்கணத்தைப் போலப் புலவர்க்குமட்டு மல்லாமல் பொதுமக்கள் அனைவர்க்கும் எளிதில் பயன்படு முறையில் ஆசிரியர் நூல் செய்தவராகையாலும்,

"எண்பொருளவாகச் செலச் சொல்லித் தான்பிறர்வாய் நுண்பொருள் காண்பதறிவு"—என்றபடி எல்லார்க்கும் எளிதாகத் தெளிவாகப் பொருள் விளங்குமுறையில் சொல்லவேண்டுமென்ற கொள்கையுடையவர் ஆகையாலும் எளிய சொற்களைக்கொண்டு நூல் இயற்றியுள்ளார் என்றே கொள்ளவேண்டும்.

இவற்றைப்பற்றி இன்னும் விரிவாகக்கூறின் பெருகுமென விடுத்தனம். எனவே வள்ளுவர் தொல்காப்பியர்க்கு முற்பட்டவர் என்பதும் ஆரியக் கொள்கைகள் தமிழ் நாட்டில் புகுந்தபோது அவற்றை ஏற்காமல் மறுத்தவர் வெறுத்தவர் என்பதும் தமிழ்க் குடிமக்கள் ஆரியக் கொள்கைகளால் அறிவிழந்து விடாமல், அறிவு நிலைபெற்று விளங்கவே திருக்குறளைச் செய்தார் என்பதும் எமது கொள்கையும் பெருந்துணிபுமாகும்.

## ஆசிரியர் சமயம்

திருவள்ளுவரது சமயம் அல்லது கொள்கை எத்தகையது என ஆராய்வதும் பயன் தருவதொன்றாகும். தொல்காப்பியர் வடநூற் கருத்துக்களை ஏற்று நூல் செய்துள்ளதால் அவரை வேத விதிக்குட்பட்ட வைதீக மதத்தைச் சார்ந்தவர் எனவும் கூறுகின்றார்கள். அஃதே போல் திருவள்ளுவரும் வேதம் மனுநூற் கொள்கைகளைப் பின்பற்றியே நூல் செய்துள்ளார் என்று கருதி வைதீக மதத்தவர்தான் எனவும் கூறுகின்றார்கள். மற்றும் பலர் பல சமயங்களையும் மதங்களையும் சார்ந்தவரெனவுங் கூறுகின்றார்கள். அவைகளை ஈண்டு ஆராய்வோம்.

"ஆதிபகவன் முதற்றே உலகு" என்பதில் ஆதிபகவன் என்பது, பகலவன் (சூரியன்) எனப் பொருள்படுவதால் பகலவனைக் கடவுளாகக் கொண்டு வணங்கும் அருக்க சமயத்தவர் என்பர் சிலர். "மலர்மிசை ஏகினான்" என்பதால் "பூமிசை நடந்தோன் புத்தன்" எனக் கொண்டும், துறவு அவாவறுத்தலை வற்புறுத்துவதைக் கொண்டும் புத்தமதத்தவர் என்பர் சிலர். வேள்வியையும் உயிர்ப்பலியையும் மறுத்தும், கொல்லாமை புலாலுண்ணாமையை வலியுறுத்தியும் கூறுவதால் வேதத்தை

ஒப்புக்கொள்ளும் வைதீக மதத்தைச் சார்ந்தவரல்லர், வேத வேள்வியை மறுத்துக் கொல்லா நெறியைக் கொண்டொழுகும் சைன - சமண மதத்தைச் சார்ந்தவர் என்பர் சிலர். திருக்குறளுக்குச் சைன மதச் சார்பில் உரையும் எழுதப் பெற்றுள்ளது. இன்றும் வள்ளுவர் சைனரே எனச் சாதிப்பவரும் அதற்கு ஒத்து ஊதுவோரும் சிலர் உளர். குறளில் நிலையாமையைப் பற்றிக் கூறுவதால் உலகமே பொய் என்னும் மாயாவாதிகளும் வேதாந்திகளும் தம் தம் மதத்தவர் என்றும் கூறுவர் "அறவாழியந்தணன், அடியளந்தான், தாமரைக் கண்ணான்" என்ற தொடர்களைக்கொண்டு வைணவரெனவும் கூறுவர் சிலர். "எண்குணத்தான்" "அடிசேர்தல்" என்ற சொற்களைக் கொண்டு சைவரென்றும் கூறுவர் சிலர்.

இங்ஙனம் திருக்குறளைப் படித்த பலரும் தங்கள் தங்கள் சமயத்திற்கும் மதத்திற்கும் வள்ளுவரை இழுத்துச் சென்று மதக் குழியில் வீழ்த்திச் சமயச் சேற்றில் அழுத்தி அவருடைய அறிவியற் கொள்கைக்குச் சமாதி கட்டத் துணிகிறார்களே யன்றி, அவர் மெய்யுணர்வோடு கூடிய அறிவியற் கொள்கையுடையவர் என்பதை அறியும் ஆற்றல் அமையப் பெறாதவர்களாகவே இருக்கின்றார்கள். சிலர், இவர் சமயங்கடந்தவர் என்றும், ஒரு சமயத்தையும் சாராதவர் என்றும் எல்லாச் சமயத்தையும், சமரசமாகக் கருதுபவர் என்றும் கூறுகின்றார்கள். இதற்கு எடுத்துக் காட்டுகள் சில காட்டுதும்.

"திருக்குறள் என்னும் நூல் கடவுள் ஒருவரே உண்டென்றும், எண்ணில்லாத உயிர்கள் உண்டென்றும், ஆணவம் மாயை கன்மமாகிய மூன்று மலங்களும் உண்டென்றும், துறக்கம் நிரயம் உண்டென்றும் கூறுத

லானும், தேவர்கள், அலகை மறு பிறப்புக்கள் உண் டெனக் கூறுதலானும், முத்தியடைதற்குரிய சாதனங் களைக் கூறுதலானும் மனமொழி மெய்களாற் செய்யப் படும் வழிபாட்டைக் கூறுதலானும், பெத்த நீக்கமும் முத்திப் பயனும் கூறுதலானும், முத்தியிலும் முப் பொருளும் முதல்வன் உபகாரமும் உண்டென்று கூறுத லானும், அடிசேர் முத்தியாகிய சித்தாந்த முத்தியைக் கூறுதலானும் திருவள்ளுவ நாயனுர் சித்தாந்த சைவரென்பது தேற்றம்.— திரு. வாலையானந்த சுவாமிகள்.

"இவர் ஐந்தெழுத் தோதி ஐம்பொறி புலனடக்கி ஐந்தவத்தைக் கடந்த மாசித்தனே இவ்வரிய தெய்வ நூலை முடிக்க வல்லானென்று உலகறிய வந்தவர். எங் ஙனம் இம்முடிபு இவர்நூல் வழி விளங்குமெனில் குறட்பா 1330-க்கும் அடிகள் 2660 ஆகும். அவ்வெண் கள் கூட்டுத் தொகையில் 5 எண்ணைக் குறிக்கும். இவ் வைந்து பற்பல அரிய பொருள்களை விளக்கும் என் பதனுல் அறிக.—சி. எஸ். முருகேச முதலியார்.

**குறிப்பு**:—மேலே சுவாமிகள் சித்தாந்த சைவத்தின் கொள்கைகளையெல்லாம் வள்ளுவர் சொல்வதாக அவர் தலை மேல் கட்டி விட்டார். ஆனுல், சித்தாந்த சாத்திர புராண பாராயணத்தையும் சமயம், விசேடம், நிர்வாணமென்னும் திட்சை முறைகளையும், செப்புக்களை வைத்துக் கொண்டு அன்பு நெகிழ்ச்சியும் ஆர்வ எழுச்சியுமில்லாமல் நீராட்டிப் பூச்சூட்டிச் சீராட்டும் வறட்டுச் சடங்குகள் மலிந்த போலிப் பூசைகளையும் வள்ளுவர் சொல்லித்தான் உள்ளார் எனச் சொல்லாது விடுத் தாரே அதுவரையில் வள்ளுவர் தப்பினுர். ஆனுலும் அவர் ஐந் தெழுத்தை விட்ட குறையைத் தொட்டு ஐந்தெழுத்தோதி எனத் தொடங்கி 5 என்ற எண்ணைக்காட்டும் கணக்கில் கொண்டுவந்து நிலை நிறுத்திய முதலியாரவர்கள், பஞ்சாட்சரம் செபிக்காத பாபத்தினின்றும் வள்ளுவரைக் காப்பாற்றி விட் டார்கள். எப்படியாவது சைவத்தைச் சார்ந்தவர் என்று நிலை

நாட்டிவிட்டால் போதுமல்லவா? ஏனெனில் நானும் ஒரு சைவன், எனக்கும் அந்தப் பெருமை யுண்டல்லவா?

"திருக்குறள் ஆரிய வழக்கொடு உடன்பட்ட நூலே. ஆரியர் யாகத்தின் பெருமை, ஆரியர் பெருமை, பார்ப்பனர் நிலை, ஆரியரது இறுதிக்கடன், மறு பிறப்பு, இறந்தார்க்குச் செய்கடன் இவைகளைக் குறள் எடுத்துரைக்கின்றது" —பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார்

"யாதானும் ஒரு சமயத்தைச் சார்ந்து நின்று அச்சமயக்கடவுளை வழிபட்டாலன்றிப் பயனை அடைதல் கூடாது. ஆதலின் வள்ளுவர் ஒரு சமயத்தையும் சார்ந்தவர் அல்லர் என்பார் கூற்றுப் பொருந்தாது" —பொ. முத்தையா பிள்ளை.

"திருவள்ளுவரைச் சிலர் அருகசமயத்தவர் என்பர்; வேறு சிலர் சைவர் என்பர்; பின்னும் சிலர் வைணவரென்றும் சொல்லத்துணிவர். இப்பல துணிவிற்கும் ஆதாரம் காட்டுவாரும் உளர். எச்சமயத்தையும் நாடாது பொது நூல் செய்த இவரை ஒரு சமயத்திலும் சம்பந்தப் படுத்தாது வேதாந்த சித்தாந்த நெறிகளையும் கடந்த சமரச ஞானி என்று சொல்வதே சிறப்புடைத்தாம். சமயப் பற்றில்லார்க்கே சமயாதீதப் பொருள் கிட்டும் என்பதற்குத் திருவள்ளுவரே சான்றுவர்" —வி. கிருஷ்ணமாச்சாரியார்.

இங்ஙனம் பலர் பலவாறு கூறினும் வள்ளுவர் கொள்கை எது? அவர் எச்சமயத்தைச் சார்ந்தவர் என அறிய முற்படவேண்டும்.

## வள்ளுவர் கொள்கை எது?

வேதம் மனுநூல் முதலான வட நூல்களில் கூறு முறையில் ஆரியர்கள் உயிர்ப்பலி கொடுத்து அவி

சொரிந்து செய்யும் யாகங்களையும், யாகத்தின் பேரால் கொலை செய்தலையும், ஊன் உண்ணுதலையும், சோம பானம் என்னும் கள்ளை (மதுவை) அருந்தி களியாட்ட மாடுதலையும், அவர்கள் கொண்ட வருண ஆசிரமங்களையும், அவர்கள் தானம் வாங்குதலையும் வள்ளுவர் கண்டித்தும் மறுத்தும் கூறுவதால் வேத விதிக்குட்பட்ட வைதீக மதத்தினர் என்பது முற்றும் முரணானதாம். அதை வெறுக்கும் பகைவர் என்றே வள்ளுவரைக் கொள்ளவேண்டும்.

கொல்லாமை, புலாலுண்ணாமை, அவாவறுத்தல் துறவு முதலானவற்றைக் கூறுவதால் மட்டும் பு..த சைன-சமண மதத்தினர் எனக் கொள்ளல் மு..றும் பொருந்தாது. அறிவியல்நிலை, இறையருட்சார்பு.. அடையும் பயன் முதலானவகைகளில் மேற்க..ட மதங்களுடன் மாறுபட்டுக் கூறுகின்றார்.

குறளில் வந்துள்ளதாகச் சொல்லிச் கொள்ளும் சில
சொற்களையும் அவற்றின் கருத்துக்களை ..யும் கொண்டும்,
அவர்க்கு உருவப்படம் அமைத்து திரு.. நீற்றுப்பட்டை
யும் உருத்திராக்கவடமும் போட்டுவ..ட்டதைக்கொண்
டும், இனிப் பட்டைத் திருநாமம் தி..ட்டிவிட்டாலும்
அதைக்கொண்டும் சித்தாந்த சைவரெ..ன்றோ, வைணவ
ரென்றோ, வேதாந்தியென்றோ, மாயாவாதி என்றோ அல்
லது எல்லாச் சமையத்தையும் ஒப்புக்கொ..காண்ட சமரச
சமயத்தவர் என்றோ அன்றி ஒன்றையும் நம்பாத ஒரு
கொள்கையும் இல்லாத ஒரு பிறவி என்றோ முடிவு
செய்து விடவும் முடியாது.

உலகம் பொய் என்றும், தானே பிரமம் என்றும், கைலாய வைகுண்டங்களில்தான் இன்பம் இருக்கிற தென்றும், வள்ளுவர் சொல்லவில்லை. ஆதலால் ..வர்களின் இழுப்புக்கு வள்ளுவர் வழுக்கிக்கொண்டு இர்

களைவிட்டு விலகிநிற்கின்றார். இதனால் திருவள்ளுவர் இவர்கள் கூறும் எச்சமயத்தையும் சார்ந்தவருமல்லர். எச்சமயத்தையும் ஒப்புக்கொண்டு சமரசம் காணும் தன்மையருமல்லர். இவர் கொண்ட கொள்கைகள் 'பண்டைத் தமிழர் கண்ட செந்நெறியின்' தெளிந்த கொள்கை களேயாகும். இவை இப்பொழுது கூறப்படும் சமய மதங்கள் யாவும் தோன்றுமுன் அறிவும் அன்பும் அரு ளும் அமைந்து நிறைந்த பண்டைத்தமிழ்ப் பேரறிஞர் களால் கண்டு கைக்கொண்டு பயன்பெற்ற தமிழர்க் குரிய தனிப் பண்பாடுகளாகும். பிற்காலத்தில் ஏற்பட்ட சமய மதங்கள் யாவும் இப்பண்பாட்டின் முன் நிற்கும் பண்புடையனவாகா. இப்பண்பாட்டினையே பலவிடங் களில் ஆசிரியரும் வலியுறுத்திக் கூறுகின்றார். இத்தகைய பண்பாட்டினை யுடையவர்களால்தான், இப்பண்பாளர் வழியில் பலரும் நிற்பதால்தான் உலகம் உள்ளது. இவர் களும் இவர்கள் நெறியும் இல்லையேல் இவ்வுலகம் மண் ணுய்விடும் என்கின்றார் பண்பாட்டின் பயனைக்கண்ட, கைக்கொண்ட திருவள்ளுவப் பெருந்தகையார். இதனை,

"பண்புடையார் பட்டுண்டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்"

—என்பதனால் அறியவும்.

இத்தகைய பண்பாடமையாத பலவகையான சமயங் களாலும் மதங்களாலும் அவைகளின் கருத்து வேற் றுமை கொள்கை வேற்றுமை குறிக்கோள் வேற்றுமை களாலும் மக்களுக்குள் ஒற்றுமை கெட்டு வேற்றுமை மேலிட்டுப் பல பிரிவுகளேற்பட்டு வெறுப்பும் காழ்ப்பும் மிகுந்து பெரும்போர்கள் நிகழ்ந்து அமைதி குலைந்து அழி வதைக் கண்கூடாகக் காண்கின்றோம். ஆதலால் வள் ளுவர் மேற்கண்ட சமய மதங்களின் கொள்கைகளை யுடையவரெனக் கொள்ளுதல் பொருந்தாது.

# பண்டைத் தமிழர் கண்ட செந்நெறி

பண்டைத்தமிழ்ப் பேரறிஞர்கள் உயிர், உடல், இனம், இறை, உணர்வு, அறிவு, ஒழுக்கம், வாழ்க்கை, பயன் இவைகளைப்பற்றி எத்தகைய கொள்கைகளைக் கொண்டவர்கள் என்பதை இங்கு ஒருவாறு உணர்ந்து கொள்ளவேண்டும். உணர்ந்தால்தான் தமிழர்க்குரிய தனிப் பண்பாட்டறிவுடன் விளங்கிய வள்ளுவர் உள்ளத்தையும், அப்பண்பாட்டறிவுடன் அவர் அருளிய திருக்குறளின் பொருளையும் உட்கருத்தையும் அதனால் அடையும் பயனையும் அறிந்துகொள்ள வியலும்.

உயிர்—உடல்

உயிர்கள் உடல் எடுக்குமுன் உணர்வு வெளிப்படா உறக்க நிலையில் மண் திணிவிலும் கற்பாறைகளிலும் உறைந்து கிடந்தன. பின் உணர்வு வெளிப்பட்ட நிலையில் உணர்ச்சியின் வளர்ச்சிக்கேற்பப் பல உடல்கள் எடுத்து அறிவு வளர்ச்சியடைந்து இந்த மனித உடலை அடைந்துள்ளன. இதனினும் சிறந்த அறிவு விளக்கம் பெற்று, உயிரும் உடலும் உணர்வும் அறிவும் ஒளி வடிவாக விளங்கும் வாலறிவாந் தன்மையை – மெய்யறிவாம் வடிவை அடைய வேண்டும் என்பவைகளே உயிர் உடல்களைப்பற்றிய கொள்கைகளாகும். இங்ஙனம் எடுக்கும் பல உடல்களிலும் (பிறவிகளிலும்) உண்டாகும் அறிவின் வளர்ச்சியை அடிப்படையாகவைத்து, பிறப்பை ஏழு வகையாகப் பாகுபாடு செய்தார்கள். இவைகளை உயிர் முன்னேறி உயர்நிலையடைவதற்குரிய ஏழு படிகள் என்றும் கூறலாம். இவற்றினியல்புகளைப் பண்டைத் தமிழ்ப் பெருமக்கள் நன்குணர்ந்திருந்தார்கள்.

இவற்றின் நுட்பமுணராத பிற்காலத்தவரும் பிற நூலாரும் அறிவின் வகையால் பிறவிகளைக் கொள்ளா

மல் இனவகையால் தாவரம், ஊர்வன, நீர்வாழ்வன, நடப்பன, பறப்பன, மனிதர், தேவர் என எழுவகையாகப் பிரித்தார்கள்.

## இனம்

இங்ஙனம் எடுத்த பிறவிகளில் மக்களாய்ப் பிறந்தவர்கள் அனைவரும் ஒரே இனத்தவர் என்பதும், யாவரும் உயர்ந்த மனிதப் பிறப்பிற்குரிய மனநலப் பண்புடனும் நல்லொழுக்கத்துடனும் பிறர்க்கு ஊறு செய்யாமல் உதவி செய்து வாழ வேண்டுமென்பதும் பொதுக் கொள்கையாகும். இங்ஙனம் மனநலம் குணநலம் சிறந்து, அன்பு அறிவு அறநெறி நல்லொழுக்கங்களில் உயர்ந்து விளங்குவோரை உயர்ந்தோர்-மேலோர்-விழுமியோர் என்றும், அவர்கள் தங்களைச் சார்ந்த மக்களையும் அந்நிலையில் நிறுத்தலால் அந்நெறி நின்ற குடியை, உயர் குடியென்றும், குலையை (கொத்து) உயர்குலமென்றும் கொண்டனர். அம்முறையில் நில்லாது இழிந்த மனமுடன் இழிந்த செயல் புரிவோரைக் கீழோர் கயவர் என்றும் கொண்டனர். இதனுல் ஒழுக்கத்தால் குடி, குலம் உயர்வு பெற்றதன்றி பிறப்பினுல் பெற்றதல்லவென்னும் உண்மையையும் உணர வேண்டும். இதனுல் ஒருவர் ஒழுக்கத்தால் மேன்மையும், ஒழுக்க இழுக்கத்தால் தாழ்மையும் அடைவரென ஆசிரியர் கூறுகின்ருர்.

## இறை

இறை என்பது ஒன்று உண்டு என்ற கொள்கை தமிழர்களுக்கு உண்டு. பல நூருயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இவர்கள் அறிவு வளர்ச்சியில் எய்திய இணையிலாப் பெருவெற்றி யென்றே இதைக் கொள்ள வேண்டும். இன்று இறைமைக் கொள்கையும், இதைப்பற்றிய உணர்வும் அறிவும், அறியாமையின்பாற் பட்டனவென்று

கொள்வாரும் உண்டென்றால் அவர்கள் விஞ்ஞானிகளாயினும் வேறு எஞ்ஞானிகளாயினும் அறிவு வளர்ச்சி பெறாத குறைவுற்ற நிலையில் உள்ளவர்களென்றே கொள்ள வேண்டும். இக்குறைவுகள் நீங்கி நிறைவெய்திய நிலையில்தான் பண்டைத் தமிழ்ப் பெருமக்கள் இறையுண்மையை இனிது தெளிந்து கண்டு கைக்கொண்டார்கள்.

இங்ஙனம் கண்ட இறைமைத் தன்மை ஒரு வடிவில் ஓரிடத்தில் ஒருகாலத்தில் ஒரு பண்பில் மட்டும் இருப்பதொன்றன்று. எல்லாமறியும் அறிவுருவாய் எங்கும் தங்கும் நிறை பொருளாய் இயற்கையுடன் பிரிக்க வியலாது இயைந்து அவ்வியற்கையை இயங்க இயக்குவிக்கும் எல்லாம் வல்ல பேராற்றலுடையதாய் ஒப்புயர்வற்றதாய் என்றும் உள்ளதாய் உள்ள ஒரு உண்மையே (தத்துவம்) மெய்ப்பொருளே, தமிழர்கொண்ட தனித்த இறையாகும்.

### உணர்வு, அறிவு

படிப்படியாக வளர்ந்து உயர்ந்த உணர்வும், அறிவும் உலகில் எல்லா வியல்புகளேயும் உணர்ந்தறிந்து தெளிவதோடமையாது. அனைத்திலுக்கும் ஏதுவாகவும் அடிப்படையாகவு முள்ள இறைமைப் பேராற்றலின் (பெருஞ்சக்தி) இயல்பினையும் பெருமையினையும் உணர்ந்து, அறிந்து கொள்வதும், அதை அடையுமுறையறிந்து அடைந்து பயன் பெறுவதும் உயர்ந்த அறிவாகும் என்ற கொள்கையும் இவர்களுக்குண்டு.

### ஒழுக்கம், வாழ்க்கை முறை

இத்தகைய அறிவின் உயர்வை, உலக வாழ்க்கையினின்றே அடைவதற்குரிய ஒழுக்கங்களை நேரிய முறையில் அமைத்தார்கள். அவை உயிர்களிடம் அன்பு

டைமை, பிறர்நலங் கருதும் பெருந்தன்மை, அருளுடைமை முதலியனவாம். இறைமையை யுணர்ந்து, அதன்வழி நடந்து அதனை அடைய எண்ணிய தமிழர், மேற்கண்ட அருங் குணங்களையே—ஒழுக்க முறைகளையே உண்மை வழிபாடெனக் கொண்டனர். ஆதலால் இறை வழி பாடெனத் தனியிடத்தில் தனிக்காலத்தில் தனியாகக் கொள்ளாமல் வாழ்க்கையோடு ஒன்றியமைந்த ஒழுக்க மாகவே கொண்டார்கள்.

எனவே உயிர்களுக்குதவுதலும், நன்றே நினைத்து நலம் புரிதலுமே எங்கும் நிறைந்த இறைவற்கியற்றும் விழுமிய வழிபாடாகும் என நன்குணர்ந்து அவற்றை வாழ்க்கை முறையில் கொண்டார்கள்; அதன் பயனையும் கண்டார்கள்.

## பயன்

உயிர், உலக வாழ்க்கையில் அறிவு உயர்ந்து விளக்கம் பெற்று நிறைவெய்தும் வரை, பேரறிவின் பேராற்றலின் பேரியல்பை அறிந்து அடையும்வரை பல பிறவிகள் எடுக்கும் என்பதும், அறிவு நிறைந்து விளங்கி அமைந்த நிலையே பிறவி வேண்டாத பிறவி நீங்கிய நிலை யென்பதும், பலவகைத் துன்பங்களும் நீங்கிய இன்பநிலை யென்பதும், ஒவ்வொரு உயிரும் இவ்வின்ப நிலையை இவ்வுலகிலேயே இவ்வுடலிலிருந்தே அறிவின் மேல்நிலை யில் அடைய வேண்டுமென்பதும், இதுதான் பிறவியின் பெரும் பயன் என்பதும் தமிழர்களின் தனிக் கொள்கை யாகும்.

## பிறப்பு, இறப்பு, உணர்வு

உயிர் இந்நிலையை அடைவதற்கு மனநலம் குண நலம் நல்லொழுக்கம் அன்பு அருட்பண்பு யாவும் குறை

வின்றி அமையவேண்டியிருத்தலால், இவையாவும் குறை வின்றி அமையும்வரை உயிர் எடுத்த உடலை விடுத்தல் வேறு உடலை எடுத்து வருதல் இயல்பே. அறிவு விளக்கத் துறையில் வாழ்பவர்கள் எடுத்த உடலில் ஏற்றன புரிந்த பின் குறையை நிறைவாக்க உணர்வுடன் இறந்து உணர் வுடன் பிறந்து வாழும் வகையினையும் அறிந்திருந்தார் கள். இதுவும் தமிழர்களின் தனிச் சிறப்பாகும்.

> "உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
> விழிப்பது போலும் பிறப்பு" என்பதாலறிக.

ஐம்புலனால் உணரும் உணர்விற்கும், அறியும் அறிவிற் கும் அப்பாற்பட்ட உணர்வையும் அறிவையும் அடைந்து அதனால் எல்லாமறியும் அறிவையும் எங்கும் செல்லும் தொலைப்பார்வை யாற்றலையும் முக்கால உணர்வையும் பெற்று விளங்கினார்கள். இதற்கு நெற் றிக்கண் - அறிவுக்கண் (ஞானக்கண்) மெய்யுணர்வு என்ற பெயர்கள் வழங்கின. இதன் உதவியினால்தான் இவ்வுடலை விடுங்காலமும் இனி உடலெடுக்கும் இடமும் புரிய வேண்டிய செயலும் இனிது உணர்ந்து இருந்தார் கள். இதைத் தம் உறவினருடன் உரைத்து விடை பெற்றுக்கொண்டே உடலினின்றும் பிரிந்து சென்றார் கள். இது தமிழர்க்குரிய தனிப்பண்பு—தனிக்கொள்கை என்பதை உண்மை யுணரும் உணர்வாளர்கள் உணர் வார்கள்.

> "ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
> மெய்யுணர் வில்லா தவர்க்கு"

என்பதால் இதன் நுட்பமுணரலாம்.

இத்தகைய வித்தகக் கொள்கைகளையும் செயல்களை யும் தமிழ் மக்கள் தம் உடல் உயிர் உணர்வு ஒழுக்கத் தாலும் அறிவு விளக்கத்தாலும் அறிந்தார்களேயன்றிப்

பிறரிடமிருந்து பெற்றதன்று. தானம் கொடுத்துப் பண்ட மாற்ருக வாங்கிக் கொண்டதுமன்று. இதனுல் ஒருவருடைய உயிர் ஒழுக்கமே உயர்வுக்கு உதவி செய்யு மென்பதும் புறவொழுக்கமாகிய பலவகைச் சடங்கு களும் சடங்குகள் நிறைந்த ஆடம்பர வழிபாடுகளும் ஒருவர்க்காக மற்றவர் தரகு முறையில் செய்யும் எக்காரி யங்களும் உதவி செய்யாவென்பதும் இவர்கள் கொள்கை யாகும்.

எனவே வள்ளுவர் கொள்கை அறிவியல் கொள்கை யாகும். இவர் புறவொழுக்கம் போலி யொழுக்கம் நிறைந்த போலிச் சமயங்களைச் சேர்ந்தவரல்லர். இவை களை ஆங்காங்கு மறுத்தும் கூறுகின்ருர். இதனுல் நாம் வள்ளுவரை அறிவியல் வாதி அறிவியற் கொள்கை யாளர் என்றே கொள்ள வேண்டும். இதற்கு மாருக குறளில் காணப்படும் சொற்கள் கருத்துக்கள் யாவும் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு சமயத்தார் தத்தம் கொள்கைகளுக் கேற்பத் திருத்தி அமைத்து வைத்தவை களாகுமென்பதில் ஐயமில்லை. இவற்றைக் குறள் உரை யில் எடுத்துக்காட்டி விளக்குவோம். 'ஒன்றே குலமும், ஒருவனே இறைவனும், நன்றே நினைமின் நமனில்லை'' என்பதே வள்ளுவருடைய கொள்கையாகும்.

## அறிஞர்கள் அளித்த பெருமை

திருவள்ளுவரது திருக்குறளை எடுத்தாளாத தமிழ்ப் புலவர்களும் இலர். எடுத்து ஆளப்படாத இலக்கியங் களும் தமிழ் மொழியில் இல்லையென்றே சொல்லி விட லாம். குறளின் கருத்துக்களையும் அடிகளையும் எடுத்து அமைத்து இயற்றப்பட்ட நீதிநூல்களும் பிறநூல்களும் தமிழில் பல உள்ளன. திருக் குறளுக்குப் பழைய உரை யாசிரியர்கள் பலரும் புதிய புலவர்கள் பலரும் பலவித

மான உரைகளும் விளக்கங்களும் எழுதியுள்ளார்கள். பிறநாட்டு அறிஞர்கள் பலர், தங்கள் தங்கள் மொழி களில் திருக்குறளை மொழி பெயர்த்துச் செய்யுள்களாக வும் உரைநடையாகவும் எழுதி இருக்கின்றார்கள்.

மேற்கண்ட உரைகளுடனும் மொழி பெயர்ப்பு களுடனும் பல பதிப்புகள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இது வரையில் நூற்றுக்கு மேற்பட்ட பதிப்புகள் வெளி வந்துள்ளன. 1730-ஆம் ஆண்டு முதற்கொண்டே திருக் குறள் இலத்தீன், பிரஞ்சு, ஜெர்மன் முதலான மேனாட்டு மொழிகளிலும், சமஸ்கிருதம், இந்தி, தெலுங்கு, மலை யாளம், முதலான இந்தியநாட்டு மொழிகளிலும் மொழி பெயர்த்துப் பதிப்பிக்கப்பட்டு வருகின்றது.

திருக்குறளின் அருமை பெருமைகளைப்பற்றிப் பல மேனாட்டு அறிஞர்களும், நூற்றுக்கணக்கான நம் நாட்டறிஞர்களும் புகழ்ந்து பாராட்டியுள்ளார்கள். அவற்றையெல்லாம் திரட்டிச் சுருக்கமாகக் ‘குறளின் பெருமை” என்ற ஆராய்ச்சி நூலில் அகச்சான்றுகளுடன் விளக்கியுள்ளோம். ஆயினும், எடுத்துக்காட்டாக ஈண்டு இன்றியமையாது குறிப்பிட வேண்டிய சில வற்றை மட்டும் குறிப்பிடுகின்றோம்.

### பிற நாட்டறிஞர்களின் புகழுரைகள்

அறிஞர் ரெவரெண்டு எலிஜா ஹூல் :—“குறளாசிரியர், இந்துக்களுக்குரிய மூடநம்பிக்கைகளினின்றும் தாம் விடு பட்டு நிற்பதை நூல் முழுவதிலும் நன்கு விளக்கியுள் ளார். அவர் இறையைப் பற்றிக் கூறும் திறத்தை நாம் வியந்து போற்றாமலிருக்க முடியாது”.

அறிஞர் ரெவரெண்டு W. H. ட்ரூ :—“நூல்களில் தலை சிறந்த திருக்குறள் உண்மையான தனிச் சிறப்புடன்

அமைந்து விளங்குவதால் நம் கருத்தைக் கவரும் வன்மை யுடையதா யிருக்கின்றது. ஒரு வகுப்பினர்க்குமட்டும் உரிய கொள்கைகளை மதியாது ஒதுக்கி, மக்கள் அனைவர்க்கும் ஒருங்கே பொருந்தும் உண்மைகளை மட்டுமே ஆசிரியர் நூலில் கூறியுள்ளார். இதனால், மனு நூலிலும் மற்ற சாத்திரங்களிலும் கூறும் பொருளற்ற மூடப் பழக்க வழக்கங்கள் நீக்கப்பட்டு, நூல் மேம்பாட்டுடன் விளங்குகின்றது.''

அறிஞர் ரெவரெண்டு E. J. ராபின்சன் :—''பார்ப்பனர் அந்தணர் என்ற பெயரால் அழைக்கப்படுதற்குத் தகுதி யுடையரல்லர் என்று ஆசிரியர் இடித்துக் கூறுகின்றார். சமயப் போலி, சமயக் கொடுமை, பொய் யொழுக்கம் ஆகியவை நூல் முழுவதிலும் கண்டிக்கப்பட்டுள்ளன''.

அறிஞர் ரைட் ரெவரெண்டு ராபர்ட் கால்டுவெல் :—'' தமிழ் நூல்களில் மிகவும் சிறந்த நூலாக எல்லோராலும் மதிக்கப்படும் திருக்குறள் அமைப்பிலும், யாப்பிலும், வடமொழித் தொடர்பு சிறிதுமில்லாமல் தனிச் சிறப்புடன் அமைந்துள்ளது.''

அறிஞர் ரெவரெண்டு பர்சிவல்:—''இந்நூலாசிரியர் தாம் உரைக்க வந்த நீதியுரைகளை வலியுறுத்திச் செப்பமாகச் செய்யுள் நடையில் செந்தமிழில் கூறியுள்ளதற்குச் சம மாகிய நூல், மக்களாய்ப் பிறந்தோர் பேசும் வேறு எம் மொழியிலும் காணமுடியாது.''

அறிஞர் சார்லஸ் E. கவர் :—'' இறையுண்மையை நிலை நாட்டுவதற்கும், பார்ப்பனர்கள் பின்பற்றி வந்ததும சடங்குகள் நிறைந்ததுமாகிய பல தெய்வ வணக்கத்தைக் கண்டிப்பதற்கும் திருவள்ளுவரையும் சிவ வாக்கியரையும் போன்ற அறிஞர்கள் தம் சொல்லாற்றலையும் எழுத்தாற்றலையும் பயன்படுத்தி வந்தார்கள். கிரேக்கர்களிடம், ஹோமர் விளங்கியது போலவே தமிழர்களிடம் திருவள்ளுவர்

திகழ்ந்தார் என்பது மறுக்க முடியாததோர் உண்மையாகும். திருக்குறள், ஒரு கல்விக் களஞ்சியம்; புலவர் பெருந்துணை; ஒப்புயர்வற்ற சொற்றிறம் நிறைந்த ஒழுக்க நூல். திராவிடர் (தமிழர்) களின் மனப்பண்பு உயர் ஒழுக்கத்தையே நாடி நின்றது என்பது இந்நூலால் தெளிவாக விளங்குகின்றது. தமிழ்ப் பெருமக்களின் நல்லொழுக்கப் பண்பினுல்தான் புத்தமதம் இந்நாட்டில் கால் கொண்டதென்று கருதலாம்; நெருப்பினுலும் போரினுலும் இரக்கமற்ற கொடுமையினுலும் பார்ப்பனர் புத்தமதம் இந்தியாவில் பரவாதபடி அழித்தனர். திருக்குறளை அழிப்பதற்குத் தகுந்த எந்தக் காரணத்தையும் பார்ப்பனர் கண்டிலர். இத்தாலியின் மொழிக்கு தாந்தேயின் நூல் பெருமை அளிப்பதுபோலத் தமிழ்மொழிக்குத் திருக்குறள் பெருமை அளிப்பதாகு மென்பது மிகையாகாது.''

அறிஞர் M. ஏரியல்:—''தமிழ் நூல்களில் தலை சிறந்து விளங்குவது திருக்குறளே. திருக்குறளாசிரியர், வகுப்புகளையும் மக்கட் பிரிவுகளையும் அவற்றிற்குரிய மூட நம்பிக்கைகளையும் ஒரு பொருளாக மதியாது மக்கட் குழுவிற்கே உரிய வகையில் பொதுவாக நூல் எழுதியிருக்கின்ருர்.''

அறிஞர் டாக்டர் கிரௌல்:—'' திருக்குறள் பயக்கும் இன்பம் எத்தகையதென்று எம்மொழி பெயர்ப்பாலும் எடுத்துக்காட்ட வியலாது. அது வெள்ளிச் சரிகைப் பையிலிட்ட பொன் இலந்தைக் கனியாகும்.''

அறிஞர் ரெவரெண்டு G. V. போப்:—'' திருக்குறள், தமிழ் நூல்களெல்லாவற்றினும், தான் உயர்ந்து நிற்கின்றது. ஒரு நாட்டு மக்களின் உள்ளத்தினுள்ளே—உயிரிலே இடங்கொண்டு என்றென்றும் அழியாது விளங்கும் ஒரு சில பெரு நூல்களில் ஒன்று.''

அறிஞர் பிரடெரிக் பின்காட் :—"தமிழிலக்கியத்தின் தலையணியாகிய திருக்குறளை ஓதியுணர்ந்தாலல்லது தமிழ் அறிந்தவன் என்று எவனும் கூறிக்கொள்ள முடியாது."

பேராசிரியர் M. வின்டெர் நிட்ச் :—"திருக்குறள் உலக இலக்கியங்களில் பொறுக்கி எடுத்த மணியாகும். சாதி, வகுப்பு, மதம் என்ற எல்லாப் பிரிவினைகளையும் ஆசிரியர் கடந்தவர். அவர் கூறுவது மக்கட் குழுவுக்கே பொது வான நீதியும் அறிவுரையுமாகும்."

அறிஞர் டாக்டர் J. லாசரஸ் ;—"திருக்குறள் செந்தமிழால் இயன்ற நூல். குறளின் தூய்மைக்கு மற்றெந்தத் தமிழ் நூலும் அதனருகிலும் இருக்கத் தகுதியுடையதன்று. இதை இயற்றிய பெரியாரையும் ஒப்பரிய நூலையும் பயந்த ஒரு நாடு இகழ்ந்தொதுக்கத்தக்க இழிதன்மைவாய்ந்த ஒரு நாடாக இருத்தல் முடியாது. அப்பெரியார் எடுத்தோதும் நீதிகள் நல்லொழுக்கமே விளை நிலமாய் அமையக்கூடிய பண்புவாய்ந்த ஒரு நாட்டிலன்றி விளையா. தமிழ் மக்களின் விடுதலைக்காகப் பாடுபடுவோர்க்குத் திருக்குறள் தனிப்பட்ட பேருதவி புரிவதாகும்.

அறிஞர் பாப்ளி அவர்கள் :—இக்காலத்தில் திருக்குறளை வாயினால் புகழ்ந்துரைப்பது மாத்திரமன்றி, அந்நூலின் கருத்துக்களையும் நோக்கங்களையும் உய்த்துணர வேண்டும் என்ற விருப்பத்துடன் படிக்கின்றிலர் என்பது மிக வருத்தப்படத்தக்கது.

## நம் நாட்டு நல்லறிஞர்களின் புகழுரைகள்

அறிஞர் மணி. திருநாவுக்கரசு முதலியார் :—திருக்குறள் ஒன்று கற்றால் ஒருவனுக்குப் போதும். தமிழை அறியலாம் ; மறுமையை அடையலாம் ; வீடு பேறும் எளிதிலே தானே வரும். இதற்கு உயர்பிறப்பு வேண்டா ; தீட்சை வேண்டா ; சம்ஸ்காரம் வேண்டா ; இடையிலே ஒரு குரு வேண்டா.

"பார்ப்பனர் ஒரு குலத்துக்கு ஒரு நீதி வகுத்தார். வள்ளுவர் யாவர்க்கும் நீதி ஒன்றே என்ன நிலை நாட்டினர்" என்று புலவர் போற்றினர்: என்றும் போற்றுவர். வேதத்தை இது போல் போற்றுவார் இலர்.

அறிஞர் அ. மாதவையா:—"ஆழ்ந்து அகன்ற அரிய கருத்துக்களைப் பொருத்தமான சொற்களிற் சுருக்கமாகக் கூறும் இந்நூல் இக்காலத்துத் தமிழ் மக்களால் பாராட்டப்படும் அளவு பயிலப்படாதது பரிதாபமே."

அறிஞர் கா. நமச்சிவாய முதலியார்:—"திருக்குறள், ஒவ்வொரு வகுப்பிற்கு ஒவ்வொரு விதமாகக் கூறும் அற நூல்களைப்போல் அமையாமல், எவர்க்கும் ஒருபடித்தாய் அவ்வறங்களைத் திண்ணிதின் விளக்கவல்லது. ஆதலின், தமிழ் மக்கள் இந்நூலைப் பலவகையாலும் போற்றக் கடவர்.

அறிஞர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார்:—"திருக்குறள் வாழ்வுக்கு ஆக்கம் தரும் மெய்ம்மைப் பொருளைக் கூறுவது; மற்றப் பொய்ம்மைச் சிறுமைகளைக் கூறுவதன்று; இத்தகைய ஒருநூல் ஓர் இனத்தார்க்கு மட்டும் உரியதாகாது. அது மன்பதைக்குரிய பொதுமையது. திருக்குறள் தமிழ் மொழியில் பிறந்த ஒரு பெரும் பொது மறை. உலகைக் கூறுபடுத்தும் பொருள்கள் அதன்கண் இல்லை. உலகை ஒருமைப்படுத்தும் செவ்விய பொருள்கள் அதன்கண் மிளிர்கின்றன. இப்பெரிய பொது மறையை மன்பதை பயின்று ஒருமையின்பத்தை நுகர்வதாக."

அறிஞர் எஸ். சச்சிதாநந்தம் பிள்ளை, (பி. ஏ., எல். டி.,):—"திருக்குறள் சமூகத்துறையிலும், அரசியற்றுறையிலும் ஒற்றுமையும் ஒத்துழைப்பும் அவாவி நிற்கும் எதிர்கால இந்தியாவிற்கு இன்றியமையாத ஒழுக்க நூலும் சமயங் கடந்த சமரச நூலுமாயுள்ளது."

அறிஞர் சட்டைநாத முனிவர் (தருமையாதீனம்):—

"சாதிக் கொவ்வோர் விதியாச் சாற்றும் வடமறையின்
பேதத்தால் இவ்வுலகம் பேதுரு—தோதிப்
புவனமெலா மெய்ந்நெறியிற் போதவிடுந் தேவர்
கவனக் குறட்பொருளைக் கண்டு."

அறிஞர் ஈ. ராஜேஸ்வரி அம்மாள், (எம். ஏ., எல். டி.,):— "திருவள்ளுவர் சித்தர் கணத்தைச் சேர்ந்த தமிழர். இந்த வீட்டு நிலையிலேயே, வீட்டுநிலை (விடுதலை) அடைய வழி கூறுவோரே சித்தர்கள். வீடென்பது அன்பு வடிவாம் கடவுள் பேரொளி. அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கினையும் ஒன்றோடொன்று ஒட்டாத படிக்கட்டுகளாகக் கொண்டனர் ஒருசிலர். காற்றில் பறந்த மூன்றையும் அறமெனுங் கயிற்றால் கட்டி வீடாம் அன்பினைப் பிழிந்து உலகுக்கு ஊட்டுகின்றார்."

அறிஞர் சுந்தரம் பிள்ளை, (மனோன்மணியம்) :—"வள்ளுவர் செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள், உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக்கொரு நீதி".

அறிஞர் பு. பொ. கோபாலரத்தினம்:–திருவள்ளுவரையும் திருக்குறளையும் வாயளவாக வானளாவப் போற்றுதலோடு அமையாது இச்சிறந்த நூலைத் தமிழர் ஒவ்வொருவரும் ஒவ்வொருநாளும் ஓதியுணர்தல் மிகமிக வேண்டற்பாலது".

அறிஞர் கே. எஸ். ராமசாமி சாஸ்திரியார்:—"மகாபாரதத்தைப்பற்றி ஒரு செய்யுளில் உலகத்தில் உள்ளனவெல்லாம் அதில் இருப்பதாகவும் அதில் இல்லாதது உலகத்தில் எங்கும் இல்லையென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த உண்மை திருக்குறளுக்கே நிறைந்த பொருத்தம் உள்ளது".

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் :—"பாரத பூமியின் அறநெறியை விளக்கும் நூல்களுள் சிறந்தது திருக்குறளே".

**குறிப்பு** :—இதனால் வடமொழி அறநூல்கள் சிறப்பற்றவை என ஆச்சாரியாரே ஒப்புக்கொள்கிறார்.

அறிஞர் அல்ஹாஜ் பா. தாவுத்ஷா சாஹிப், (பி. ஏ):-"எனக்குத் தெரிந்தவரை திருக்குறளை நிகர்த்த அரிய பெரிய நீதிநூல் வேறெந்த தேசத்திலும், வேறெந்த மொழியிலும் இதுகாறும் தோன்றவில்லை என்பது உண்மையேயாகும்".

அறிஞர் மா. வெ. நெல்லையா பிள்ளை, (பி. ஏ) :—"உலக வாழ்வுக்கு இன்றியமையாது வேண்டிய அறிவுண்மைகளை யெல்லாம் ஒன்று சேர்த்துக் கூறப்பட்ட திருக்குறள் போன்ற ஒரு தனி நூல் எம்மொழியிலுமில்லை.

அறிஞர் உ. வே. சாமிநாத ஐயர் :—"எல்லா நாட்டினர் எல்லா மதத்தினர், எல்லாக் கொள்கையினர்க்கும் இன்றியமையா வாழ்க்கை ஒழுக்கங்களைத் தெளிவாக எடுத்துக் கூறும் பெருமை வாய்ந்தது."

அறிஞர் கா. சுப்பிரமணிய பிள்ளை, (எம். ஏ. எம். எல்):- திருக்குறளில் கடவுள் கொள்கையைப்பற்றிய சொற்கள் யாவும் செந்தமிழிலே அமைந்து, நூலின் பொதுத் தன்மையை விளக்குவனவாயிருக்கின்றன. பிரமம், ஆன்மா, தத்துவம், ஞானம், வருணம், ஆசிரமம், வேதம், சாத்திரம், யாகம், விட்டுணு முதலிய சொற்கள் இதன் கண் காணப்படவில்லை. இல்லறம் துறவம் என்று மக்கள் வாழ்வு பிரிக்கப்பட்டதே ஒழிய வடநூலிற் கூறும் நால்வகை நிலைபற்றி அப் பகுப்பு அமையவில்லை. நால்வகைக் குலமும் இந்நூலில் விதந்து ஓதப்படவில்லை. பண்டைத் தமிழரது கடவுள் கொள்கையை நன்கு அறிந்து கொள்

வதற்கு இந்நூலே தக்க கருவியாம். வடநூன் முறையையும் ஆரிய அறநூற் பொது விதியையும் மறுத்துக் கூறுவது.

அறிஞர் அ. முத்தைய பிள்ளை, (எம். ஏ.):-மிகத் துரிதமாகப் பொருளாதார நிலை மாறுபடும் நாடுகளில் பலநாட்களுக்கு முன் சொன்ன உண்மைகள் பல, மற்ற நிலைகள் மாறலால் பொய்த்துவிடும். இப் பொய்யா மொழிப் புலவர் கூறுவது நம் நாட்டில் இன்றும் மெய்யாய் இருக்கின்றது.

அறிஞர் ச. சோமசுந்தர பாரதியார் :—"வடமொழி நூல்களின் வழி நூலாக வள்ளுவர் குறளை இயற்றினர் என்பது பொருந்தாக் கூற்றும். ஆரிய தரும சாத்திர முறை வேறு, தமிழ் அறநூன் மரபு வேறுகும்; இரு முறைகளையும் ஒத்துணர்ந்த வள்ளுவர் திருக்குறள் தமிழ் மரபு வழுவாது பொருளின்பப் பகுதிகளான அகப்புறத் துறையறங்களை மக்கள் வாழ்க்கை முறைக்காமாறு ஆராய்ந்து அறுதியிட்டு எடுத்து விளக்கும் தமிழ் நூல். தமிழிற் பெருமையுடைய அனைத்தும் ஆரிய நூல்களினின்று திரட்டப் பட்டிருப்பதாகக் காட்டி மகிழ்வார் சிலர்க்கன்றி, நடுநிலையாளருக்கு வள்ளுவர் குறள் தமிழில் தனிமுதலற நூலேயாகும் என்பது வெள்ளிடைமலை.

அறிஞர் S. S. அருணகிரிநாத முதலியார் :–"தமிழர்களின் நாகரிகத்தின் சாரமாக இருக்கும் திருக்குறள் உலகத்தில் உள்ள அறிவு வளரப்பெற்ற மக்கள் எல்லோராலும் கொண்டாடப் படுகின்றது. ஆனல், தங்களை அறிவு உள்ளவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகின்ற இக் காலத்துத் தமிழர்களில் குறளைக் கற்றவர்கள் எத்தனை பெயருளர் என எண்ணின் வருந்தவேண்டுவதாக இருக்கின்றது"

அறிஞர் வித்துவான் பாலூர் து. கண்ணப்ப முதலியார் :—"உண்மையில் ஒருவன் அறிவுபெற அவாவுறின், குறள்

ஒன்றே அவ்வறிவைக் கொடுக்கவல்லது. உலக நீதிகள் அனைத்தும் ஒருங்கே கொண்டு விளங்குவது குறள் ஒன்றேயாகும். ஆதலின், குறளை அறிந்தவன்தான் புலவன் (அறிஞன்) என்பது ஐயந்திரிபற விளங்குகிறது அன்றோ?

அறிஞர் கி. சாமிக்கண்ணு :—" திருவள்ளுவர் தம் பொய்யாமொழியைப் பிறமொழிச் சொற்கள் கலப்பற்ற தனித்தமிழ் நூலாய் அளித்துள்ளமை உணர்ந்து மகிழக் கடமையுடையோம்."

அறிஞர் நாரண துரைக்கண்ணன்:—"நம் நாட்டில் பிறப்புப் பற்றி உயர்வு தாழ்வு கற்பிக்கும் பேதமையை வருணசிரம தருமக் கொள்கையை அகற்றவே திருக்குறள் வந்தது"

அறிஞர் சுப்பிரமணிய பாரதியார்:—

" வள்ளுவன்தன்னை உலகினுக் கேதந்து
வான்புகழ் கொண்டதமிழ் நாடு"

அறிஞர் A. பாலகிருஷ்ண பிள்ளை, (பி. ஏ., பி. எல்,):-நம் தாய்மொழியாகிய தமிழில் எழுதப்பட்டதனால் திருக்குறள் பெருமையடைந்து விடவில்லை. இவ்வளவு அரிய பெரிய அறிவுநூல் தமிழில் எழுதப்பட்டிருப்பதுதான் தமிழ் மக்களுக்குப் பாராட்டுதல் அளிப்பதாயிருக்கிறது என்பதாகும். உலகில் மனித வாழ்க்கையின் உன்னத நிலையைச் சித்தரித்துக் கூறுவதால் திருக்குறளை மொழிப் பற்று, இனப்பற்று, நாட்டுப்பற்று என்னும் குறுகிய தாழ்ந்த நிலைக்கு இழுத்து வைத்தல் அடாததாகும். எனவே திருக்குறளில் தொடர்பு வைத்துக்கொள்ள விரும்பும் தனிப்பட்டவர்களையும் மக்களினத்தவரையும் அதன் ஆழ்ந்த உட்கருத்தை நோக்குமாறும் அது காட்டும் தனிப்பெரு முடிபை அடையுமாறும் வேண்டிக் கொள்கின்றேன். உலக சமாதானம் நிலவ வேண்டு

மென்பதும் இம்மானிலத்திலே மறுமை இன்பம் காண வேண்டுமென்பதுமே அதன் முடிபாம்.

**குறிப்பு** :—மொழிப் பெருமை, இனப் பெருமை, நாட்டுப் பெருமைகளுக்கும் திருக்குறளின் பெருமைக்கும் தொடர்பில்லை என்பது இவர் கருத்தானால் மறுக்கத்தக்கதாகும். தமிழ் மொழிப் பண்பில் தமிழினப் பண்பில் தமிழ்நாட்டுப் பண்பில் ஊறித் தெளியாத ஒருவரால் அக்கொள்கைகளைக் கைக்கொள்ளாத ஒருவரால் இத்தகைய அரிய பெரிய அறிவு நூல் எழுத வியலாதென்பது எமது பெருந்துணிபாகும். இப்படியே மேனாட்டு அறிஞர் பலரும் கூறுகிறார்கள்.

"தமிழர்களின் மனப்பண்பு உயர் ஒழுக்கத்தையே நாடி நின்றது என்பது இந்நூலால் தெளிவாக விளங்குகின்றது"

—**அறிஞர் சார்லஸ்.**

"அப்பெரியார் எடுத்தோதும் நீதிகள் நல்லொழுக்கமே விளை நிலமாய் அமையக்கூடிய பண்புவாய்ந்த ஒரு நாட்டிலன்றி விளையா"

—**அறிஞர் J. லாசரஸ்.**

அறிஞர் V. கனகசபைப் பிள்ளை:-"திருக்குறளாசிரியர், **மூடப் பழக்கவழக்கங்களாலும், குருட்டு நம்பிக்கைகளாலும்** தடைபடாது உய்த்துணரும் அறிவாளராக இருக்கவேண்டுமென்றும், அவர் 'உண்மை அறிவே (மெய்யறிவே) இன்பத்தின் தத்துவம்' என்ற கொள்கையுடையவர் என்றும் தோன்றுகிறது."

அறிஞர் P. N. அப்புசாமி அவர்கள் (B. A., B. L.) :—அமைதி (சாந்தம்) உடையதும், பெருமிதம் (கம்பீரம்) உடையதும், கடுமை நிறைவதும், அன்பு சொரிவதும், ஊக்கத்தை ஊட்டுவதும், ஆசையை அழுத்துவதும், நகைச்சுவை யுடையதும், நகாநிலை அடைவதுமான திருக்குறளின் ஒவ்வொரு பகுதியிலும், பகுத்தறிவையும் புலமையையும் அள்ளிவீசும் அருள் ஒளி மிளிர்கின்றது.

## பண்டைப் புலவர்களின் புகழுரைகள்

இறையனுர் :—

"என்றும் புலராது யாணர்நாட் செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையதாம்"

எக்காலத்தும் தன் சொல்லழகும் பொருளழகும் கெடாது, நெடுங்காலங் கழிந்து புதியகாலம் போந்து புகுந்து சென்ருலும், அக்காலங்களில் அழியாது, நிலை பெற்று நின்று, புதுப்புதுக் கருத்துக்களாகிய பூக்கள் மலர்ந்து புதிய இன்பமாகிய தேனை வறளாமல் சொரிந்து கொண்டே இருக்கும் வளமும் பண்புமுடையதாம்.

கபிலர் :—"தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட பனையளவு காட்டும் படித்து."

புல் நுனியிலுள்ள தினையினும் சிறிய நீர்த்துளி பெரிய பனைமரத்தின் உருவத்தைத் தன்னுள் காட்டுவது போல் சிறிய குறட்பா பெரியதினும் பெரிய பொருள் களைக் காட்டும் பண்பினை யுடையது.

பரணர் :—"வாலறிவின், வள்ளுவரும் தங்குறள் வெண்பா வடியால் வையத்தார், உள்ளுவவெல் லாமளந் தார் ஓர்ந்து"—மெய்யறிவுடைய வள்ளுவர் தம் குறளால் உலக மக்கள் உள்ளத்துள்ள எல்லாவற்றையும் ஆராய்ந்து அளந்து அறிந்தார்.

நத்தத்தனுர் :—"குறள் முழுதும் அறிந்தால் பெரும் புலவர் ஆகலாம்."

கோதமனுர் :—ஆரியர்கள் தங்கள் வேதங்களைப் பிறர் பார்த்தால், படித்தால் அதன் பெருமை குறையுமென்று மறைத்தார்கள். வள்ளுவர் குறள், மக்கள் யாவரும் படிக்கப் படிக்க அதன் பெருமை குறையாமல் மிகுந்து வளர்கின்றது.

மதுரைத் தமிழ் நாகனூர் :—"எல்லாப் பொருளும் இதன் பாலுள. இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லை."

மாங்குடி மருதனூர் :—"ஓதற் கெளிதாய் உணர்தற்கரி தாகி, தீதற்றோர் உள்ளுதொறும் உள்ளுதொறும் உள் ளம் உருக்கும்.

பாரதம் பாடிய பெருந்தேவனூர் :—"முப்பாற்குப் பாரதம் சீராமகதை மனுப் பண்டைமறை நேர்வனவோ இல்லை நிகர்."—திருக்குறளுக்குப் பாரதம், இராமாயணம், மனு நீதி நூல், பழைய வேதங்கள் யாவும் ஒப்பானவை களோ? ஆகமாட்டா. அன்றியும் இதற்கு நிகராக வேறு எந்த நூலும் இல்லை.

உருத்திரசன்ம கண்ணர் :—மணலைத் தோண்ட நீர் ஊறும்; மதலைகள் வாய் வைத்துண்ண தாய்க்கு முலைப் பால் ஊறும். திருக்குறளை ஆராயுந்தோறும் மதியுடைய புலவர்களுக்கு அறிவு ஊறும்.

உறையூர் முதுகூற்றனூர் :—திருக்குறளைப் படியாதவர் நாவிற்கு நன்மொழி கூறி நலம்பெறும் வகையில்லை. மனத்திற்கு சொற்சுவைகளை அறியும் உணர்வு உண்டா காது; நல்ல செயல் புரியும் தன்மை உண்டாகாது. ஆகவே வாழ்வில் நலம் உண்டாகாது.

நப்பாலத்தனூர் :—அறமென்ற அகலில் பொருளென்ற திரிபோட்டு இன்பமென்ற நெய் வார்த்துச் செஞ்சொல் லென்ற ஒளி கொளுத்திக் குறள் என்னும் தூண்டுகோ லிட்டு உலக மக்களின் அகவிருள் அகற்றும் விளக்கை வள்ளுவர் ஏற்றிவைத்தார்.

குலபதி நாயனூர் :—உள்ளக் கமலத்தை மலரச்செய்து அறியாமையாகிய அகவிருளை அகற்றலால், புறவிருளைப் போக்கும கதிரவனைவிட அதிக உயர்வுடையது திருக் குறள்.

தேனீக்குடிக் கீரனூர்:—குறளால் மக்கள் மனத்தில் பொய்க் கொள்கைகளில் இருந்த மெய் நம்பிக்கையெல்லாம் பொய்யாய் மறைந்துபோயின. மெய்க் கொள்கைகளின் மெய்மை நன்கு விளங்கின.

கொடி ஞாழல் மாணிபூதனுர்:—வள்ளுவனுர்தம் வாயில் கேளாதனவெல்லாம் கேட்டு, அறன் அறிந்தேம்; ஆன்ற பொருள் அறிந்தேம்; இன்பின் திறந் தெரிந்தேம்; வீடுந் தெளிந்தேம்.

கவுணியனுர்:—"சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய, வந்த வருவினைக்கு மாமருந்து."—திருக்குறளின் பண்பு, நினைத்தால் மனத்திற் கினிமையும் கேட்டால் காதுக்கினிமையும், சொன்னுல் (படித்தால்) வாய்க்கினிமையும் தரும் தன்மையதாம். வளரும் பெரிய தீவினைகளை வேர றுக்கும் மருந்துமாகும்.

இடைக்காடர்:—கடுகைத் துளைத்தேழ்கடலைப் புகட்டிக், குறுகத் தறித்த குறள்.

ஒளவையார்:—அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக், குறுகத் தறித்த குறள்.

இங்ஙனமன்றி இவைகளுக்கு மாறுக அன்றும் இன்றும் கூறியவர்களின் கருத்துக்களையும் காண்போம்.

## ஆராய்வில்லா அறிஞர் உரைகள்

சிலர், பிரமதேவனே வள்ளுவனுகப் பிறந்து, முன் வடமொழியில் தான் வெளியிட்ட ஆரிய வேதங்களின் சாரத்தைத் தமிழில் குறளாக வெளியிட்டான் எனக் கூறியிருக்கிருர்கள். சிலர், வேதம் மனுநூல் இவற்றின் பொருளையே வள்ளுவர் கூறினுர் என்கின்ருர்கள். இது, ஆரிய வேதங்கள் மனுநூல் இவற்றின் கருத்து இன்னதென உணராத அறியாமையாலும், பரம்பரையாகக்

கூறும் மூடத்தனத்தினுலும் கூறியதாகும். மனு நூல், ஆரியவேதம் இவைகளைப்பற்றி இந்நூலில் குறிப்பிட்டுள்ளவற்றைப் பார்த்து, வள்ளுவர் அறிவுக்குப் பொருந்தாத அந்த இழிந்த கருத்துக்களையும் கொள்கைகளையும் பின்பற்றித்தான் கூறினுரா என்பதை ஆராய்ந்து உண்மை உணர வேண்டுகின்ருேம். மேற்கண்ட வண்ணம் கூறும் சிலர் கருத்துக்களையும் கீழே தருகின்ருேம்.

உக்கிரப்பெருவழுதி :–"நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளாய் நான்முகத்தோன், தான்மறைந்து வள்ளுவனுயத் தந்துரைத்தான்."

ஆசிரியர் நல்லந்துவனுர் :—"அருமறை போற்றி உரைத்த பொருளெல்லாம் தோற்றவே முப்பான் மொழிந்த முதற் பாவலர்."

வெள்ளி வீதியார் :—"செய்யா மொழிக்கும் திருவள்ளுவர் மொழிந்த பொய்யாமொழிக்கும் பொருள் ஒன்றே." (செய்யாமொழி - மனிதனுல் செய்யப்படாமல் பிர்மா முகத்திலிருந்து பிறந்ததாகச் சொல்லப்படும்வேதங்கள்).

மாங்குடி மருதனுர் :—"ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி வேதப் பொருளாய் மிக விளங்கி."

காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக் கண்ணனுர் :—"மெய்யாய வேதப் பொருள் விளங்க–பொய்யாது தந்தான்."

மதுரைப் பெருமருதனுர் :—"வேத விழுப் பொருளை வெண்குறளால் வள்ளுவனுர், ஓத வழுக்கற்ற துலகு."

செயனூர்க் கொடுஞ் செங்கண்ணனுர் :—"வேதப் பொருளை விரகால் விரித்துலகோர் ஓதத் தமிழால் உரைசெய்தார்"

மகா வித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை :—"நான்முகத்தோன்.........வள்ளுவரென்ெருரு நாமமேவத் தோன்றி, முன்னுணர்ந்த மறையகத்தமைந்த அறமுதல் நாற்பொரு

ளும் மூன்றின் அடக்கித், திருக்குறளென்னும் நூல் செய்து......அளித்தான்.''

**தியாகராயச் செட்டியார் :**—'' நான் மறை முழங்கு நன்னு வுடைக் கடவுள் பெருகு பேரருளால் திருவள்ளுவராய் .........உதித்துப் புகன்ற, திருக்குறள் என்னும் செந் தமிழ் வேதம்.''

**தெய்வநாயகம் பிள்ளை :**—'' திருமாலுந்தியில் வந்த பிர மன், அருமறைப் பொருளைப் பெருநிலத் துதித்த மன் பதைக்கெல்லாம் இன்புற உணர்த்த, தன் தெய்வ உரு வம் கரந்து (மறைத்து) திருவள்ளுவராய் மாநிலத் துதித்து, அருளிய திருக்குறள்.''

**சுப்பராயச் செட்டியார் :**—'' தேன்முகப் பதும நான்முகப் புத்தேள், சீரிய தெய்வ ஆரிய மொழியால் நல்கிய அரு மறை(யை)த் தமிழினில் தருவான் செய்ய திருவள்ளுவ ரென்னும் பேர்கொண்டு உலகம் உய்யச் செய்தான்.''

**வி. கிருஷ்ணமாச்சாரியார் :**—'' திருக்குறள் வேத உபநிட தங்களின் சாரம்; திருவள்ளுவர் கலைமகள் காந்தனை பிரமனே என்று சொல்லத் தக்கவர்.''

**பண்டித ரத்னம் புலவர் திருநாவுக்கரசு முதலியார் :**—'' உன் னும் வேதாகமத்தின் கருத்தை யெல்லாம் நன்குணர ஊட்டி வைக்கும்.''

**பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் :**—'' இனி, திருக்குற ளின் ஒரு சிறப்பான பொருளை ஆராய்வோம். குறளில் ஆரியர் ஆசாரம், வேத வழக்கு ஆகியவை உண்டா இல்லையா என்பதே. பிற்காலத்து நூலாகிய திருக்குறளில் தமிழர்க்கு ஒத்த ஆரியக் கொள்கைகளை எடுத்து ஆண்டு இருக்கின் றார். திருக்குறள் **ஆரிய வழக்கொடு உடன்பட்ட நூலே.** தனித் தமிழர் கொள்கைகளைக் குறிப்பது மட்டுமன்றி **ஆரிய வழக்குகளையும் எடுத்தாளப் பின்வாங்கவில்லை.** எடுத்துக்காட்டா கப் பல குறள்களைக் குறிப்பிடலாம்.''

இத்தகைய பண்டிதர்கள் மனிதனுக்குரிய பகுத்தறிவை, தமிழனுக்குரிய தனி அறிவை ஆரிய நூல்களுக்கு அடிமையாக்கி அடகுவைத்து விட்டுக் கண்டபடிக் கூறுவதையே தம் கொள்கையாகக் கொண்டுள்ளார்கள். இதில் அவர்கள் பின்வாங்குவதில்லை. எனவே, அவர்களின் குருட்டுக் கொள்கைகளை வன்மையாகக் கண்டிக்க நாமும் பின்வாங்குவதில்லை.

பகுத்தறிவின்றிப் பரிமேலழகர் உரையைப் படித்துக் குருட்டுப் பாடஞ் செய்து அதை அப்படியே கக்குவதும், பரிமேலழகர் ஆரியக் கொள்கைகளுக் கேற்பக் கையாடல் செய்து திருத்திய இடங்களையும் அவற்றில் புகுத்தியுள்ள ஆரியக் கொள்கைகளையும் தெரிந்து கொள்ளும் திறனில்லாமலும், வள்ளுவர் உள்ளமுணரும் உணர்ச்சியில்லாமலும் பரம்பரையாகப் பலர் கூறி வந்ததையே கூறுவதும் எழுதுவதும் இவர்களின் வழக்கமாக இருக்கின்றன. இது இவர்களுடைய தன்னுணர்வற்ற தன்மையைத்தான் காட்டுகின்றது.

இனி, பண்டிதமணியார் எடுத்துக்காட்டிய பாடலிலிருந்தே இவர் கருத்தையும், கொண்ட கொள்கையையும் யாம் படுத்திக் (வீழ்த்தி) காட்டுதும்.

வள்ளுவர், "அவி சொரிந்தாயிரம் வேட்டல் என்னுங் குறளில் அவ்வாரிய வழக்கின் பெருமையினை நினைவு கூர்கின்றார்" என்கிறார் நம் பண்டிதமணியார்.

இதில், வள்ளுவர் ஆரியர் யாகத்தின் பெருமையை நினைத்துப் பெருமிதமடைகின்றாரா? அதன் இழிவை எடுத்து மொழிகின்றாரா என்பதை இக்குறளில் இவர் விடுத்த அடுத்த பகுதியையும் எடுத்துப் பொருத்தி அதன் கருத்தைப் பார்ப்போம். "அவி சொரிந்தாயிரம்

வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத் துண்ணுமை நன்று"
என்கிறுர் ஆசிரியர். பல உயிர்களைப் பலியிட்டு அவி சொரிந்து ஆயிரம் யாகங்களை (ஆரியர்) செய்வதைக் காட்டிலும்—அவற்றின் ஊனை யாகத்தின் பேரால் உண்ணுவதைக் காட்டிலும் ஒன்றனுடைய உயிரை யாகத்தில் கொன்று, அதன் ஊனை உண்ணுமலிருப்பதே மிகவும் நல்ல நெறியாகும் என்பதுதான் இதன் தெளிந்த பொருள்.

ஆரியர்கள் யாகத்தில் உயிர்ப்பலிகொடுத்து அதன் ஊனை உண்ணுதல் நல்லநெறி என்கிருர்கள். இங்ஙனமே அவர்கள் நூல்களும் கூறுகின்றன. இப்படி யாகத்தின் பேரால் உயிர்க் கொலை புரிந்து ஊன் உண்ணுதலைவிட யாகத்தில் உயிர்களைக்கொன்று ஊன் உண்ணுமலிருப்பது தான் நல்ல நெறியாகும் என்று திருவள்ளுவர் யாகத்தை மறுத்துக் கூறுகின்ருர். இது சாதாரண அறிவுடையவர்களுக்கும் விளங்கும் பொருளாயிருக்க, பண்டித மணிக்கு மட்டும் விளங்காமல்போன விபரமென்ன? 'வேட்டலின்' என்பதை 'வேட்டல்' என்பதோடு நிறுத்தி, வள்ளுவர் 'ஆரியர் யாகத்தின் பெருமையினை நினைவு கூர்கின்ருர்' என்று கூறிய காரணம் என்ன? புத்தி விளங்கவில்லையா, புல்லுருவிக் கொள்கையா? என்பதை உணர்வாளர் உணர்க.

மேலும், "'ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன் மறப்பர்' என்னுங் குறளில் ஆரியர் பெருமை கூறப்பட்டிருக்கிறது" என்றும், "மறப்பினும் ஒத்துக் கொளலாகும் என்னும் குறளில் பார்ப்பனர் நிலை குறிக்கப்படுகிறது" என்றும், "தென்புலத்தார் தெய்வம் என்னும் குறளில் ஆரியரது இறுதிக்கடன் குறிக்கப்படுகிறது; இறந்தார்க்குச் செய்கடன் குறித்தும் இக்குறள் எடுத்துணர்த்துகின்றது" என்றும் கூறுகின்ருர்.

வெளிப்படையாக விளங்கும் குறளுக்கே தெள்ளிய பொருள் தெரிந்துகொள்ளும் திறமையற்ற இவர்க்கு, வள்ளுவர் உள்ளமுணரும் உணர்வில்லா இவர்க்கு ஆரியப் பரிமேலழகர் திருக்குறள் மூலத்தில் கைவைத்துக் கன்னம் செய்து எடுத்த சொற்களையும் அதற்குப் பதில் தம் கொள்கைக்கேற்பத் திணித்த சொற்களையும் கண்டு பிடிக்கும் திறமும் உணர்வும் எவ்வாறு உண்டாகும்? ஒருவிதத்தும் ஒருகாலமும் உண்டாகா என்பது உண்மை. ஆதலால் பரிமேலழகர் உரையைப் படித்ததை அப்படியே பாடம் ஒப்பிக்கிறார் பண்டிதமணி. மேற்கண்ட குறட்பாக்களின் உண்மையான மூல பாடம் இன்ன என்பவற்றைத் திருக்குறள் உரையில் எடுத்துக்காட்டி அவை நாம் தகுந்த பாடம் என்பதற்கு அகச் சான்றுகளும் காட்டி விளக்குவோம்.

## திருக்குறளின் தெளிந்த கொள்கைகள்

மேற்கண்ட நல்லறிஞர்கள் பலரும் திருவள்ளுவரையும் திருக்குறளையும் பாராட்டிக் கூறும் சிறப்புரைகளின் திரண்ட பொருளை ஊன்றி ஆராயும் உணர்வுடையோர்களுக்குப் பல உண்மைகள் தெளிவாக விளங்கும். அவை வருமாறு :—

திருக்குறள் தமிழிலுள்ள எல்லா நூல்களிலும் தலை சிறந்தது; உலகிலேயே தனக்கு ஒப்பும் உயர்வுமின்றித் தனிப்பெருமையுடன் விளங்குவது; ஆரிய நூல்களாகிய வேதங்கள் அறமுறை நூல்கள் என்று அவர்களால் சொல்லிக்கொள்ளப்படும் மனு முதலான நீதி நூல்கள், அரசியல் நூல்கள், அர்த்த சாஸ்திரமெனப்படும் பொருள் நூல்கள், இன்ப நூல் என்று கூறிக்கொள்ளும் காமசாஸ்திரம் ஆகிய எல்லா நூல்களோடும் மாறுபட்ட

கொள்கைகளை யுடையது; அவைகளில் காணப்படும் இழிவுகளை மறுத்து ஒழித்து விழுமிய நெறியை விளக்குவது; தமிழ்ப் பெருமக்களின் மரபிற்குரிய தனிப் பண்பாட்டறிவுடன் அமைந்தது. ஆயினும், உலக அறிஞர்கள் ஒப்புக்கொண்டு போற்றும் பொதுநெறிகள் பொலிந்து பொதுமறையாக விளங்கக் கூடியதுமாம். இப்பொது மறையில் வள்ளுவர் கூறியுள்ள தம் மரபிற்குரிய தனிப்பெருங் கொள்கைகள் பலவற்றில் சிலவற்றையேனும் இவ்விடம் குறிப்பிட வேண்டுவதும் இன்றியமையாத தொன்ருகும்.

### வருணம், ஆசிரமம், ஒழுக்கம்

பிறப்பினுலொத்த மக்களினத்தாரை (பிர்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர என) நான்கு சாதிகளாகவும் அவற்றினுட் பிரிவுகள் *196 வகைகளாகவும் பிரித்து வைத்து அவரவர்களுக்குத் தனித்தனி ஒழுக்கங்களை வகுத்துக் கூறுவதும் (பிரமசரியம், கிரகத்தம், வானப்பிரத்தம், சந்நியாசம் என) நான்கு நிலைகளை (ஆசிரமங்களை) வகுத்துக் கூறுவதுமாகிய ஆரிய நூல்களின் வருணுசிரம தர்மக் கொள்கைகளை மறுத்துப் '**பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்**' என்பதால் மக்கட் பிறப்பினர் யாவருக்கும் சமமான பிறப்புரிமை உண்டு என்று உரைக்கின்ருர்.

வடநூல் முறைப்படி வகுக்கப்பட்ட நான்கு ஆசிரமங்களை அகற்றி, அன்பும் அறனும் பொருந்தியதாகிய இல்லற ஒழுக்கமும், இவற்றுடன் அருட்குணங்களோடு அகத்துறவு பூண்டொழுகுவதாகிய தவ ஒழுக்கமும் ஆகிய இருபேரொழுக்கங்களையே எடுத்துக் கூறுகின்ருர்.

---

* யஜுர் வேதத்தில் மனிதர்களுக்குள் 196 பிரிவுகள் உள்ளன என்று கூறப்பட்டுள்ளது.

## இறை, வழிபாடு, பயன்

கடவுள் பல்வேறு வடிவங்களில் பல்வேறு உலகங்களில் இருக்கிருரென்பதும், பல்வகைச் சடங்குகள் நிறைந்த வெளிப் பூசைகளால்தான் கடவுளை வழிபட வேண்டுமென்பதும், அங்ஙனம் வழிபாடு செய்வதால் எங்கேயோ உள்ள மோட்ச உலகில் உயிர்போய் இன்பமடையும் என்பதும் ஆரியர்களின் கொள்கைகளாகும்.

இந்தக் குருட்டுக்கொள்கைகளேயும், வறட்டுச் சடங்குகள் மலிந்த பொய்யாகிய வெளிப்பூசைகளேயும், இவைகளால் எங்கேயோ சென்று அடையும் இன்பத்தையும் ஆசிரியர் மறுத்து உரைக்கின்ருர். தூய பேரறிவு வண்ணமாகத் தனக்குவமை யில்லாது பேராற்றலுடன் எங்கும் தங்கி நிறைந்து விளங்கும் இறை ஒன்றே என்றும், அவ்விறைமைத் தன்மை அன்பால் மலர்ந்த அகத்தில் விளங்கித் தோன்றும் என்றும், அருள் வழி நின்று பொறிபுலன் வென்று பிறவுயிர்க்கு உதவும் பெரும் பணிபுரிவோர்களுக்கு அவ்விறையின் பேராற்றல் (அருட் சக்தி) சாருமென்றும், அதனுல் வினேயும் இடும்பைகளும் விலக இவ்வுலகில் இப்பிறவியிலேயே துன்பமெலாம் நீங்கிய பேரின்பத்தைப் பெறலாம் என்றும், இதுதான் பிறவியின் பெரும்பயன் என்றும் விளக்குகின்ருர். இதனுல் இறைமைக் கொள்கையிலும், வழிபடு முறையிலும், அடையும் பயனிலும் ஆரிய நூல்களோடு மாறுபட்டு உண்மையை விளக்குவதை உணரலாம்.

## உயர்வும் தாழ்வும்—ஒழுக்கமே உயர்வு

வருணந்தோறும் ஒழுக்கம் வெவ்வேருகப் பிரித்தும், உயர்ந்த வருணத்தவர்க்குத் தாழ்ந்த வருணத்தவர் அடங்கி நடந்து அடிமை புரிந்து உழைத்து உணவளித்து வாழ வேண்டுமென வகுத்தும், உயர்ந்த வருணத்தார்

சில சமயங்களில் தம் ஒழுக்கந்தவறினும் தவறில்லை, அதுவும் தருமமேயாகும் என்று மிகுத்தும் கூறும் வடவர்களின் தன்னலக் கொள்கையைத் தகர்த்து, மக்கட் பிறப்பினர் யாவரும் பொதுவாக உயர்ந்த மக்கட் பிறப்பிற்குரிய நல்ல ஒழுக்கத்தில் வழுக்கி வாழலாகாதெனவும், ஒழுக்க முடையவரே உயர்ந்தவர் ஒழுக்கம் வழுவியவரே தாழ்ந்தவர் எனவும் உரைக்கின்றார். ஆதலால் ஒழுக்கத்தை உயிரினும் ஓம்ப வேண்டுமென்றும், மக்கட் பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும் என்றும் கூறுகின்றார்.

## பொருளும் இன்பமும்; மானமும் உயிரும்

எத்துறையின் மூலமாகவாவது பெரும் பொருளீட்டி எவ்விதத்திலேனும் இன்பம் நுகர்தலே ஏற்றதாகும் என்ற ஆரியர்களின் இழிதகையுடைய புன்மை அவாவைப் புறக்கணித்து, தீதிலா நன்னெறியில் ஈட்டிய பொருளைக்கொண்டு அறமுறை தவருவகையில் துய்ப்பதே இன்பமாகும் என்றும் மற்றவை துன்பத்தின்பாற் பட்டனவேயாகும் என்றும் விளக்குகின்றார்.

வறுமையுற்ற காலத்தில் மானத்தை விட்டாவது தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்று கூறும் வடவர்களின் கொள்கையை மறுத்து, தன்னுயிர் நீப்பினும் தாய் பசித்திருப்பினும் உயிரினும் சிறந்த மானத்தை இழந்து வாழலாகாது என்றும், மானமிழப்பதை விட உயிரை இழப்பதே மேல் என்றும் வலியுறுத்திக் கூறுகின்றார்.

## ஏற்றலும் ஈதலும்

சிலர், உழைத்துத் தொழில் புரிந்து வயிறு பிழைக்கும் வகையறியாது எளிதில் மற்றவரை ஏமாற்றிப் பிழைப்பதையே பெருநோக்கமாகக் கொண்டுள்ளார்கள். "நீங்கள் நல்லுலகம் செல்ல எமக்குத் தானங் கொடுங்

கள்" என்று எல்லோரிடமும் எதையும் தானமாக ஏற்கும் இழிந்த தன்மையினை உடையவர்களாகவுமிருக்கின்றார்கள். எளிய மக்களுக்கு உணவு முதலியன அளித்துப் பசி நீக்கினால் தங்களுக்கு மேல் உலகம் கிட்டாதெனக் கூறித் தட்டிக் கழிக்கும் உலோபத் தன்மையினையும் உடையவர்களாயிருக்கின்றார்கள். இவற்றையே உயர்ந்த குல ஒழுக்கமாக (தருமமாக)க் கொண்ட அவர்களின் இழிந்த கொள்கைகளை அடியோடு மறுத்து "**நல்லாறெனினும் கொளல் தீது மேலுலகம், இல்லெனினும் ஈதலே நன்று**" என்று சவுக்கடி கொடுக்கின்றார்.

## புலை, கொலை, கள்

ஆரியர்கள் யாகங்களிலும் சிராத்தங்களிலும் பல வகையான உயிர்களைப் பலியிட்டு அவற்றின் ஊனைப் பக்குவம் செய்து உண்டு மகிழ்வதே தேவர்களுக்கும் பிதிரர்களுக்கும் மன நிறைவு (திருப்தி) அளிக்கும் எனக் கூறிக்கொண்டு ஊன் உண்ணும் கொடிய பழக்கத்தை யுடையவர்கள்; யாகங்களிலும், காமக் களியாட்டங்களிலும் மனதையும் அறிவையும் மயக்கும் மதுவைச் சோமபானம் என்னும் பெயரால் தேவர்களுக்குக் காட்டிக் குடித்துக் கூத்தாடும் தீய குடிப் பழக்கத்தையும் உடையவர்கள். ஆரிய நூல்களில் "யக்ஞம், சிராத்தம், சோமபானம்" என்ற பெயர்களால் **இக் கொடுமைகள்** கூறப்பட்டுள்ளன. புலனடக்கமின்றிப் புரியும் இந்தப் புல்லறிவுத் தன்மைகளை அடியோடு மறுத்து ஊன், கொலை, கள் இவைகளை எவ்வகையினும் விலக்கி வாழ்வதே அறிவுடைய மக்களின் சிறந்த வாழ்வாகுமென அறிவுறுத்துகின்றார்.

## அரசியல் – தண்டனை

உலகை நலமுடன் புரக்கும் நன்மதி பெற வேண்டிய மன்னன், தன்னலங் கருதும் புன்மதியாளர்களாலும்,

அவர்கள் காட்டும் மனு முதலிய பொய் நூல்களாலும் அறிவழிந்தும், கூடா ஒழுக்கங்களால் புலன்வழி மயங்கியும், நெறிபிறழ்ந்தும் நிலை தவருமல் குடிகளை முறை செய்து காப்பாற்றும் நெறியினையும் கூறுகின்றூர். சாதிக்கொரு நீதியும் தண்டனையும் கூறும் ஆரிய நூல்களின் கொடுமையை விடுத்து யாவரையும் ஒப்பநாடித் தகுந்த தண்டனை விதிப்பதே தகுதி எனவும் சாற்றுகின்றூர்.

## விதி, ஊழ், முயற்சி

விதி விதி என்று கூறி மதியினை மாய்த்து, ஊக்கத்தைப் போக்கி, சோம்பேறிகளாக்கித் தேம்பித் திரியச் செய்து மக்களை மடிமைக் கடிமைப் படுத்தி வாழ்வைப் பாழாக்கும் மடமையை அறிவால் ஓங்கி அடிக்கின்றூர். ஊழ் வலியுடையதாயினும் ஊக்கமென்னும் கோடரியால் தாக்கித் தகர்த்து ஒழித்துவிடலாம் என்ற உரத்தினையும் உணர்ச்சியையும் மக்களுக்கு உண்டாக்கி அவர்கள் வாழ்க்கையை வளம்படுத்துகின்றூர்.

## காமம், காதல்

ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் கண்டவிடத்துக் காமன் கணைகளால் தூண்டப்பட்டுக் கண்ணும் கருத்தும் நுண்ணிதின் உணராதும், எண்ணருங் குண நல இயல்பறியாதும் காம வேட்கையை நீக்கிக் கொள்வதொன்றையே நோக்கமாகக் கொண்டு கூடுவதும், கூட்டம் நிகழ்ந்தபின் நாட்டம் வேருகித் திரும்பவும் பொருந்தாமுறையில் பிரிவதுமாகிய கற்பிலாதிழிந்த காமக் களிப்பையே வடநூலார் (கந்தர்வ மணம்) யாழோர் கூட்டம் என்று புகழ்வர்.

தமிழ் அன்பின் ஐந்திணையாகிய அகத்திணையில் கூறப்படும் களவொழுக்கம் இத்தகைய இழிந்த தன்மை

யுடைய தொன்றன்று. இதற்கு முற்றிலும் முரணானது என்பதை ஆசிரியர் இன்பப் பாலில் இனிது எடுத்து இயம்புகின்றார். இதில் காமனும் வருவதில்லை, கணை களும் பாய்வதில்லை. மன்மதன் - காமன் என்ற தெய் வம் தமிழ் மரபில் இல்லை. இது இயற்கை உணர்ச்சி யின் எழுச்சியாம்.

### காதலும், மதியும்.

ஏற்ற பருவங்களில் ஆண், பெண் இரு பாலர்களும் தங்கள் அகத்தினின்றெழும் இயற்கை உணர்ச்சிகளை யும் உளப் பண்புகளையும் உரையானன்றி உறுப்பின் குறிப்புக்களால் உணரும் நுண்ணுணர்வினர் என்பதை யும், ஒருவர் ஒருவருடைய உயர்குணங்களை அறியும் அறிவாற்றல் உடையவர் என்பதையும், ஒருவர்க் கொரு வர் ஒத்த தன்மையினர் எனத் தெளிந்து அன்பும் அக மும் ஒன்றுபடும் அறிவின் தெளிவையுடையவர் என் பதையும் வகை வகையாக வகுத்துக்கூறி மதிநுட்பத்தின் மாண்பினை விளக்குகின்றார்.

### கந்தர்வமும் களவொழுக்கமும்

கந்தர்வக் கூட்டத்தில் கூடிய இருவரும் பிரிந்து வேறொருவரை நாடிக் கூடிக் கலந்து களியாட்டமாடும் கற்பிழிந்த இழிதகமை, களவொழுக்கத்தில் இல்லை. தெளிந்து துணிந்து கலந்த தலைமகனைத் தவிர பிறனைக் கனவிலும் கருதாது எவ்வகையிலேனும் அவனையே மணந்து வாழும் மாண்பினை யுடையதுதான் தமிழ்ப் பண்பொடுபட்ட களவொழுக்கம்; இங்ஙனம் தான் கரு திய தலைவனை அடையமுடியாத காரணத்தால் கற்பழிய நேரின் உயிர் விட்டேனும் கற்பை நிலைநாட்டும் உயர் நிலையையுடையதே தமிழர் களவொழுக்கம். இப் பண் பினையறியாத பலர் தமிழர் களவுப் புணர்ச்சி, ஆரியர்

களின் மணம் எட்டனுள் கந்தர்வ மணத்தைச் சார்ந்தது என்று கூறுவர். தமிழர்களின் தனிப்பெரும் பண்பை நூலாக்கவந்த தொல்காப்பியரும் இப்புனித களவொழுக்கத்தைப் புன்மை மிகுந்த ஆரியருடைய கந்தர்வத்தோடு தொடர்புபடுத்திக் கூறுகின்றார். இது மறுக்கத்தக்கதாம்.

"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கில்
காமக் கூட்டம் காணுங் காலை
மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்யாழ்த் துணையோ ரியல்பே."

—(தொல்-பொருள்-களவியல்-சூ. 1)

## பொருந்தாக் கூற்று

இன்பம் பொருள் அறமெனும் இம்மூன்றின் சிறந்த பண்பினின்றும் முரணுகாத அன்பொடு பொருந்திய ஐந்திணையில் நிகழும் களவொழுக்கத்திற்கு—காதல் ஒழுக்கத்திற்கு ஒப்பும் இல்லை; உயர்வும் இல்லை என்றே சொல்லவேண்டும். இங்ஙனம் கூறாது ஆரியர்களின் வேதங்களில் கூறப்பட்டும் அவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டும் வரும் மணம் எட்டனுள் கந்தருவ மணத்தின் இயல்பினையுடையது என்று கூறுவது பொருந்தாக் கூற்றாகும். இங்ஙனம் கூறுவது தமிழர்களின் காதலொழுக்கத்தின் தனிச் சிறப்புத் தன்மையை எவ்வகையிலாவது வட நூலோடும் வடவர் ஒழுக்கத்தோடும் இயைபுபடுத்திக் கூறவேண்டும் என்ற கொள்கையோடு கூறுவதாகும். இங்ஙனமே தமிழர்களின் தனிப் பண்பினைக் குறிப்பிடவேண்டிய பல இடங்களில் வடநூற் கொள்கைகளையும் வடவர்களின் செயல்களையும் வலிந்து இழுத்துக் கூறுவது இவருடைய வழக்கமென்பதை "**தொல்காப்பியமும் தமிழர் தனிப் பண்பும்**" என்ற ஆராய்ச்சி நூல் மூலம் விளக்குவோம். எனவே திருவள்ளுவர்

இன்பப் பாலின் இயல்பு, வடவர் நூலையோ கொள்கைகளையோ தொல்காப்பியருடைய கருத்தையோ பின்பற்றியதன்று என்பதும் ஆராய்வதற்குரிய தொன்றாகும்.

இவ்வாறாக எவ்வகையிலும் ஆரிய நூல்களுடனும், ஆரியர்களின் கொள்கைகளுடனும், வழக்க ஒழுக்கங்களுடனும், அவர்களுடைய சடங்குகள் மலிந்த பல தெய்வ வழிபாட்டுடனும் மாறுபட்டே திருவள்ளுவர் திருக்குறளை இயற்றியுள்ளார் என்பதை அறிஞர்கள் ஒவ்வொருவரும் தெள்ளத் தெளியத் தெரிந்துகொள்ள வேண்டும். இதைத்தான் மேலே குறிப்பிட்ட நல்லறிஞர்கள் பலரும் வலியுறுத்திக் கூறுகின்றார்கள். '**வள்ளுவர் கொள்கையும் வடவர் கொள்கையும்**' என்ற ஆராய்ச்சி நூலில் இவற்றை நன்கு விளக்கியுள்ளோம்.

## திருக்குறளின் பொருள் அடைவு

திருக்குறளில் என்னென்ன பொருள்கள் அடங்கியுள்ளன வென்பதைப் பற்றியும் ஒருவாறு அறிந்து கொள்ளவேண்டும். திருக்குறளில் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பால்கள் அமைந்துள்ளன. அறத்துப்பாலில் 38 அதிகாரங்களும், பொருட்பாலில் 70 அதிகாரங்களும், காமத்துப்பாலில் 25 அதிகாரங்களுமாக மொத்தம் 133 அதிகாரங்கள் உள்ளன. அதிகாரத்துக்கு 10 பாக்கள் வீதம் 1330 குறட்பாக்கள் அமைந்துள்ளன.

திருவள்ளுவர் அறத்துப்பாலில் முதலில் அமைத்துள்ள நான்கு அதிகாரங்களில் முறையே இறைமைத் தன்மையின் வன்மையைச் சார்வதால் உண்டாகும் நன்மைகளைப் பற்றியும், வானின் வண்மை நன்மைகளைப் பற்றியும், பிறர் நலங் காரணமாகத் தன்னலம் துறந்த பெரியார்களின் பெருமைகளைப் பற்றியும், அறத்தின்

(நற்செயல்களின்) தன்மை நன்மைகளைப் பற்றியும் அறிவிக்கின்றார். இவற்றைப் பாயிரம் என்று பலர் கூறுவார்கள்.

இதனை அடுத்துள்ள அன்பொழுக்கமாகிய பகுதியில் இல்வாழ்க்கையின் இயல்புகளையும், இதற்கு இன்றியமையாத வாழ்க்கைத் துணையாகிய மனையாளுக்குரிய மாண்புகளையும், நன்மக்களின் பண்புகளையும் நன்கு விளக்குகின்றார். அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றி அறிதல், நடுவு நிலைமை, அடக்கமுடைமை, பொறையுடைமை, ஒழுக்கமுடைமை என்ற கொள்ளத்தக்க நற்பண்புகளையும் எடுத்துக்கூறுகின்றார். பின்னர் அழுக்காறடைதல், கள்ளமுடைமை, புறங்கூறல், பயனில சொல்லல், பிறனில் விழைதல் முதலியன தள்ளத் தக்கனவெனவும், இவைகளில்லா வியல்பினைப் (பண்பை) பெற வேண்டுமெனவும் எதிர் மறை முகத்தால் எடுத்துக்கூறி, இவற்றிற்கும் இவை போன்ற பிற தீவினைகட்கும் அஞ்சி அவற்றினின்று அகன்று நல்வழியில் இல்வாழ்க்கை நடத்தவேண்டுமென உரைக்கின்றார். இறுதியில் வாழ்வில் மற்றவர்களுடன் கலந்து உதவி புரிந்து வாழ்வதாகிய ஒப்புரவறிதலைப் பற்றியும், எளியவர்களுக்கு இரங்கி அளிக்கும் ஈகையைப் பற்றியும், இவைகளாலும் பிறவகைகளாலும் வாழ்வில் பெறவேண்டிய புகழைப் பற்றியும் புகல்கின்றார்.

அருளொழுக்கமாகிய பகுதியில், அருட்குணம் நிறைந்து இன்னா செய்யாமை, வெகுளாமை, புலான் மறுத்தல், கொல்லாமை ஆகிய நன்னெறிகளில் சிறந்து நிற்பதே தவமென்று கூறுகின்றார். அத்தவமும் படிற்றொழுக்கமும் வெஃகலும் விலக்கியதாய் வாய்மையுடன் அமையவேண்டுமென்றும் அறிவுறுத்துகின்றார். வாய்மையாகிய விளக்கால் நிலையாமை யுணர்ந்து, துறவுள்ளம்

பிறந்து, மெய்யுணர்வுற்று, அவாவற்று மனவமைதி பெற்று பேராவியற்கைப் பெருநிலையாகிய அறிவு விளக்க நிலையில் அமைந்திருப்பதே வீட்டுநிலை என்பதைக் காட்டுகின்றார். ஊழ் என்பது ஒன்று உண்டு என்றும் அது வலியுடையதென்றும் கொண்டாலும், பின்னால் தளராத முயற்சியால் தகர்த்துப் புறங்காணலாம் என்ற உரத்தையும் ஊட்டுகின்றார்.

பொருட்பாலில் உள்ள அரசியற் பகுதியில் மக்களைக் காக்கும் அரசனுக்கும் அரசுக்கும் அமையவேண்டிய நற்பண்புகளை நன்கு விளக்குகின்றார். ஆட்சி சரிவர நடைபெற அரசனும் நாட்டு மக்களும் கல்விகற்று, கல்லாமை நீக்கி, கேள்வி நிறைந்து, அறிவுடைமையோடு அமைந்து விளங்கவேண்டுமெனவும் அறிவுறுத்துகின்றார். மேலும் குற்றம் நீக்கி, சிற்றினம் சேராது, பெரியாரைத் துணை கொண்டு, தெரிந்து செயல் வேண்டுமெனவும், வினை செய்தற்கண் வலியும் இடமும் காலமும் அறிந்து செய்ய வேண்டுமெனவும் கூறுகின்றார்.

குடிகளும் அரசனும் ஆட்சிக்குரிய அமைச்சர் முதலாயினோரைத் தேர்ந்தெடுத்தலும், அவரவர்களுக்குரிய வினைகளைத் தெரிந்து கொடுத்து நடத்துதலும், சுற்ற முதலானவர்களைத் தழுவி நடத்தலுமாகிய வகைகளை விவரித்துக் கூறுகின்றார். இங்ஙனம் ஆளும் அரசன் சோர்வும் மறதியுமின்றிச் செங்கோல் நடத்தி, கொடுங்கோல் அகற்றி வெருவந்த விலக்கி, கண்ணோட்டத்துடன் ஆட்சியை நடத்த வேண்டுமெனவும் கழறுகின்றார். ஆட்சிக்குரிய ஒற்றர்களை ஆளும் முறைகளையும், எடுத்த வினையை ஊக்கத்துடனும் சோம்பலின்றியும் இடைவிடாப் பெருமுயற்சியுடனும் இடையில் நேரும் இடுக்கண்களை உடைத்தெரிந்து முற்ற முடிக்கும் முறைகளையும் மொழிகின்றார்.

அங்கவியலில் அமைச்சர்க்குரிய தன்மைகளைப் பற்றியும், அவர்களுக்கு வேண்டிய சொல்வன்மை, தூய தன்மை, வினைத்திட்பம், வினை செய்வகை முதலியவைகளைப் பற்றியும் கூறுகின்றார். தூதுவர்க்குரிய பண்புகளையும், அமைச்சர் முதலாயினோர் மன்னரைச் சார்ந்தொழுகு முறைகளையும், அரசர் முதலாயினோரின் குறிப்பறிந்தும் அரசவையின் இயல்பறிந்தும் சொல்ல வேண்டியவைகளை அவைக்கு அஞ்சாது எடுத்துக்கூறி, மன்னர்க்கும் மக்கட்கும் நன்மைசெய்யும் அங்கத்தினர் கடமைகளையும் விளக்குகின்றார்.

பொருளியலில் நாடு, அரண், பொருளாக்கம் முதலியவைகளைப் பற்றியும், இவற்றைக் காப்பாற்றும் படையின் இயல்பைப் பற்றியும், படைவீரர்களின் மறப் பண்பைப் பற்றியும் கூறுகின்றார். பொதுவியலில் உலகக் கூட்டு வாழ்விற்குரிய நட்பினைப் பற்றியும், நட்பாராய்தல், நட்பிற் பிழை பொறுத்தல், தீ நட்பு, கூடாநட்பு, பேதமை, புல்லறிவாண்மை இவைகளைப் பற்றியும் கூறுகின்றார். வாழ்வில் பகைமை என்பது வேண்டாத தொன்றென்பதையும், தடுக்கவியலாது ஏற்படின் அதற்கேற்ப நடந்து கொள்ளும் முறைகளையும், எவ்வகையினும் அறிவிற் பெரியாரிடம் பிழைசெய்து அவர் பகையைத் தேடிக்கொள்ளலாகா தென்பதையும் விளக்குகின்றார்.

அறிவில்லாமல் ஆண்மகனைத் தன்வயமாக்கக் கருதும் பெண்வழிச் சேறலும், பொருட் பெண்டிராகிய பொது மகளிரைச் சேர்தலும், கள்ளுண்ணல் சூதாடல் முதலான குற்றங்களும் நீக்கித் தன் உணர்வுடன் வாழவேண்டுமெனவும் சாற்றுகின்றார். நோயற்ற வாழ்க்கையை நடத்த உணவு முதலியவைகளில் கைக்கொள்ள வேண்டிய முறைகளையும் நோய் உற்றால், அதற்குரிய

காரணங்களை ஆராய்ந்து நீக்கிக்கொள்ளும் வகைகளையும் மருந்தென்னும் தலைப்பில் வரைந்துள்ளார்.

குடியியல் என்னும் ஒழிபியலில் அரசியலும் உலகியலும் நன்கு நடைபெற குடிமக்கள் எவ்வளவு பண்பட்டவர்களாக இருக்கவேண்டும் என்பதைப்பற்றிக் குடி, மானம், பெருமை, சான்றாண்மை, பண்புடைமை, நன்றியில் செல்வம், நாணுடைமை, குடிசெயல் வகை என்ற தலைப்புக்களில் விளக்கமாக உரைக்கின்றார். உலக வாழ்விற் கின்றியமையாத உணவை அளிக்கும் உழவுத் தொழிலின் பெருமையை ஒரு அதிகாரத்தில் உரைக்கின்றார். உழைத்து வாழாது வறுமையுற்றிருக்கலாகா தெனவும், வறுமையுற்றார் மானம் விட்டு வந்து இரந்தால் இரங்கிக் கரவாது அளிக்கவேண்டுமெனவும், இரத்தலும் கரத்தலுமாகிய இழிசெயலுக் கிடங்கொடாமல் உழைத்து அதனால் கிடைத்த உணவையுண்டு வாழ்வதே உயர்ந்த வாழ்வெனவும் வலியுறுத்திக் கூறுகின்றார். வாழ்க்கையில் மேற்கூறிய நற்பண்புகள் அமையப் பெறாதவர்கள் கயவர்களென்றும், அவர்கள் இயல்புகள் இன்னவென்றும் அவர்களை அறிந்து நடந்துகொள்ளவேண்டுமென்றும் இறுதியில் கூறுகின்றார்.

காமத்துப்பாலில் பருவமும் அறிவும் நிறையப்பெற்ற ஒரு தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் கண்டு, உரையானன்றிக் குறிகளால் ஒருவர் மற்றவருடைய மனமும் குணமும் அறிந்துகொண்டு, அன்புடை நெஞ்சங் கலந்த வழி நலந்தரு முறையில் கூடி இன்பவாழ்வை நடத்தும் இயல்பினைப்பற்றி இயம்புகின்றார். இடை இடையே பிரிந்துசெல்ல நேரும்போது வருந்தி இருந்தும் வந்தவழி மகிழ்ந்தும் வாழும் வாழ்வைப்பற்றியும் கூறுகின்றார். தலைவனிடத்துத் தவறிலை யெனினும் புலவியைப் புகுத்திப் புதுப்பயன் காணவேண்டி ஊடியும்,

வாடியும், கூடி முயங்கியும் இன்பத்தைப் பன்மடங்குப் பெருக்கி இனிதாக நுகரும் நுண்ணுணர்வுத் திறத்தினையும் நுவலுகின்றார்.

இவைகள் திருக்குறளில் செறிந்து நிறைந்து திகழும் விழுமிய பொருள்களாம். திருக்குறளில் என்ன கூறப்பட்டுள்ளது என்று அறிய விரும்புவோர்க்கு ஒருவாறு உரைத்தோம். பொதுவாகக் கூறின் மக்கள் வாழ்க்கைக்கு வேண்டியவைகள் யாவும் அமைந்துள்ளன எனக் கூறுவதே அமையும். முழுதும் அறிய விரும்புவோர் திருக்குறளுக்குச் சரியான முறையில் எழுதிய உரையுடன் பார்த்து அதன் அருமை பெருமைகளை அறிந்து மகிழவேண்டுகின்றோம்.

## திருக்குறளின் பிறமொழிப் பதிப்புகள்

வீரமாமுனிவர் என்னும் திரு. C. J. பெஸ்கி என்பவர், திருக்குறளை இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்தார்.

டாக்டர் திரு. கிரால் என்பவர், இலத்தீன் மொழியிலும் ஜெர்மன் மொழியிலும் மொழிபெயர்த்தார்.

திருவள்ளுவர் குறள் என்று இலத்தீன் மொழியில் செய்யுள்வடிவில் செய்யப் பட்டுள்ளது (ஆசிரியர் பெயர் விளங்கவில்லை.)

திரு. E. ஏரியல் என்பவர் பிரஞ்சு மொழியில் மொழி பெயர்த்தார்.

திரு. M. லெமரேஸ் என்பவர் பிரஞ்சு மொழியில் மொழி பெயர்த்தார்.

திரு. லூயி ஜேகோலியா என்பவர் அறம் பொருள் மட்டும் பிரஞ்சு மொழியில் மொழிபெயர்த்தார்.

திரு. G. பாரிகோ பாண்டெனே என்பவர் காமத்துப்பாலை பிரஞ்சு மொழியில் மொழிபெயர்த்தார்.

திரு. A. F. காமெரஸ் என்பவர் குறளை அப்படியே ஜெர்மன் எழுத்தில் எழுதி ஜெர்மன் மொழியிலும் மொழி பெயர்த்தார்.

திரு. பிரிடெரிக் ரக்கெட் என்பவர் ஜெர்மன் மொழியில் சிலபகுதிகளை மட்டும் மொழிபெயர்த்தார்.

திரு. F. W. எல்லிஸ் என்பவர் அறத்துப்பாலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

திரு. W. H. ட்ரூ என்பவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

திரு. C. E. கவர் என்பவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

திரு. E. J. ராபின்சன் என்பவர் முதல் 240 செய்யுட்களை ஆங்கிலத்தில் செய்யுள் வடிவில் மொழிபெயர்த்தார். இவர் தெய்வப் பறையன் என்ற ஒரு நூல் செய்யுளில் ஆங்கிலத்தில் செய்துள்ளார்.

திரு. J. லாசரஸ் என்பவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

திரு, G. U. போப் என்பவர் ஆங்கிலத்தில் செய்யுள் வடிவில் செய்துள்ளார்.

திருமதி. திருநாவுக்கரசு அம்மையார் அவர்கள் "திருக்குறள் பொறுக்கு மணிகள்" என 366 குறள்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

திரு. வா. வே. சு. ஐயர் அவர்கள் திருவள்ளுவர் திருக்குறள் என ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

திரு. H. A. பாப்ளி (B. A.) என்பவர் திருவள்ளுவர் தமிழ் வேதம் என ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

கனுபர்த்தி வேங்கடராம திரு. வைத்திநாத நாதர என்பவர் தெலுங்கில் மொழிபெயர்த்தார்.

திரு. அப்பா தீட்சிதர் என்பவர் அறத்துப்பாலை நீதி குசுமமாலா என்ற பெயரில் வடமொழியில் (சமஸ்கிருதத்தில்) மொழிபெயர்த்தார்.

திரு. க்ஷேமானந்த ராஹத் என்பவர், இந்தியில் மொழி பெயர்த்தார். திருவனந்தபுரம் உயர்தர நீதிபதி திரு. கோவிந்தபிள்ளை அவர்கள் மலையாளத்தில் மொழிபெயர்த்தார்.

திருக்குறளுக்குப் பழைய உரைகள் தவிர பலபேர்கள் பலவகைகளில் உரை எழுதி உள்ளார்கள். பலர் ஆராய்ச்சிக் கட்டுரைகளாகவும் நூல்களாகவும் பல எழுதியுள்ளார்கள். இங்ஙனம் நூற்றுக்கு மேற்பட்ட பதிப்புகள் வெளிவந்துள்ளன. இப்போது பள்ளிக்கூட மாணவர்களுக்குப் பாடமாக வைத்துள்ளபடியால் புதிதாக நூற்றுக்கு மேற்பட்டவர்கள் ஒவ்வொரு வகுப்பிற்குரிய பகுதிகளுக்கு மட்டும் உரை எழுதியுள்ளார்கள். திருக்குறளுக்காகவே பல பத்திரிகைளும் வெளியீடுகளும் வெளிவருகின்றன. சில பத்திரிகைகளிலும் திருக்குறளைத் தொடர்பாக வெளியிடுகிறார்கள். இவைகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விதமாக உரைகள் வெளிவருகின்றன. இன்னும்வந்து கொண்டே இருக்கும். இவைகளை விரிவாக இங்கு எழுத இடம் போதாதென விடுத்தோம்.

## திருக்குறளும் உரைகளும்

உலக அறிஞர்களால் புகழப்பட்டும் பல மொழிகளில் பல பதிப்புக்களாக மொழி பெயர்க்கப்பட்டும் பெருமையுடன் விளங்கும் திருக்குறளுக்குப் பலபேர் உரை எழுதியிருக்கின்றார்கள். அவர்களில், பழைய

உரை ஆசிரியர்கள் தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிமேலழகர், பருதி, திருமலையர், மல்லர், கவிப் பெருமாள், காளிங்கர் எனப்பதின்மர் ஆவார்கள். இவ் வுரைகளில் பல எக்காரணத்தினலோ இருக்குமிடம் தெரியாமல் மறைந்து விட்டன. ஏன்—இறந்துபட்டன வென்றே எண்ணிவிடலாம்.

இப்போது ஆசிரியர் பெயர் தெரியாத உரைகள் மூன்றும் மணக்குடவர், பரிமேலழகர் இவர்களுடைய உரைகளும்தான் உள்ளன. இவற்றிலும் மணக்குடவர், பரிமேலழகர் இவ்விருவருடைய உரைகளே அச்சிட்ட புத்தகங்களாக அமைந்துள்ளன. மற்ற உரைகள் அரசாங்கக் கையெழுத்துப் புத்தக சாலையில் ஓலைச்சுவடி வடிவில் உள்ளன. இவைகளன்றிப் பழைய உரைகளில் சில, பலவிடங்களில் இருப்பதாகக் கூறப்படினும் துருவிப் பார்த்தால் இல்லை என்ற சொல்லே இருப்ப தாகத் தெரிகிறது.

## பரிமேலழகர் உரை

பழைய உரைகள் பலவற்றுள்ளும் பரிமேலழகர் உரையே மிகவும் சிறந்ததென இதுவரையில் பல புலவர் களும் ஒருமுகமாகப் பாராட்டிக் கூறியுள்ளார்கள். இன் றும் புகழ்ந்து உரைக்கின்றவர்களும் இருக்கின்றார்கள். இங்ஙனம் பாராட்டிக் கூறுவதை அடியில் வரும் பாடல் களால் அறியலாம்.

## உரைச் சிறப்புப் பாயிரம்

" திருத்தகு சீர்த்தெய்வத் திருவள் ளுவர்தம்
கருத்தமைதி தானே கருதி—விரித்துரைத்தான்
பன்னு தமிழ்தேர் பரிமே லழகனெனு
மன்னுமுயர் நாமன் மதித்து."

“பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ—நூலிற்
பரித்த வுரையெல்லாம் பரிமே லழகன்
தெரித்த வுரையாமோ தெளி.”

இவை பரிமேலழகர் உரையின் இறுதியில் உரைச் சிறப்புப்பாயிரம் என்ற தலைப்பில் காணப்படும் பாடல்களாம். இங்ஙனம் உரையைச் சிறப்பித்துப் பாயிரம் பாடியவர் பெயர் முதலியன விளங்கவில்லை. உரை யெழுதப்புகுந்த பரிமேலழகர் உரைப்பாயிரம் என ஒன்றை எழுதி முன்னே வைத்துள்ளார். அதனியல்பைப் பின்னர் ஆராய்வோம். இறுதியில் இவ்வுரைச் சிறப்புப்பாயிரம் என்ற தலைப்பில் இப்பாடல்களை எழுதிவைத்தவர் அவரோ வேறெவரோ அறியேம். திருக்குறளுக்குப் பலபேர்கள் உரை இயற்றி இருந்த போதிலும் பரிமேலழகர் செய்த உரையைப்போல உயர்வுடைய உரை உண்டோ என்பதே இவற்றின் பொருளாம். இதைப் பின்பற்றியே பின்வந்த புலவர்களும் பரம்பரையாகப் பரிமேலழகர் உரையைப் பாராட்டுவதில் பின்னடையாமல் முன்னேறி வந்துள்ளார்கள். அவர்களிற் சிலரையேனும் ஈண்டறிமுகப்படுத்துவோம்.

திருச்சிராப்பள்ளி மாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை எனபவர் “பாணினி வியாகரணத்திற்குப் பதஞ்சலி மகாபாஷியம் செய்ததுபோல, திருக்குறளின் நூற்கருத்துணர்ந்து மொழிந்தாரென்று சொல்லும்படிப் பரிமேலழகர் உரை கூறினர்” என்று பாராட்டிப் பகர்கின்றார்.

தியாகராயச் செட்டியார் என்பவர், “பாடல்சால் சிறப்பிற் பதின்மார் செய்த நாடுறும் உரைகளில் பீடமைந் தோங்கும் பரிமேலழகர் பண்ணியவுரை” என்று புகழ்ந்து புகல்கின்றார்.

தெய்வநாயகம் பிள்ளை என்பவர், "பொற்பமர் தருக்க ளில் கற்பகமென்னப், பலர் உரையுள்ளும் நிலவுற விளங் கும், பரிமேலழகர் பரிவுரை" என்று சிறப்பித்துச் செப்புகின்றார்.

சோடச அவதானம் சுப்பராயச் செட்டியார் என்பவர், "தருமர் முதலிய சால்பினர் வகுத்த, திருகில் பேருரை களிற் சிறந்து நிலை இய, வரிமேலியல் புகழ்ப் பரிமேலழகர், உளங்கனிந்தியற்றிய வளங்கனியுரை" என்று உயர்த்தி உரைக்கின்றார்.

சீ. வேணுகோபால் நாயகர் என்பவர், "அரிய உரை யென அணிபெற உலகர் பரிமேலழகரைப் படித் தின்புறுவர்" என மொழிகின்றார். இத்தகைய புலவர் கள் இன்னும் எத்தனையோ பேர்கள் இருக்கின்றார்கள்.

இங்ஙனம் ஒருவர் பின் ஒருவராக உரைத்து வந்த காரணத்தாலும், உட்கருத்தறியும் உணர்விலாக் கார ணத்தாலும் இந்தப் பரிமேலழகர் உரையே மற்றெந்த உரைகளைக் காட்டிலும் உயர்ந்ததெனவும் சிறந்ததென வும் புலவர் பலரும் போற்றிப் புகழ்ந்து வந்தார்கள். ஆதலால் இந்த உரையின் கருத்தெண்ணுமல், எழுத் தெண்ணிப் படித்தும் குருட்டுப் பாடம் பண்ணியும் இத ஞல் தனிச்சிறப்புப் பெற்றதாகத் தருக்கித் திரியும் புலவர்களும் பலர் உளர். அவர்களைப் புகழும் புலவர் களும் தமிழ் உலகில் பலர் உளர்.

இக்காரணங்களால் தமிழில் தேர்ச்சிபெற விரும் பும் மாணவர்களுக்கும், மதுரைத் தமிழ்ச் சங்கம், சென்னைப் பல்கலைக் கழகம், அண்ணுமலைப் பல்கலைக் கழகம், சைவ சித்தாந்தக் கழகம் இவைகளில் நடத்தும் பண்டிதத் தேர்வு. வித்துவான் தேர்வு, தமிழ்ப் புலவர் தேர்வுகளுக்கு உரிய பாடத்திட்டங்களில் திருக்குறள்

பரிமேலழகர் உரையையே பாடமாக வைத்துள்ளார்கள். ஆதலால் இதைப் படித்தே பலரும் பட்டமும் பெற்றுள்ளார்கள்.

இஃதன்றியும் திருக்குறளின் பெருமையைக் கேள்வியாலறிந்தவர்கள் திருக்குறளைப் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று புலவர்களைக் கேட்டால், பரிமேலழகர் உரையே சிறந்தது, அதை வாங்கிப் படிக்க வேண்டுமென வழிகாட்டி விடுகின்றார்கள். பிற்காலத்தில் திருக்குறளுக்கு உரை எழுத வந்தவர்களில் ஓரிருவர் தவிர, மற்றவர்களெல்லாரும் பரிமேலழகர் உரையைப் பின்பற்றியே விரிவாக்கியும், சற்று முன் பின் மாற்றியும் தங்கள் உரைகளை எழுதி வெளியிட்டுள்ளார்கள்.

## பரிமேலழகர் உரையின் திறன்

பரிமேலழகர் உரையோ, புலவர்களும், புலவர்களாக விரும்பும் மாணவர்களும் படிக்கும்போதே திகைத்து தடுமாறிப் பொருள்தேடித் தெரிந்துகொள்ளக் கூடிய ஓர் உரையாகும். பொதுமக்களிடம் இவ்வுரையை வாங்கிப் படியுங்கள் என்று வழிகாட்டி விட்டால் அவர்கள் என்ன செய்வார்கள். பலதரம் படித்துப் பார்த்தும் ஒன்றும் புரியவில்லையே குறளைவிட உரை கடினமாக இருக்கின்றதே எப்படிக் குறளின் கருத்தைத் தெரிந்து கொள்வது என்று கேட்டால், "தானாய்ப் படித்துவிட முடியுமா? தகுந்த ஆசிரியர்களை அடுத்து முறையாகப் படித்துக்கொள்ள வேண்டும்" என்று புலவர்கள் புகல்வார்கள். தகுந்த ஆசிரியரை அடைந்து முறையாகப் பாடங் கேட்டறிவதற்குத் திருக்குறள் மூலபாடமே சாலும். (போதும்.) உரை என்று ஒன்று வேண்டியதில்லை.

உரையென்றால் மூல பாடத்தின் முழுக் கருத்தையும் விளக்கமாக யாவரும் அறிந்துகொள்ளும் முறையில் தெளிவான சொற்களைக்கொண்ட எளிதான நடையில், படிப்போர் உள்ளத்தில் படியும்படி உரைப்பதேயாகும்.

சில்வகை எழுத்திற் பல்வகைப் பொருள்களைச் செறித்து நிறைத்துத் திட்ப நுட்பத்துடன் இயற்றப் பெற்றுள்ள செய்யுள் நடைக்கு, பொருள் விளங்கும்படி உரைக்கும் உரைதான் சிறந்த உரையாகுமேயன்றி, உரைக்கு வேறு ஒரு விளக்க உரை தேடும்படியாகவும் தகுந்த ஆசிரியரைத் தேடிக் கேட்டுத் தெரிந்துகொள்ளும் வகையிலும் உரைப்பது உரையாகுமா? பொன்னின் பொலிவும் மாற்றுயர்வின் மதிப்பும் காண்பதற்கு உரை கல்லில் உரைத்துப் பார்க்கின்றோம். மாற்றுயர்வையும் மதிப்பையும் அளவிட்டறிகின்றோம். உரை கல்லில் உள்ள உரையின் மதிப்பை அறிய வேறொரு கருவியும் வேண்டுமென்றால் உரை கல் எதற்கு? உரைப்பது எதற்கு? என்பது விளங்கவில்லை. இந்த முறையில் பரிமேலழகர் உரை மக்கள் படித்தறிந்து பயன்பெற வியலாவகையில் இருக்கின்றது. இதற்கு எடுத்துக் காட்டுகள் பின்னால் காட்டுவோம்.

## உரையின் மாறுபாடு

பிறநாட்டுப் பேரறிஞர்களும் நம் நாட்டு நல்லறிஞர்களும் திருக்குறளில் கூறப்படும் எந்தச் சிறந்த கொள்கைகளுக்காகப் பாராட்டிப் புகழ்கின்றார்களோ அந்தக் கொள்கைகளுக்கு மாறானவைகளை வலிந்து புகுத்தியிருக்கின்றார். இதனால் திருக்குறளின் பெருமையைக் குழி பறித்து வீழ்த்தவே உரை எழுதியிருக்கின்றார் எனத் தெரிகின்றது. ஆனால், மேற்கண்ட பாடல்களாலும் மற்ற புலவர்களாலும் பரிமேலழகர் உரைக்குக் கூறும்

பெருமை பரம்பரையாக வந்த குருட்டுத் தனத்தால் கூறுவதும் உண்மைக்கு மாறுனதும் ஆராய்ச்சியறிவுடையவர்களால் மறுக்கத் தக்கதுமாகும்.

இங்ஙனம், பரம்பரையாகப் பல புலவர்களால் புகழப்பட்டு வரும் உரையை இன்று யாம் குற்றமுடையதென்று கூறுவோமேயானுல் புலவர்கள் ஒப்புக்கொள்ளுவார்களா? எளிதில் தான் விடுவார்களா? எத்தனை எதிர்ப்புகள், எத்தனை மறுப்புகள் எழும் என்பதையும் அறிவிலாதவனென்றும் உரை நயம் உணராதவன் என்றும் சொல்லி எள்ளி நகையாடுவார்கள் என்பதையும் யாம் அறிவோம். ஆயினும் திருக்குறளுக்கு உரை எழுதப் புகுந்த பரிமேலழகர் குறளின் பெருமைக்கே படுகுழி பறித்துள்ளதை எடுத்துக்காட்டாமல் இருக்க எமது மனம் இடம் தரவில்லை. இப்படிச் செய்வது ஒரு தமிழ் மகனின் தவருக் கடமையாகும் என உணர்ந்தே இதை எழுதலானேம்.

## மரபுநிலை திரிந்த உரை.

தமிழ்க்குடியிற் பிறந்து தமிழ் மரபுடன் வளர்ந்து தமிழரியல்பொடு வாழ்ந்த தமிழ்ப்பேரறிஞர் ஒருவர் தமிழ்ப் பண்பாட்டறிவுடன் அருளிய பெருநூலாகிய திருக்குறளுக்குத் தமிழ் மரபறிந்த தமிழ் அறிஞர், ஒருவர் "மரபுநிலை திரியாமாட்சியவாகி" என்பதற்கிணங்க மரபுநிலை திரியாதவிழுமிய உரை எழுதி வெளியிட வேண்டும். இங்ஙனம் எழுதப்படும் உரைதான் பழுதிலாப்பண்புடன விளங்கும் ஆசிரியர் கருத்துக்கும் பொருத்தமாக அமையும்.

இவ்வாறன்றித் தமிழ் மரபும் பண்பும் அறியாத ஒருவர்—தமிழர் கொள்கைகளுக்கு மாறுபட்ட வேத விதிகளையும், மனுதர்ம சாத்திர முறைகளையும் நம்பும்

ஒருவர்—அவற்றையே வாழ்க்கையின் கொள்கைகளாகக் கொண்ட ஒருவர் எழுதிய உரை எவ்வாறு பொருந்தும்.

### உரை எழுதியதன் நோக்கம் என்ன?

இவர் ஏன் உரை எழுத முன்வந்தார் என ஆராய்வதும் நமது கடமையாகும். பண்டைத்தமிழ் நாடாகிய இந்தியாவில் புகுந்த ஆரியர்கள் தமிழ் மரபினின்றும் பெருகிப் பிரிந்து வடபகுதியில் வாழ்ந்து வந்த திராவிடப் பெருங்குடி மக்களை மயக்கி, வயமாக்கித் தங்கள் இன நலத்திற்காக எழுதப்பட்ட வேதம், மனுநீதி முதலான ஆரிய நூல்களைக்காட்டித், தாங்கள் உயர்ந்தவர்கள் என்பதை நிலை நாட்டிக்கொண்டு எல்லா நலமும் பெற்று இனிது வாழ்ந்து வந்தார்கள். இவர்களிற் பலர் தென் பகுதியில் நுழைந்து பொதுமக்களிடம் ஆரிய நூற் கொள்கைகளைப் புகுத்தித் தங்களுக்கு முதன்மையும் உழைப்பிலாப் பிழைப்பும் தேடிக்கொண்டார்கள், இதனையுணர்ந்த தமிழறிஞர்கள், இவர்கள் கூறும் ஆரிய நூற் கொள்கைகளையும் இவர்களுக்கு அளிக்கப்படும் முதன்மையையும், எதிர்த்தும், மறுத்தும் பேசியும் நூல்களாக எழுதியும் பொதுமக்களுக்கு அறிவூட்டவும் தமிழர் தனிப் பண்பினை நிலைநாட்டவும் அறிவுப்பணி ஆற்றினார்கள்.

இங்ஙனம் மக்கள் ஆரியர்களுடைய மூடக்கொள்கைகளினின்றும் விடுபட்டு அறிவு விளக்கம் பெற பணியாற்றிய அறிஞர்களில் திருவள்ளுவர், கபிலர், சிவவாக்கியர் முதலான சித்தர்கள் தலைசிறந்தவர்களாவார்கள். இதை மேனாட்டு அறிஞர் சார்லஸ் கோவர் என்பவரும் மற்றவர்களும் எடுத்துக் காட்டுவதைப் படித்தறியவும். தமிழறிஞர்கள் ஆரியர் கொள்கைகளை நூல்களால் மறுக்கின்றார்கள் என்பதை உணர்ந்த ஆரியப் பார்ப்பனர்கள், அரைகுறையாகத் தமிழைக் கற்றுக்கொண்டு தமிழில்

நூல்கள் எழுதவும் முன் உள்ள நூல்களுக்கு உரைகள் எழுதவும் துணிந்துவிட்டார்கள்.

இவ்வாறு செய்வதால் தங்கள் கொள்கைகளைத் தமிழ் நூல்களினிடையில் செறித்தும் உரைகளினிடையில் நுழைத்தும் தமிழ் மக்களினிடையே நிலைநாட்டித் தங்கள் பிழைப்புக்கும், பெருமைக்கும் என்றும் வழி தேடிக் கொள்ளலாமென்பதே அவர்கள் கண்ட கனவும் கொண்ட துணிவுமாகும். இதற்காகவே பரிமேலழகர் தமிழ் நூலாகிய திருக்குறளுக்கு உரை எழுத முன் வந்தார் என்பதை சிந்தனையாளர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

திருக்குறளில் வேத ஆகம மனுதரும சாத்திர முறைகளைப் புகுத்தி, திருக்குறள் ஆரிய நூற் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டே அமைக்கப்பட்டுள்ளது என்பதை எடுத்துக் காட்டும் பெருமுயற்சியை மேற்கொண்டு, இவர் செய்துள்ள அருந்தொண்டு இவர் பிறப்புக்குரிய பெருமை தரும் செயலாகும். தமிழர்களின் தனிப்பெரும் நூலாகிய திருக்குறளின் பெருமைகளை மறைப்பதும், அதன் பெருமைக்குக் குழி பறிப்பதுமாகிய பெருந்தொண்டைப் பரிமேலழகர் சரியாகச் செய்துள்ளார் என்ற உண்மையை இதுவரை பரிமேலழகர் உரையைப் போற்றிப் புகழ்ந்து விரும்பிப் படித்துப் பாடம் செய்து மகிழ்ந்த புலவர்கள் உணராவிடினும், இனியேனும் தமிழ் மரபிற்கேற்ற உண்மையுணர்ச்சியிலிருந்து ஆராய்ந்து உணர்ந்து உண்மை தெரிந்து தெளிந்து அறிவை விளக்கும் திருத்தொண்டைப் புரிவதே தமிழ் மரபிற் பிறந்தவர்களுக்குரிய பெருமை தரும் செயலாகும். இங்ஙனம் செய்தால் எதிர்கால உலகத்திற்குத் திருக்குறளின் பெருஞ் சிறப்பை எடுத்துக்காட்டலாம், உலகிற் சிறந்த நூல் என்பதையும் நிலை நாட்டலாம்.

# பரிமேலழகர் உரை ஆராய்ச்சி

திருக்குறளுக்கு உரை எழுதப்புகுந்த பரிமேலழகர், எந்த முறையில் உரை எழுத எண்ணினுர் என்பதை முன்னதாகவே தம் ஆரிய மூட்டையை அவிழ்த்துக் கொட்டிக் காட்டிவிட்டார். நூலாசிரியர்கள் நூற்குப் பாயிரம் (நூன்முகம்) செய்து முன்னுல் அமைத்தல் போலவே தாமும் "உரைப்பாயிரம்" ஒன்றெழுதி முன்னுல் புதுமையாகப் புகுத்தியுள்ளார். அதில் தமிழ் மரபிற்கும், திருவள்ளுவர் உள்ளத்திற்கும் பொருந்தாத மாறுபட்ட கொள்கைகளை - தான் திருக்குறளில் இடையிடையே நுழைத்துத் திணிக்க வேண்டுமென நினைத்த ஆரியக் கொள்கைகளை வரிசை வரிசையாக அடுக்கியிருக்கின்ருர். இவைகளைத்தான் குறள் ஆசிரியர் நூலினுள் எடுத்துக் கூறுகின்ருர் என்று, உண்மையறிவும் ஆராயும் திறமையுமில்லாதவர் களெல்லாம் நம்பும் வகையில் தன் எழுத்தாற்றலை ஏமாற்றுவதற்குப் பயன்படுத்தி இருக்கின்ருர்.

"முன் மொழிந்து கோடல்" என்னும் உத்திக்கிணங்க உரைப்பாயிரத்தில் முன்னுல் மொழிந்த கொள்கைகளுக்கு ஆங்காங்குத் தன் உரையில் இடம் ஏற்படுத்திக்கொண்டு அவற்றைப் புகுத்துகின்ருர். பொருந்தாப் பொருத்தமும் காட்டுகின்ருர். தான் வலிந்து கொள்ளும் உரையும் மாருகத்திணிக்கும் கொள்கையும் வழுவாகத் தோன்ருதிருக்கப் பலவிடங்களில் மூலத்திலேயே கைவைத்து வேலைசெய்து இருக்கிருர். இங்ஙனம் தன் கொள்கைகளைத் திருக்குறளின் உள்ளே திணிக்கும் கள்ள வழிகளைக் கண்டாராயினும் வள்ளுவர் உள்ளத்தை மறைக்கும் வழிகாண இவரால் இயலவில்லை. இவர் வலிந்துகூறும் உரைக்கும், நுழைக்கும் கொள்கைகளுக்கும், திருத்திய மூலத்திற்கும் மாருக ஆசிரியர் பல

விடங்களில் கூறியிருக்கிறார். இவற்றை அகச்சான்று களைக் கொண்டே ஆராய்ந்து உண்மையை உணரலாம். இனி உரைப் பாயிரத்தை முறையாக ஆராய்வோம்.

## உரைப் பாயிரம்

உரைப்பாயிரத்தில் முதன் முதலில் "இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமில் இன்பத்து அழிவில் வீடும் நெறியறிந்து எய்தற்குரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரா னெடுக்கப்பட்ட பொருள்கள் நான்கு. அவைகள் :-அறம், பொருள், இன்பம், வீடென் பன" என்று தொடங்குகின்றார். இந்த முதல் தொடரின் கருத்தே தமிழ் மரபிற்கு முரணானது. இந்திரன் முதலிய இறையவர்களின் பதங்களும் (உலகங்களும்) இந்த உலகங்களுக்கு மேலே உள்ள வீட்டுலகமும் (மோட்ச உலகமும்) என்பது இத்தொடரின் பொருளாம். இந்திரன் என்பவன் ஆரியர்களால் தெய்வமாகக் கருதப் படும் ஒருவன். தங்கள் வேதங்களில் அவனைப் பலவாறு போற்றுகின்றார்கள்; யாகங்களில் தாம் உயிர்ப் பலியிட்டுத் தரும் ஊனையும் (மாமிசத்தையும்) கிண்ணங்களில் வார்த்துவைக்கும் சோமபானத்தையும் (மதுவையும்) ஏற்றுக்கொள்ளும்படியும் போரில் தங்களுக்கு உதவி புரியும் படியும் தங்கள் எதிரிகளான திராவிடர்களை அழிக்கும் படியும் வேண்டுகிறார்கள். அன்றியும் பழந் தமிழ்க் குடிமக்கள் (திராவிடர்) இந்திரனைக் கடவுளாகக் கொண்டு வணங்காதவர்கள் என்று கூறுகின்றார்கள். இக்காரணத்தால் தமிழர்களுக்கு அநீந்திரர்கள் (இந் திரனைக் கடவுளாகக் கொள்ளாதவர்கள்) என்ற பெயர் கொடுத்தும் அழைக்கின்றார்கள். ஆரியர் பரம் பரையாக வணங்கிவந்த இந்திரனை ஆரியவழக்கப்படி முதலில் வைத்து மொழிந்ததுமன்றி, இந்திரன் முதலிய இறைய வர் என இந்திரனுக்கு இறைமைத் தன்மையையும் ஏற்று

கின்றார். "இறைமைக் குணங்களிலராயினாரை உடைய ரெனக்கருதி அறிவில்லார் கூறுகின்ற புகழ், பொருள் சேரா" என்று ஐந்தாம் குறளுக்கு அடியில் உரை கூறிய இவர் இங்ஙனம் கூறுவது அறியாமையா இறைமைத் தன்மையை உணராமையா? தம் இனக்கடவுளை உயர்த்தவேண்டுமென்ற விருப்பத்தால் உண்டான மறதியா? அறியேம். இந்திரனை இறைவனாகவும் அவனுக்குரியதாக ஆரியர்களால் கூறப்படும் சொர்க்க உலகத்தை(சொர்க்க லோகம்) அடையக்கூடிய பதமாகவும் கொள்ளும் வழக்கம் பழந்தமிழ் மக்களிடம் இல்லை. இதைப்போல் மற்ற இறையவர் பதங்களென்று குறிப்பிடப்படும் பிர்ம லோகம் (சத்தியலோகம்) விட்டுணுலோகம் (வைகுண்டம்) முதலிய உலகங்களையும் இவைகளுக்கு மேல் எங்கேயோ வீட்டுலகம் (மோட்ச உலகம்) உள்ள தென்பதையும் தமிழ் மக்கள் நம்புவதுமில்லை. கொள்வதுமில்லை. வீடு (மோட்சம்) என்பது, இவ்வுலகிலேயே அறிவு விளக்கம் பெற்ற உயர் நிலையில் (மேல் நிலை) அறியாமையால் வரும் துன்பங்களை எல்லா வற்றிலுமிருந்து விடுதலையடைந்து (வீடுதல் பெற்று) பேரறிவினால் அடையும் பேரின்பத்தையே குறிப்பதாகும். வீடு இதை விட வேறு உலகில் சென்று வேறு உடலில் அடையக்கூடிய தொன்றன்று என்பதுதான் தமிழர்களுடைய தனிப்பெருங் கொள்கையாகும். இதுதான் தமிழர்களின் வீட்டு நெறிக்கொள்கை என்பதற்கு ஆயிரமாயிரம் சான்றுகள் அமைந்துள்ளன.

ஆதலால், இந்திரனையோ இந்திரன் முதலிய இறைவர் எனக்கூறப்படும் மற்ற கடவுளர்களையோ அவர்கள் உலகங்களையோ அதற்கு மேலாக வேறாக எங்கேயோ இருக்கும் வீட்டுலகத்தையோ (மோட்சத்தை – மோட்ச உலகத்தை) தமிழர்கள் ஒருகாலும் ஒப்புக்கொள்வ

தில்லை. இதனால் இந்திரன் என்ற சொல்லும், வீடு என்ற சொல் மோட்சம் என்ற பொருளிலும் திருக்குறளில் இடம் பெறுதற்குக் காரணமுமில்லை. பின்னால் இந்திரன் என்ற சொல்லை எடுத்தாளவும் அத்தகைய கடவுளாகிய இந்திரனையும் ஆரியமுனியாகிய (ரிஷி) கௌதமன் சபித்தான் என ஆரியரின் பெருமை கூறவும், அகலியைப் பற்றிய புராணக் கதையையும் ஆசிரியர் ஒப்புக்கொண்டதாகக் காட்டவும் முன் மொழிந்து வைத்தார். இதைப் போல் வீடும் (மோட்சம்) இவ்வுலகில் இல்லை. வேறு உலகில் உள்ளது என்னும் ஆரியக் கொள்கையை நிலை நாட்ட மற்ற பதங்களுடன் வீட்டையும் கூட்டிக் கூறினார். "நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின் வீடில்லை நட்பாள் பவர்க்கு" என்ற குறளில் வீடு என்ற சொல் விடுபடுதல் என்ற பொருளில் வருவதை அறியவும்.

அறம், பொருள், இன்பம், வீடென்பனவற்றை வடநூலார் முறையே தருமம், அருத்தம், காமம், மோக்ஷம் என்பர் எனவும் கூறுகின்றார். வடநூலார் கூறிய நான்கையும் கூறத் தொடங்கி அவற்றுள் வீடென்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத் தாகலின், துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவதல்லது இலக்கண வகையாற் கூறப்படாமையின், ஏனைய மூன்றுமே நூலில் கூறுவதாக எழுதுகிறார்.

வடநூலார் நான்கெனக்கொண்டதையே பின்பற்றி வள்ளுவர் கொள்ளவில்லை. வடநூலில் கூறும் தருமம் வேறு வள்ளுவர் கூறும் அறம் வேறு; அவர் அருத்த சாத்திரம் வேறு, இவர் கூறும் பொருட்பால் வேறு; வடவர் காமசாத்திரம் வேறு தமிழர் காதலின்பம் வேறு. அறம், பொருள், இன்ப மூன்றையும் முறைப்படி அறிந்து வழுவாதொழுகி அறிவு விளக்கம் அடைந்து பேரறிவினால் பெறும் பேராவியற்கையே வீடன்றி வேறு

வீடில்லை. தமிழர்க்குரியவை முப்பொருள்களே என்பதை முப்பாலால் உணர்த்தினர் என உணர வேண்டும்.

மேலும், "அவற்றுள் அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம்".

"அஃது ஒழுக்கம், வழக்கு, தண்டமென மூவகைப் படும்" என்று கூறி, "இவற்றை வடநூலார் முறையே ஆசாரம், விவகாரம், பிராயச்சித்த மென்பர்" என்று குறிப்பும் எழுதுகிறர்.

"அவற்றுள் ஒழுக்கமாவது அந்தணர் முதலிய (நான்கு) வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரம சரிய முதலிய நிலை (ஆசிரமம்) களினின்று அவ்வவற்றிற் கோதிய அறங்களின் வழுவா தொழுகுதல்" என்று கூறுகின்றர். இவர் குறிப்பிடும் வருணம் வடநூலில் கூறப் படும் பிர்ம, க்ஷத்ரிய, வைஸ்ய, சூத்ர என்ற நான்கு சாதிப் பிரிவுகளாகும்.

நிலை:—பிர்மச்சர்யம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்யாசம் என்ற நான்கு ஆச்சிரமப் பிரிவுகளாகும். சாதிப்பிரிவுகளும் ஆச்சிரமப் பிரிவுகளும் இடம் பெருத தமிழர் கொள்கைக்குரிய தமிழ் நூலில் சாதிப்பிரிவை யும் ஆச்சிரமப் பிரிவையும் சந்து பார்த்துத் திணிக்கவே முந்தி இவற்றை மொழிந்து வைத்தார்,

இவற்றின் இயல்புகளை இனி ஆராய்வோம். மனு நூலில் விதித்தன செய்தல் விலக்கியன ஒழிதல்தான் அறமென்கிறர். ஆதலால் மனுநூலில் விதித்தவை எவை விலக்கியவை எவை என்பனவற்றை அறிய வேண்டும்; அதற்கு மனுநூல் படிக்க வேண்டும். எனவே திருக்குறளைப் படிப்பதற்கு முன் மனுநூலைப் படித்தறிந் தால் தான் குறளில் கூறப்படும் அறம் புலப்படும் என்ற பொருள் புலப்படவில்லையா. இதனல் திருக்குறளைப்

படிக்குமுன் மனுநூலைப் படித்தறிந்து கொள்ள வேண்டுமேயென்று மயங்காதீர்கள். மனுநூல் முதலில் வடமொழியில் செய்யப்பட்டதாயினும் இப்போது தமிழ் மொழியில் பெயர்த்து அச்சிடப்பட்டுள்ளது. ஆதலால் சம்ஸ்கிருதம் கற்றுத்தான் படித்தறிய வேண்டுமென்ற சங்கடமுமில்லை. தமிழிலேயே படித்து அதன் தகுதியைத் தெரிந்து கொள்ளலாம். கிடைக்குமிடம் எங்கே? வாங்கப் பொருளெங்கேயுளது? வாசிக்க நேரமெங்குளது என்று எண்ணி, எண்ணி ஏங்க வேண்டாம். மனுநூலின் சாற்றைப் பிழிந்து சுருக்கமாக உரைக்கின்றோம். அறிந்து கொள்ளவும். அதன்பின் மனுநூலில் விதித்தன செய்தலும் விலக்கியன தவிர்தலும் தான் அறமா என அறிவாலறியவும்.

## மனு தரும சாத்திரம்

*"பிர்மா இந்த சாத்திரத்தை எனக்கு (மனுவுக்கு) ஓதுவித்தார். நான் மரீசி பிருகு இவர்களுக்கு ஓதுவித்தேன்"* —மனுஸ்மிருதி அத்தியாயம் 1, சுலோகம் 58.

*"பிராமணர் இந்த மனுஸ்மிருதியைப் படிக்கலாம் மற்ற வருணத்தார்க்கு ஓதுவிக்கக் கூடாது"* —மனு அத். 1, சு. 103.

"வேதம் சுருதி; மனு சாத்திரம் ஸ்மிருதி; இவைகளைத் தர்க்க யுத்தியால் மறுப்பவன் நாத்திகன்".—அ. 2, சு. 11.

**குறிப்பு**:—ஆதலால் இதில் கூறப்படுபவை பகுத்தறிவுக்குப் பொருந்துமா என்றெண்ணுமல் அப்படியே ஒப்புக்கொண்டு நடப்பவர்கள் தான் ஆஸ்திகர்கள்.

### பிராமணனும் தானமும்

*"பிர்மாவின் உயர்ந்த இடமாகிய முகத்தில் பிறந்த பிராமணன் முதல் வருணத்தான் ஆகையால் இந்த உல*

கத்தில் உண்டாயிருக்கிற சகல வருணத்தார்களுடைய பொருள்களையும் தானம் வாங்கக்கூடிய பிரபுவாயிருக்கின்றான்". "ஆதலால் அவன் பிறரிடம் தானம் வாங்கினாலும் தன் பொருளையே உண்டவனாவான்". —அ. 1, சு. 100-101.

**குறிப்பு :**—பிச்சை ஏற்பவனைப் பிரபு என்று கூறுவதை இந்நூலில் தான் காணலாம்.

"பலகாரம், பாயசம், கிழங்குகள், சுவையுள்ள இறைச்சி, நல்ல நீர் இவையாவும் பிராமணர்களுக்குரியவை".—அ. 3, சு. 227.

"வாசனைப் பொருள்கள், தருப்பை, பூ, பொன், பால், தயிர், அவல், அரிசி, மீன், மாமிசம் இவை வலுவில் வந்தால் பிராமணன் நீக்கக்கூடாது". —அ. 4, சு. 250.

## யாகம், உயிர்க்கொலை மது, மாமிசம் உண்ணல்

"சோறு, பால், சோமபானம் (மது) இறைச்சி; இவைகள் யாகத்திற்குரிய அவிசுகள்". —அ. 3, சு. 257.

"யாகம் செய்து மாமிசம் புசித்தல் தேவ காரியம் தனக்கெனக் கொன்று தின்னல் இராட்சத காரியம்" —அ. 5, சு. 31.

"உயிர்க்கு ஆபத்து நேருங்கால் நாள்தோறும் பிராணிகளை ஏராளமாகக் கொன்று தின்றாலும் பிராமணன் தோஷத்தை யடையமாட்டான்" "மாமிசம் கிறையத்திற்கு வாங்கினாலும், தாமே கொன்று கொண்டாலும், பிறர் கொடுத்தாலும் அதைத் தேவர்களுக்கும் பிதிரர்களுக்கும் நிவேதித்துப் புசிக்கும் பிராமணன் தூஷிக்கப்படமாட்டான்".—அ. 5, சு. 30-32.

"பசுக்கள், மிருகங்கள், பறவைகள் இவைகளை யாகத்திலும் சிரார்த்த தினத்திலும் கொன்றால் அவை பின்பு உயர்ந்த கதியை அடைகின்றன" ஆதலால் யாகம் சிரார்த்தம் இவைகளில் உயிர்க்கொலை செய்யலாம்; அக்கொலை பாவமாகாது".—அ. 5, சு. 40-41.

"யாகத்திற்காகவே பசுக்கள், மிருகங்கள், பறவைகள் பிர்மனால் படைக்கப்பட்டுள்ளன. அந்த யாகத்தால் உலகமெலாம் நன்மையடைகிறது. ஆகையால் யாகத்தில் செய்யும் உயிர்க்கொலை கொலையாகமாட்டா". அ. 5, சு. 39.

"இங்ஙனம் யாகத்திற் கொல்லப்பட்ட கொலையைக் கொலையென்று நினைக்கலாகாது; வேதத்தினாலேயே தருமம் விளங்குவதால் வேதம் கொலை செய்யக் கூறினாலும் அது புண்ணியமாகவே இருக்கும்."—அ. 5, சு. 44.

சிரார்த்தம் (பிதிர்க்கடன்–திதி கொடுத்தல்)

"எள்ளு, அரிசி, உளுந்து, கிழங்கு, பழம் இவைகளால் சிரார்த்தம் செய்தால் பிதிரர்கள் ஒரு மாதம் வரையில் திருப்தி அடைவார்கள்".—அ. 3, சு. 267,

ஆமை மீன் இவற்றினிறைச்சியால், 2 மாதங்களும், மான் இறைச்சியால் 3 மாதங்களும், செம்மறியாட்டிறைச்சியால் 4 மாதங்களும், பறவைகளினிறைச்சியால் 5 மாதங்களும், வெள்ளாட்டிறைச்சியால் 6 மாதங்களும், புள்ளிமானிறைச்சியால் 7 மாதங்களும், கருமானிறைச்சியால் 8 மாதங்களும், கலைமானிறைச்சியால் 9 மாதங்களும், முள்ளம்பன்றி, காட்டெருமைக் கடா இவற்றினிறைச்சியால் 10 மாதங்களும், முயலிறைச்சியால் 11 மாதங்களும், வார்த்தீசன் என்னும் வெள்ளாட்டிறைச்சியால் 12 மாதங்களும் பிதிரர்கள் திருப்தியடைகின்றார்கள்".—அ, 3, சு. 268-269-270.

"முள்ளுள்ள வாளை மீன், கட்க மிருகம், சிவந்த ஆடு இவற்றின் இறைச்சியால் சிரார்த்தம் செய்தால் பிதிரர்கள் அளவற்ற காலம் திருப்தியடைவார்கள்". அ. 3, சு. 271.

"சிரார்த்தத்தில் விதிப்படி அழைக்கப்பட்ட பிராமணன் இதில் கூறப்பட்ட மாமிசங்களைப் புசிக்காவிட்டால் அவன் 21 பிறப்பு பசுவாகப் பிறப்பான்". அ. 5, சு. 35.

## பிராமணன் மூடனுயினும் கேடு செய்யினும் உயர்ந்தவனே

"அக்கினி எப்படி மேலான தெய்வமாகின்றதோ அப்படியே பிராமணன் ஞானியாயினும் மூடனுயினும் அவனே மேலான தெய்வம்".—அ. 9, சு. 317.

"பிணத்தை எரிக்கும் தீ, யாகத்திற்கும் பயன் படுதல்போல தீமையான காரியங்களைச் செய்யும் பிராமணர்களும் பூஜிக்கப்படுவார்கள், ஏனெனில் அவர்கள் உயர்குலத்தார் அல்லவா".—அ. 9, சு. 318.

## சூத்திரனுடைய அடிமை நிலையும் பொருளுரிமையும்

"சூத்திரன் இம்மையினும் மறுமையினும் பிராமணனுக்குப் பணிவிடை செய்ய வேண்டும்" "சூத்திரன், மனம் வாக்குக் காயங்களால் பிராமணனுக்குத் தொண்டு செய்ய வேண்டும். பிராமணனில்லாதவிடத்தில் க்ஷத்திரியனுக்கும், அவனுமில்லாதவிடத்தில் வைசியனுக்கும் தொண்டுசெய்ய வேண்டும்". அ. 9, சு. 334-335.

"பிராமணன் கூலி கொடுத்தோ கொடாமலோ சூத்திரனிடம் வேலை வாங்கிக் கொள்ளலாம். ஏனெனில் பிராமணனுக்குத் தொண்டு செய்யவே சூத்திரன் பிரமனால் படைக்கப்பட்டிருக்கிறுன்".—அ. 8, சு. 413.

"மற்ற மூன்று வருணத்தார்க்கும் தொண்டு செய்யும்படி சூத்திரனுக்கு அரசன் உத்தரவிட வேண்டும். அப்படிச் செய்யாவிடில் உலகம் அழிந்துவிடுமாகையால், சூத்திரனைத் தண்டித்துப் பணிவிடை செய்விக்க வேண்டும்.''—அ. 8, சு. 410.

"சூத்திரன் தேடிய பொருள்களைப் பிராமணன் தடையின்றிக் கைப்பற்றிக் கொள்ளலாம்; ஏனெனில் அடிமையாகிய சூத்திரன் எவ்வித பொருளுக்கும் உரியவனாக மாட்டான்".—அ. 8, சு. 417.

"பிராமணன் பொருளை எடுத்த சூத்திரனுடைய அங்கங்களை வெட்டிக் கொல்ல வேண்டும்; ஆனால் சூத்திரனுடைய பொருள்களைப் பிராமணன் தான் விரும்பியபடி கொள்ளையிடலாம்".—அ. 9, சு. 248.

"பிராமணனுடைய தொழிலைச் சூத்திரன் செய்தாலும் பிராமணனாகமாட்டான். அவனுக்குப் பிராமணத் தொழில் செய்ய அதிகாரமில்லை. பிராமணன் சூத்திரனுடைய தொழிலைச் செய்தாலும் அவன் உயர்குலத்தவனேயாவான், இப்படியே பிர்மா நிச்சயித்துள்ளார்.
—அ. 10, சு. 75.

"சூத்திரன் பொருளாசையால் உயர்குலத்தோர்க்குரிய தொழில்களைச் செய்தால் அவன் பொருளகளை எல்லாம் பறித்துக்கொண்டு அவனைத் துரத்திவிட வேண்டும்.''—அ. 10, சு. 96.

### மணம், பிள்ளைகள், சொத்துரிமை

"பிராமணன், க்ஷத்திரியன், வைசியன் இவர்கள் தம் வருணத்திலும் தம் கீழ் உள்ள மற்ற வருணங்களிலும், சூத்திரன் தன் வருணத்தில் மட்டும் மணம் செய்து கொள்ளலாம்.''—அ-3. சு-13.

" சூத்திரப் பெண்ணோடு சமமாய்ப் படுக்கும் பிராமணன் நரகத்தையடைவான்; அவளிடம் பிள்ளை உண்டு பண்ணுகிறவன் பிராமணத் தன்மையை இழந்துவிடுகிறான் ".—அ·3. சு-17.

"பிராமணனுக்குச் சூத்திரப் பெண்ணிடம் பிள்ளை பிறந்தால் அப்பிள்ளைக்கு அப்பிராமணன் சொத்தில் உரிமையில்லை. அப்பிள்ளை சிரார்த்தம் செய்யலாகாது; அவன் உயிரோடிருப்பினும் பிணத்துக்குச் சமமானவன் ".—அ-9. சு-155-178.

## சாதிக்கொரு நீதியும், தண்டனையும்

"பிராமண குலத்திற் பிறந்தவன் கர்மானுட்டானமில்லாதவனுயினும், ஒழுக்கங்கெட்டவனுயினும் அரசனைப் போலவே தீர்மானம் செய்யலாம் (ஆட்சி செய்யலாம் பிறரைத் தண்டிக்கலாம்) சூத்திரன் ஒரு பொழுதும் செய்யலாகாது ".—அ-8. சு-20.

"பிராமணனைக் காப்பாற்றும் பொருட்டுப் பொய் சொன்னாலும் குற்றமில்லை. பிராமணரல்லாதாரைக் கொன்றாலும் பாவமில்லை ".—அ-8. சு-112-143.

" வைசியனும் சூத்திரனும் ஒருவரை ஒருவர் திட்டிக் கொண்டால் வைசியனுக்கு 250 பணங்களும் சூத்திரனுக்கு 500 பணங்களும் பொருள் தண்டனை விதிக்க வேண்டும் ".—அ-8. சு-277.

"பிராமணனைச் சூத்திரன் திட்டினால் அவன் நாக்கை அறுக்க வேண்டும். பிராமணனுடைய சாதிப் பெயர்களைச் சொல்லித் திட்டும் சூத்திரன் வாயில் காய்ச்சிய இரும்புக் கம்பியை எரிய எரியச் சொருக வேண்டும் ".—அ-8. சு-270-271.

"சூத்திரன் மேல் சாதியாரை அடித்தால் கையையும் உதைத்தால் காலையும் வெட்டிவிட வேண்டும்". அ-8. சு-280.

"சூத்திரன் (பிராமணரல்லாதவன்) மற்ற மூன்று வருணத்தாருடைய மனைவியைப் புணர்ந்தால் அவனை உயிர்போகும் வரை தண்டிக்க வேண்டும்". அ-8. சு-359.

குறிப்பு:—பிராமணன் மற்றவர்களின் மனைவிமார்களைக் கற்பழித்தால் தண்டனை யில்லைபோலும்.

"தாழ்ந்த சாதிப் பெண் உயர்ந்தசாதியானைக் கூடினால் அவளைக் கண்டிக்கக் கூடாது; உயர்ந்த குலப்பெண் ஒரு தாழ்ந்த சாதியானைக் கூடினால் அவளைக் கண்டித்து வீட்டிலேயே அடக்கவேண்டும்." அ. 8. சு. 365.

"உயர்குலப் பெண்ணைப் புணர்ந்த இழிகுலத்தோனை இறக்கும் வரையில் அடிக்கவேண்டும்."

"கட்டுங்கடங்காமல் இட்டப்படி திரியும் பிராமணப் பெண்களை சூத்திரன் புணர்ந்தால் ஆண்குறியை அறுக்க வேண்டும். ஒருவர் கட்டுக்குட்பட்ட பெண்களைப் புணர்ந்தால் அவனைத் துண்டு துண்டாய் வெட்டி அவன் பொருளை எல்லாம் கொள்ளையிடவேண்டும்." அ 8 சு 374

"பிராமணனுடன் சூத்திரன் சமமாக உட்கார்ந்தால் இடுப்பில் சூடு போட்டாவது, பிட்டத்தை அறுத்தாவது ஊரைவிட்டுத் துரத்திவிட வேண்டும்." அ-8. சு-283.

"பிராமணன் எத்தகைய கொடிய குற்றங்களைச் செய்தாலும் அவனுக்குத் தூக்குத் தண்டனை ஏற்பட்டால் தூக்கில் இடக்கூடாது. அவன் தலையை மொட்டை அடித்தல் வேண்டும். அதுவே அவனுக்குத் தூக்குத் தண்டனைக்கு ஒப்பாம். மற்ற வருணத்தார்க்குக் கொலையே தண்டனை." அ-8. சு-379.

"கொடிய குற்றம் செய்தவனுயினும் பிராமணனைக் கொல்லாமலும் வேறு எத்தகைய துன்பமும் செய்யாமலும் பொருளைக் கொடுத்து அவனை அயலூருக்கு அனுப்பிவிட வேண்டும். எத்தகைய குற்றஞ் செய்தாலும் பிராமணனைக் கொல்ல அரசன் நினைக்கலாகாது." அ-8. சு-380, 381.

"பிரமாணம் கேட்கும்போது, பிராமணனைச் சத்தியமாகச் சொல் என்று கேட்கவேண்டும். சூத்திரனை நெருப்பில் பழுக்கக் காய்ச்சிய மழுவைக் கையில் பிடித்துக்கொண்டு பிரமாணம் செய்யச் சொல்லவேண்டும். அல்லது அவனைத் தண்ணீரில் அழுத்தவேண்டும். அவன் மனைவி, பிள்ளை இவர்கள் தலைகளில் ஓங்கி அடித்தும் பிரமாணம் சொல்லும்படிச் செய்யவேண்டும். மழுவெடுத்த சூத்திரன் கை வேகாமலும், தண்ணீரில் அழுத்திய சூத்திரன் சாகாமலும், அடித்ததால் மனைவி மக்கள் தலையில் வலி தோன்ருமலும் இருந்தால்தான் அவன் சொல்லும் பிரமாணம் சத்தியம் என்று கொள்ள வேண்டும்".—அ-8. சு-113, 114, 115.

"சூத்திரன் இம்மையில் உயிர்வாழ்க்கைக்கும் மறுமையில் மோட்சமடையவும் பிராமணனையே தொழ வேண்டும். அதுவே அவனுக்குப் பாக்கியம்". —அ-10. சு-122

"சூத்திரன் எவ்வளவு திறமையுள்ளவனுயினும் தனக்கெனத் தனியாகப் பொருள் சேர்த்து வைக்கலாகாது. சூத்திரனிடம் பொருள் இருந்தால் பிராமணனுக்குத் துன்பம் வரும்."—அ-10. சு-129.

**குறிப்பு:**—பொருள் சேர்த்துப் பிராமணனுக்குக் கொடுத்துவிட வேண்டும்.

"பிராமணன் உண்டு மிகுந்த உணவும் கட்டிக் கிழிந்த உடையும் சுவையும் சாரமுமற்ற தானியங்களை

யும் பிராமணன் பார்த்து சூத்திரனுக்குக் கொடுக்க வேண்டும்''.—அ-10. சு-125.

"பிராமணன் வைசியனிடமுள்ள பொருளைக் கேட்டுக் கொடுக்காவிடில் வலிமையாலாவது களவினுலாவது யாகத்திற்கு வேண்டிய பொருளைப் பிராமணன் எடுத்துக் கொள்ளலாம். வைசியனிடமில்லாவிடில் சூத்திரன் வீட்டிலிருந்து ஏராளமாக யோசனையின்றிக் கேளாமல் வலிமையினுற் கொள்ளையிட்டு எடுத்துக் கொள்ளலாம்''. அ-11. சு-12-13.

''யாகம் செய்கிறவன் பொருள் தேவர்கள் பொருள் என்றும், யாகம் செய்யாதவர்களின் பொருள்கள் அசுரர்களின் பொருள்களென்றும் வேதம் ஓதுகின்றது. ஆதலால் அசுரர் பொருள்களைத் தேவர்களுடைய பொருள்களாக்குதல் தருமமேயாகும்''.—அ-11. சு-20.

"தரும சிந்தனையுள்ள அரசன் இவ்விதம் கொள்ளையிட்டு யாகம் செய்கின்ற பிராமணர்களைத் தண்டிக்கக் கூடாது, அரசனின் அறியாமையால் பிராமணன் பசித் துன்பத்தை அடைகிருன்''.—அ-11. சு-21.

குறிப்பு :—இதனுல் பிராமணன் எந்த விதத்திலும் பிழைக்கும்படி அரசன் வழிதேடி வைக்கவேண்டும். அவர்கள் சொல்லுவனவெல்லாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.

"பிராமணனுக்கு வேதம் ஓதலே தவம்; க்ஷத்திரியனுக்கு இந்நூலில் சொன்னபடி ஆட்சி செய்தலே தவம். வைசியனுக்கு வர்த்தகம் செய்தலே தவம். சூத்திரனுக்குப் பிராமணனுக்குப் பணிவிடை செய்தலே தவம் ஆகும்''.—அ-11. சு-235.

"இதில் சொல்லும் கருமங்களில் தவறிய அரசன் மலம், பிணம் இவைகளைத் தின்னும் கடபூதம் என்னும் பேயாகப் பிறப்பான். மேற்சொன்ன வேத ஸ்மிருதி

களுக்கு அடங்காமல் விரோதமாக நடக்கும் சூத்திரன் சிலைப்பேனைத் தின்னும் பேயாகப் பிறப்பான்.''—அ - 12. சு - 71, 72.

குறிப்பு :—ஆதலால், இதில் சொன்னபடியே அரசன் பிராமணர்களுக்குச் சாதகமாக ஆட்சி நடத்தவேண்டும்; சூத்திரன் பிராமணர்களுக்குத் தொண்டு செய்து நடக்கவேண்டும் என்பதுதான் மனுநீதி.

மனுநீதியின் அறநெறியைப் பார்த்தீர்களா? பிராமணன் எதையும் தின்னலாம்; எந்தக் குற்றங்களையும் செய்யலாம்; யார் வீட்டுப் பெண்களையும் கற்பழிக்கலாம்; யார் பொருளையும் கொள்ளையிடலாம்; கொலையும் செய்யலாம்; அவனுக்குக் குற்றதண்டனை கிடையாது. நாவிதக் கூலியில்லாமல் மொட்டையடித்துப் பொருள் கொடுத்து வேறு ஊருக்கு அனுப்புவதே தண்டனை. அங்கும் குற்றம்செய்தால் அப்படியே. எப்படி உள்ளது மநுநீதி. சாதிக்கொரு நீதி. அரசன் அவர்கள் மனுநீதிப்படியே மற்றவர்களை தண்டித்து அவர்களை ஆதரித்து அரசாளவேண்டும், இல்லையேல் அரசனையும் தொலைத்துவிட மனுநூலில் இடமுள்ளது. இத்தகைய அறத்தை, அரசியலை, உயிர்க் கொலையை, ஊண் உண்ணலை, களவை, கற்பழித்தலை, கொள்ளைகளை, கொடுமைகளை, மடமைகளைத்தான் வள்ளுவர் சொல்லுகிறாராம் திருக்குறளில். அறமாவது மனுநூலில் விதித்தன செய்தலும் விலக்கியன தவிர்த்தலும்தான் தெரிந்துகொண்டீர்களல்லவா? இந்த மனுநீதியைக் கொண்டுதான் பரிமேலழகர் திருக்குறளுக்கு உரை எழுதுகிறார். இதைத்தான் புலவர்கள் போற்றுகின்றார்கள், உணர்வாளர்களாகிய நீங்கள் என்ன செய்வீர்களோ யார் அறிவார்.

## நூலில் நுழைப்பு

### முதல் அதிகாரம் – கடவுள் வாழ்த்து

"அஃதாவது 'கவி தான் வழிபடு கடவுளையாதல் எடுத்துக்கொண்ட பொருட்கு ஏற்புடைக் கடவுளை

யாதல் வாழ்த்துதல். அவற்றுள் இவ்வாழ்த்து ஏற் புடைக் கடவுளை எனவறிக. என்னை? சத்துவ முதலிய குணங்களான் மூன்றாகிய உறுதிப் பொருட்கு அவற்றான் மூவராகிய முதற் கடவுளோடு இயைபுண்டாகலான். அம்மூன்று பொருளையும் கூறுதலுற்றார்க்கு அம்மூவரை யும் வாழ்த்துதல் முறைமையாகலின், இவ்வாழ்த்து அம் மூவர்க்கும் பொதுப்படக் கூறினாரென உணர்க".

இது, பரிமேலழகர் கடவுள் வாழ்த்து என்னும் தலைப் புக்குத் தந்துள்ள விளக்கம். முதல் அதிகாரத்திற்கு, "கடவுள் வாழ்த்து" என்ற தலைப்பு கொடுக்கப்பட்டுள் ளது. தலைப்பு விளக்கத்திலும், கடவுள் என்ற சொல் லையே நான்கிடங்களில் எடுத்தாண்டுள்ளார். மேலும் "வழிபடு கடவுள், ஏற்புடைக் கடவுள் முக்குணத்தால் (சத்துவம், இராசசம், தாமச குணங்களால்) மூவராகிய கடவுள் - முதற்கடவுள்" எனப்பல கடவுள்களைப் படைக்கின்றார். (சிருஷ்டி செய்கிறார்) மூவரையும் வாழ்த் துவதாகவும் இவ்வாழ்த்து மூவர்க்கும் பொதுப்படக் (குறளாசிரியர்) கூறினார் எனவும் இவர் கூறுபடுத்திக் கூறுகின்றார்.

இவர் கடவுள் தலையிலேயே கையை வைத்துக் கலைத் துப் பிரித்துப் பலவகையாகப் படைத்துக் காட்டி ஆரியக் கருத்துக்களை அமைத்துப் பொருத்திய அலங்கோலத்தை ஆராயவேண்டியது அறிவின் முதற் கடமையாகும். கட வுள் வாழ்த்தெனக் கூறப்படும் இவ்வதிகாரத்திலும் மற்றெவ்வதிகாரங்களிலும் எவ்விடத்திலும் "கடவுள்" என்ற சொல்லே குறளில் வரவில்லை. மற்ற அதிகாரங் களில் தலைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ள சொற்கள் அவ் வதிகாரங்களின் கீழ் உள்ள குறள்களில் பல இடங்களில் வரும். இவ்வகையிலேயே தலைப்புக்களமைந்துள்ளன.

இங்ஙனமின்றிக் கீழே குறள்களில் வராத சொற்கள் மேலே தலைப்பாக அமைந்திருந்தால், அது ஆசிரியர் தந்த தலைப்பன்று என்பதையும், தலைப்பு மாற்றுத்தனம் (செயல்) செய்யப்பட்டுள்ள தென்பதையும் உணரவேண்டும்.

இம்முறையில் பரிமேலழகர் உரையில் இல்லறவியலில் 7-ஆம் அதிகாரத்துக்குப் புதல்வரைப் பெறுதல் என்ற தலைப்பும், துறவறவியலில் முதலில் 25-ஆம் அதிகாரம் அருளுடைமை முதல் 33-ஆம் அதிகாரம் கொல்லாமை முடிய உள்ள 9 அதிகாரங்களுக்கும் விரதம் என்று பெருந் தலைப்பும், பின் 34-ஆம் அதிகாரம் நிலையாமை முதல் 37-ஆம் அதிகாரம் அவாவறுத்தல் முடிய உள்ள 4 அதிகாரங்களுக்கும் ஞானம் என்ற பெருந் தலைப்பும் கொடுக்கப்பட்டுள்ளன. கடவுள் என்ற சொல்லுக்குக் குறளில் இடம் இல்லாததுபோன்றே புதல்வர், விரதம், ஞானம் என்ற சொற்களுக்கும் இடமில்லை (வரவில்லை). இங்ஙனம் வராத சொற்களையும் வடநூற் கருத்துக்களைத் திணிப்பதற்காகவே எடுத்துத் தலைப்புக்கள் கொடுத்துள்ளாரென்றுணர வேண்டும்.

இவ்வகையில் முதலதிகாரத்திலேயே தலைப்பு மாற்றுச்செயல் செய்யப்பட்டுளது. கடவுள் என்ற சொல் மற்ற தமிழ் நூல்களில் ஏன் தொல்காப்பியத்திலுங்கூட பல இடங்களில் வந்துள்ளது. வள்ளுவர் நூலில் ஏன் இடம் பெறவில்லை? என்ற வினு எழுவது இயற்கையன்றோ? இதற்கு விடை தேட வேண்டியதும் நம் கடமையன்றோ? கடவுள் என்ற சொல் தொல்காப்பியத்திலேயே சொல்லப்படுவதால் தொன்மையானது என்று தானே கொள்ளவேண்டும்; சொல்ல வேண்டும். ஏன்? ஒல்காப் பெருமைத் தொல்காப்பியரால் சொல்லப்பட்டதெனப் புலவர் பலரும் புகல்வரன்றோ?

தொல்காப்பியர் சொல் (மொழி), சொல் பொருள் தருமுறை (மொழிப் பொருண்முறை) மொழிப் பொருட் காரணம் முதலானவைகளைப் பற்றிக் கூறுவதை ஆராய் வோம்.

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்றும், "மொழிப் பொருட்காரணம் விழிப்பத் தோன்ரு" என்றும் இயம்புகின்ருர்–"சொற்கள் யாவும் பொருள்களைக் குறிப்பிடுகின்றன; ஆனால், இச்சொல் இக்காரணத்தால் இப்பொருளைக் குறிப்பிடுகின்றது என்று சிறப்பாகத் (தெளிவாக) தோன்றவில்லை" என்று உள்ளத்தில் உள்ளதை ஒளிக்காமல் உரைத்துவிட்டார். இதனுல் சொற்பொருட் காரணந் தெரிந்தவைகளைக் காரணப் பெயர் என்றும், காரணந் தெரியாதவைகளை இடுகுறிப் பெயரென்றும் புலவர் கொண்டனர்போலும். எல்லாச் சொற்களும் பொருத்தமான காரணத்தோடே அமைந்துள்ளனவாதலால் எல்லாம் காரணப் பெயர் களே என்பதை "மொழிப் பொருட்காரண விளக்கம்" என்ற நூலில் விளக்குவோம்.

இங்ஙனம் மொழிப் பொருட் காரணம் தோன்ரு ஒருவர் மொழிகளுக்கெல்லாம் முதன் மொழியாகவும், தாய் மொழியாகவும், இயற்கையோடியைந்த அறிவியல் மொழியாகவும் அமைந்துள்ள தமிழ்மொழிக் கடலுள் இழிந்து ஆழம்கண்டு இலக்கண நூல் எழுதியிருக்கிருர். அதுதான் தமிழர்களின் தலை (எழுத்து) இலக்கணம் இதன் இயல்பை வேறு நூலில் ஆராய்வோம். தொல் காப்பியர்க்கு மொழிப் பொருட்காரணம் துலங்காவிடி னும் வள்ளுவர் அதைத் தெள்ளிதின் அறிவர். அவர் வழி வழி வந்த அறிவுடையோரும் அறிவர். ஆதலால் வள்ளுவர் குறளில் எடுத்தாளும் சொற்களை மொழிப் பொருட் காரண முறைமையையும், சொல்லாட்சித்

திறமையையும் நன்கு அறிந்தே எடுத்தாண்டிருக்கிருர். நினைத்த இடங்களில் நினைத்த சொற்களை அமைத்து அடியை நிறைத்து முடித்துவிட முயலவில்லை. எனவே இது ஆராய்தற்குரிய தொன்ருகும்.

கடவுள் (கட+உள்) கட பகுதி உள் விகுதி. கட=செலுத்து - தாண்டு; கடவுதல் தாண்டி நிற்றல் - செலுத்துதல். எனவே எல்லாவற்றையும் கடந்து எங்கேயோ ஓர் இடத்தில் இருப்பவர். அங்கிருந்து எல்லாவற்றையும் செலுத்துபவர்-செய்பவர் என்றுதான் பொருள் கொள்ள இடமுள்ளது. இதில் கடவுள் எங்கயோ (மோட்சவுலகில்) இருந்துகொண்டு எல்லாம் செய்கிருர் என்ற ஆரியக் கொள்கையே அமைந்துள்ளது. இது தமிழர் கொள்கைக்குச் சற்றும் பொருத்தமற்றது. ஏன்? கடவுள் எல்லாம் கடந்து எங்கேயோ இருப்பவர் என்று கொண்டால் "பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணப் புற நிலையினின்றும் உள்ளுக்குள் உணர்வாய், அறிவாய், உயிராய், உயிர்ப்பாய், ஒளியாய் உடலெங்கும் நிறைந்துள்ளான் என்ற பூரண அகநிலையினின்றும் விலக்கி விடுகின்ருேம். எனவே அகத்தும் புறத்தும் பூரண நிலையினின்று வேருக்கி விடுகின்ருேம்.

ஆதலால் எங்கும் தங்கியும் (நீக்கமற நிறைந்தும்) எல்லாவற்றையும் தாங்கியும் (ஆதரவாய் நின்றும்) எல்லாவற்றையும் இயங்கும் வண்ணம் இயக்கியும் ஒப்புயர்வற்ற ஆற்றலுடன் விளங்கும் இறைமைத் தன்மையை முற்கூறியவாறு குறைத்துக் கூற இறையுண்மை யுணர்ந்த எந்த உண்மைத் தமிழ் மகன்தான் உடன்படுவான்; உண்மை யுணரும் மெய்யுணர்வின்றி உடன்பட்டு அறியாது கூறினும் அது செழும்பொருளைச் (செம்பொருளை) குறிக்கும் சொல்லென அறிஞர்கள் கொள்வார்களா? ஆதலால் சொல்லாட்சியில் வல்லவ

ராகிய வள்ளுவர் கடவுள் என்ற சொல்லைக் கையா ளாது தள்ளிவிட்டதில் தவறொன்றுமில்லை.

கடவுள் சிந்தையும் மொழியும் செல்லா நிலைமையர்; வாக்கும் மனமும் கடந்தவர்; ஆதலால், கடவுள் என்பது பொருந்துமென்று சிலர் புகல்வர். இவற்றைக் கடந்தவ ராகக் கொண்டாலும், அறிவைக் கடவாது அறிவாலறி யும் அறிவுருவானவர் இறைவர் என்பதை ஆராய்ச்சி யுரையில் "வாலறிவன்" என்ற சொல்லில் விளக்கு வோம். "அறிவான தெய்வமே", அறிவாலறிந்து இறைஞ்சும் அடியாரிடஞ்சல் களைவோனே" "அறிவு ளறிவை அறியும் அறிவை அருளும் அறிவ!" என்பன வற்றால் மெய்யறிவால் அறியக்கூடியவர் என்ற உண்மை புலனாகும்.

## முக் கடவுள்

இனி கடவுட் பிரிவுகளைப்பற்றி இவர் கூறுவதை ஆராய்வோம். "சத்துவ முதலிய முக்குணங்களால் மூன்றாகிய உறுதிப்பொருட்கு அவற்றான் மூவராகிய முதற் கடவுளோடு இயைபுண்டு" என்கிறார். இதனால் முக்குணங்களுக்கும், முப்பால்களுக்கும், பிரமன், விட் டுணு, உருத்திரன் என்ற மூன்று கடவுள்களுக்கும் தொடர்பு உண்டாக்குகிறார். மூன்று பொருள்களையும் கூறவந்தவர் அம்மூவரையும் வாழ்த்துதல் முறைமை யென்றும், இவ்வாழ்த்து மூவர்க்கும் பொதுப்படக் கூறினாரென்றும் கூறுகின்றார். ஏன் இவ்வாறு கூறினார்? மூன்று கடவுள்களையும், அவர்கள் உலகங்களையும் - பத முத்திகளையும், அவர்களைப்பற்றிய புராணக் கதைகளை யும் ஆரியக் கொள்கைகளின்படி ஆசிரியர் ஒப்புக்கொண் டுள்ளார் அவற்றைக் கொண்டேதான் நூல் செய்துள் ளார் என்பதை வலியுறுத்தவும், இடையிடையே பிற ஆரியக் கொள்கைகளையும் திணிக்கவும் இங்ஙனம் முதலி

லேயே முன்மொழிந்து வைத்தார். முப்பால் முக்குணம் முக்கடவுள் இவற்றிற்குக் காட்டும் தொடர்புகள் தமிழ் முறைப்படி முற்றும் பொருந்தாதவை.

இனி நூலில் நுழைத்தவைகளை நுழைந்து நோக்குவோம். இதில் கொடுக்கப்பட்டுள்ள தலைப்புக்களும் குறள் எண்களும் குறட் பாடங்களும் பரிமேலழகர் உரையில் உள்ளபடியே கொடுக்கப்பட்டுள்ளன.

## கடவுள் வாழ்த்து

1. அகரமுதல வெழுத் தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு

இதில் வந்துள்ள 'ஆதி பகவன்' என்ற தொடர்க்கு ஆதியாகிய பகவன் எனக்கொண்டு 'ஆதி பகவனாகிய முதலை யுடைத்து' என்கிறார். 'ஆதி பகவன் என்னும் இரு பெயரொட்டுப் பண்புத்தொகை வடநூல் முடிபு' என்றும் கூறுகிறார். புலவர் பலரும் இவற்றை வட சொற்கள் எனவே முடிவு கட்டிவிட்டார்கள். 'உலகு' என்பதையும் கூட்டி முதற் குறளிலேயே மூன்று வட சொற்களை ஆசிரியர் அமைத்துள்ளார் எனவும் கூறுகின்றார்கள். குறளில் நூற்றுக்கணக்கான வடசொற்கள் கலந்துள்ளனவெனவும் பலர் கூறுகின்றனர்; சிலர் எண்ணி அளவிட்டதுபோல் 60 வடசொற்கள் உள்ளன எனச் சொல்லிக் கொள்கின்றனர். இங்ஙனம் இவர்கள் வட சொற்கள் என எண்ணிக்கொண்டு இருப்பவை யாவும் தமிழ்ச் சொற்களே!

இவர் கருத்துப்படி ஆதி பகவன் யார்? ஆரிய நூற் கருத்துப்படி பிரமனிடமிருந்து உலகம் உண்டானதால் பிரமனையே முதலாக உடையது எனக் கொள்வதா? 'ஆதி பகவன்' இரு பெயர் ஒட்டிய ஒருசொல் எனறால், 'ஆதி' என்பது முதல் என்ற பொருளில் நின்றால், பகவ

னுக்கு ஆதி (முதல்) உண்டென்றால் அந்தமும் (முடிவும்) உண்டென்றாகுமல்லவா? இது இறைவர் ஆதியும் அந்தமும் இல்லாதவர் என்ற இலக்கணத்திற்கு விலக்காகத் தோன்றவில்லையா? இதையறியாது வள்ளுவர் சொல்லுவாரா? இவற்றை நாம் சிறிது சிந்திக்க வேண்டுமன்றோ?

'ஆதி, பகவன் என்ற பெயர்கள் திருவள்ளுவரின் தாய், தந்தையரின் பெயர்கள். இருவர்க்கும் பெருமை கொடுக்கவே இங்ஙனம் கூறினர்' என்றும் சிலர் கூறுவர். 'ஆதி பகவன் என்றால் சூரியன்; சூரியனிலிருந்து உலகம் சிதறி விழுந்ததாகவும் சூரியனால் இயங்குவதாகவும் விஞ்ஞானிகள் கூறுவதால் சூரியனையே குறிக்கும்' எனவும் சிலர் கூறுவர். சூரியனையும் இயக்குவிக்கும் பேராற்றல் ஒன்றுள்ளதென்று விஞ்ஞானிகளும் இன்று விளம்புவது இவர்கட்கு விளங்கவில்லை போலும். இச்சொற்களின் இயல்பும் பொருளும் குறள் உரையில் விளக்குவோம்.

3. "மலர்மிசை ஏகினான்" என்ற குறளில் 'நிலமிசை நீடு வாழ்வார்' என்பதற்கு, நிலத்தின்கண் நீண்டகாலம் வாழ்வார் என நேரான பொருள் கூறாது, 'எல்லா உலகிற்கும் மேலாகிய வீட்டுலகின் கண் அழிவின்றி வாழ்வார்' என்று கூறுகிறார். இதனால், வீட்டுலகம் எல்லா உலகங்களுக்கும் மேல் எங்கேயே உள்ளதென்பதும் அதன்கண் கடவுள் இருக்கிறார் என்பதும் அங்கே போய் வாழ்வதுதான் வீடு (மோட்சம்) என்பதும் இவர் கொண்ட கொள்கையாகும். இதையே வள்ளுவர் சொல்வதாகவும் உரை கூறுகிறார். இது தமிழர் மரபிற்குப் பொருந்தாது, "பிறப்பு மூப்புப் பெரும்பசி வான்பிணி இறப்பும் நீங்கி இங்கு இன்பம் வந்து எய்திடும்" "மெய்யே யுன் பொன்னடிகள் கண்டு இங்கு வீடு உற்றேன்" "சித்தர் சிவலோகம் இங்கே தெரிசித்தார்" என்ற தமிழ் மரபிற்குரிய

கொள்கைகளோடு மாறுபடுதல் காண்க. மணக்குடவர் நிலத்தின்மேல் நெடுங்காலம் வாழ்வார் என்றே பொருள் கொள்கின்றார்.

5. "இருள்சேர் இருவினையும்" என்ற குறளில் 'இருவினை-நல்வினை தீவினை' என்கிறார். நல்வினை-அறம் அறமே உயிர்க்குறுதி பயப்பதெனப் பலவாறு பலவிடங்களில் ஆசிரியர் கூறுகிறார். "அறத்தினூஉங்கு ஆக்கமெவனோ உயிர்க்கு" "அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை" "நல்வினை மேற்சென்று செய்யப்படும்" என்பனவற்றாலறிக. இங்ஙனம் கூறும் ஆசிரியர், நல்வினையும் சேரா எனக்கூறுவரா? நல்வினையும் பிறத்தற்கேதுவானது, பொன் விலங்கு போன்றது என்பது நல்வினை செய்யாப் பிழையிலிருந்து உய்வதற்காக ஆரியர் கைக்கொண்ட கொள்கையாகும். இதையே பரிமேலழகர் உரையில் நுழைக்கின்றார். இது ஆசிரியர் கருத்தன்று என்பதை மேற்கூறிய காட்டுக்களால் அறியவேண்டும்.

6, "பொறி வாயிலைந்தவித்தான்" என்பதற்கு 'பொறிகளை வழியாக உடைய ஐந்தவா வினையும் அறுத்தானது'—(அறுத்த இறைவனது) என உரைக்கிறார். அவித்தல், அறுத்தல், கெடுத்தல், நீக்குதல் என்பன ஈண்டு ஒரு பொருட் சொற்கள். இதன்படி இறைவனுக்கு ஐந்தவா இருந்து அவற்றை அவித்ததாகவே பொருள் கொண்டுள்ளார். இங்ஙனம் கொண்டால், இயல்பாகவே அவா முதலான குற்றங்கள் இல்லாதவனே இறைவன் என்ற பொருளுக்கு முரணாக முடியுமன்றோ? இறைவனுக்கும் ஐந்தவா இருந்தன; பின் அவற்றை அவித்துக்கொண்டார் என்றே கொண்டால் மற்ற உயிர்களுக்கும் இறைவனுக்கும் வேற்றுமை என்ன? வினையினீங்கி விளங்கிய அறிவன் என்பது எவ்வாறு பொருந்தும்? இத்தகைய இழுக்கினை இறைவனி

டம் ஏற்றியவர் திருவள்ளுவரா. உரைகாரர்களா? திருவள்ளுவர் இங்ஙனம் உரைத்திருப்பின் இறையுண்மை உணராதவர் என்றே கொள்ளவேண்டும். ஆதலால், ஆசிரியர் கருத்து இது அன்று.

8. "அறவாழி யந்தணன்" என்ற குறளில் "பிறவாழி" என்பதற்குப் 'பொருளும் இன்பமுமாகிய பிற கடல்கள்' எனப் பொருள் கூறுகிறார். இதனால் இறைவனையடைவதற்குப் பொருளையும் இன்பத்தையும் விட்டுவிடவேண்டுமென்று கூறும் வடநூற் கொள்கையை வலியுறுத்துகின்றார். கடவுளை அடைவதானால் பொருளையும் இன்பத்தையும் விட்டுவிட வேண்டுமென மற்றவர்க்குக் கூறி, கடவுள் பெயரால் மற்றவர்க்குரிய பொருள்களையும் இன்பங்களையும் தாம் அடையவே இங்ஙனம் வடவர் வகுத்தார்கள். பொருளின்பங்களை வெறுத்ததாகக் கூறிக்கொள்ளும் போலித் துறவு தமிழர் கொள்கையன்று. அறநெறியிற்பொருளீட்டி, அன்பு நெறியின் இன்பம் துய்த்து, அருள் நெறியில் மருள்நீக்கிய பெருவாழ்வில் வாழ்வதே தமிழர்களின் தனிக் கொள்கையாகும். இதற்கு மெய்யன்புதான் வேண்டும். "மெய்யன்பர் நாரியர்பால் வீடே இருக்கினும் மெய்ஞ்ஞான வீட்டின்பம் மேவுவரே" என்பதனாலறிக. ஆசிரியரும் "அறனீனும் இன்பமுமீனும் திறனறிந்து — தீதின்றி வந்த பொருள்" என்பதால் நல்வழியில் வந்த பொருள் அறத்தையும் இன்பத்தையும் அளிக்குமென்று கூறுகின்றார். இதனால் பொருளையும் இன்பத்தையும் வெறுப்பதும் வேண்டாமென்பதும் ஆசிரியர் கருத்தன்று.

### 3. நீத்தார் பெருமை

நீத்தார் பெருமை என்ற தலைப்பில் நீத்தார்-முற்றுந் துறந்த முனிவர் என்றும், அறமுதல் மூன்று பொருள்களையும் உலகிற்கு உணர்த்துவார் அவரே என்றும்

கூறுகிறார். முற்றுந்துறந்த முனிவர் இன்பத்தின் இயல்பை எவ்வாறு உலகிற்கு உணர்த்தவியலும்? துறந்த வேடத்தில் இருந்து மறைந்த ஒழுக்கத்தால் இன்பத் துறைகளில் நுழைந்து இயல்பறிந்திருந்தால்தான் உணர்த்தவியலும்?

21. "ஒழுக்கத்து நீத்தார்" என்ற குறளில் ஒழுக்கம் என்பதற்கு தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் (ஆசிரமத்திற்கும்) உரிய ஒழுக்கம் என விளக்கம் கூறுகிறார்.

இவ்வொழுக்கங்களில் வழுவாதொழுகினால் முறையே துறவுள்ளம் உண்டாகுமென்கிறார். ஆம் நான்காம் வருணத்தவன் மனுநூலில் சொன்னபடி முதல் வருணத்தார்க்குத் தொண்டு செய்வதே கடமையாகக் கொண்டும் தனக்கென ஒன்றும் வைத்துக்கொள்ளாது அவர்களுக்கே கொடுத்தும் ஒழுகி வந்தால் இவ்வுலகிலேயே இருக்க வேண்டியதில்லை என்ற துறவுள்ளம் இயற்கையிலேயே விரைவில் உண்டாகிவிடுமென்பது உண்மைதான். இதனால் அவன் வாழ்வில் வெறுப்படைந்து விரைந்து இறந்துபடலும் உண்டாகிவிடும். பிறர் நலத்திற்காகத் தன்னலம் துறந்த பெரியார்களின் பெருமைகளை ஆசிரியர் கூறுமிடத்து, இவர் ஆரியருடைய வருணாசிரமம் ஒழுக்கங்களைக் கொண்டுவந்து எவ்வளவு கணக்காகத் திணித்திருக்கிறார் என்பதைக் கவனிக்கவேண்டும்.

24. "உரனென்னுந்தோட்டியால்" என்ற குறளில் 'வரன் என்னும் வைப்புக் கோர்வித்து'—என்பதற்கு 'எல்லா நிலத்தினும் மிக்கதென்று சொல்லப்படும் வீட்டு நிலத்திற்கு ஓர் வித்தாம்' என்று உரை கூறுகிறார். அறிவால் ஐம்புலனை அடக்கியவனுக்கு அடையத்தகுந்த பயன் இவ்வுலகில் ஒன்றுமில்லைபோலும்; மேலுலகில் போய் பிறப்பதுதான் பயன்போலும். இது "ஐந்தின்

வகை தெரிவான் கட்டே யுலகு'' என்று ஆசிரியர் கூறும் கருத்துடன் பொருத்தமில்லாதிருத்தலை அறியவும்.

25. "ஐந்தவித்தா னாற்ற லகல் விசும்புளார்கோமா னிந்திரனே சாலுங் கரி'' என்ற குறளுக்கு, கவுதமனால் இந்திரன் சாபம் பெற்றதை இவர் எடுத்துக் காட்டுகிறார். இந்தக் கதை வேதங்களில் வரும் கதைகளிலொன்றாகும். இந்திரன் கவுதமன் மனைவி அகலிகையோடு கூடி சாபமடைந்ததாகக் கூறும் கதை உண்மையல்லவென்றும் அலங்காரமாகக் கூறப்பட்ட கதையென்றும் வேதங்களுக்கு உரை செய்தவர்களில் சிறந்தவர் என்று கூறப்படும் திருதயானந்தர் கூறுகின்றார். இதையும் இதைப்போன்று பின்வரும் ஆரிய நூற் கதைகளையும் படித்து, அல்லது பிறர் சொல்லக்கேட்டு, திருவள்ளுவர் அவற்றை நம்பி, தம் நூலில் எடுத்துக்காட்டாக எடுத்தாண்டுள்ளார் என்றுதானே கொள்ளவேண்டும்? நேரில் கண்டு கூறியதாகக் கொள்ள எள்ளளவும் இடமில்லை. அறிவின் கண்ணால் முன்நடந்ததை அறிந்து கூறினார் என்று கொள்ளவும் முடியாது. அறியாமையால் பிறர் கூறியதைக் கேட்டுக் கூறினார் என்றால் அதுவும் ஒப்புக்கொள்ள முடியாததொன்றாம்.

"எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு''
"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு''
"பிழைத்துணர்ந்து பேதைமை சொல்லார் இழைத்
துணர்ந்து ஈண்டிய கேள்வி யவர்''

என்ற குறள்களில் யார்யார் எவ்வெவற்றைச் சொன்னாலும் எப்பொருள் எத்தன்மையில் காணப்பட்டாலும் அவற்றின் உண்மையை உணர்ந்தறிவதே சிறந்த அறிவென்றுகூறுகிறார். மேலும் நுணுகி ஆராய்ந்து உணர்ந்து

கேட்டுத் தெளிந்த நிறைந்த அறிவினை யுடையவர், ஒன்றைப்பற்றிப் பிழைபட உணர்ந்து பிழையாக அறிந்து தமக்கு அறியாமை உண்டாக்கக் கூடியவற்றைச் சொல்ல மாட்டார் என்றும் கூறுகிறார்.

இங்ஙனம் ஒருபொருளின் உண்மைத் தன்மையைக் காணும் மெய்யுணர்வு - மெய்யறிவைப் பற்றியும், பிழையாக உணர்ந்து பேதைமையானவற்றைச் சொல்லலாகாதென்பதைப் பற்றியும் இவ்வளவு நுட்பமாகக் கூறும் நுண்மாண் நுழைபுல முடையவர், "நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில் நலம் - மண் மாண் புனைபாவையற்று" என்று திண்ணமாகக்கூறுபவர். மேற்கண்ட வண்ணம் ஆரியக் கதைகளைக் கேட்டு நம்பி அப்படியே ஒப்புக் கொள்ளுவாரா? அறிவியல்களைத் தொகுத்து ஆக்கிய நூலில் அவைகளை எடுத்துக் கூறுவாரா? எடுத்துக்காட்டாகக் காட்டுவாரா என்பதை அறிஞர்கள் ஆராய்ந்து அறியவேண்டும். ஆசிரியர் இவைகளை உண்மையெனக் கொண்டு உரைத்திருக்க மாட்டார் என்பது திண்ணம். இங்ஙனம் வரும் கருத்துக்கள் எல்லாம் திணிக்கப் பட்டவைகளென்பதே எமது துணிபு. இவைகளுக்குரிய பாட பேதங்கள் உண்மைப் பொருள்கள் யாவும் குறள் உரையில் காணலாம்.

27. "சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின் வகை தெரிவான் கட்டே யுலகு" என்ற குறளுக்கு, இருபத்தைந்து தத்துவங்களையும் சாங்கிய நூலில் ஓதியபடி ஆராய்தல் என்றும் அங்ஙனம் ஆராய்ந்தவன் அறிவின் கண் உலகம் உள்ளதென்றும் கூறுகிறார். இதுவும் வடநூற் கொள்கையாகும். இந்த வறட்டுத் தத்துவ ஆராய்ச்சியை (விசாரணையை) வள்ளுவர் சொல்லவில்லை இன்று பல்லாயிரவர் இந்தத் தத்துவ ஆராய்ச்சியில் தலைசிறந்தவர்களெனக் கூறிக் கொள்ளுகின்றார்கள். பூதம் - 5,

பொறி - 5, புலன் - 5 என எண்ணிப் படித்துப் பாடம் சொல்லி வாணுளை வீணுக்குவதையன்றி இவர்கள் கண்ட பயன் வேறு ஏதேனுமுண்டோ?

இங்ஙனம் சாங்கிய நூலின் தத்துவங்களையும் ஆராய்ந்தால்தான் அறிவு விளங்கும்; இறைவனைக் காணலாம்; அல்லது நானே பிரமமெனத் தானே தானுக விளங்கலாம் எனக் கூறிக்கொண்டிருந்த காலமும் ஒன்று இருந்தது. அந்தச் சாங்கிய நூற் கொள்கையைவிட 36 தத்துவங்களையும், 96 தத்துவங்களையும் கூறும் கொள்கைகளும் உள்ளன. இந்த வறட்டுத் தத்துவ ஆராய்ச்சிகளால் ஒரு பயனுமில்லை; உண்மையுணரவும் வழியில்லை என்று அன்றும் இன்றும் அறிஞர்கள் கூறியுள்ளார்கள்.

"தத்துவாதித் தலைவனைக் காணற்குத் தத்துவமுன்னுவதேன்", "கரணங்களெல்லாம் கடந்து நின்றவன்", "கரணமெலாங் கடந்த தனிக்கரை காண்பதுளதோ" என்னும் அறிஞர் உரைகளையும் அறிக.

## 4. அறன் வலியுறுத்தல்

31. "சிறப்பீனும் செல்வமு மீனும் அறத்தினூஉங் காக்க மெவனோ வுயிர்க்கு" என்ற குறளில், சிறப்புஈனும் செல்வமும்ஈனும் என்பதற்கு, "வீடு பேற்றையும் (மோட்ச உலகத்தையும்) துறக்கத்தையும் (சொர்க்க உலகத்தையும்) தரும்" எனப் பொருள் கூறுகிருர். தருமம் செய்தால் மோட்சத்திற்கும் சொர்க்கத்திற்கும் போகலாம் என்று மற்றவர்களிடம் கூறி ஏமாற்றித் தானம் வாங்கும் தம் வடநூற் கொள்கையை இங்கு வற்புறுத்துகின்ருர். வடநூலார் கூறும் தருமம் வேறு; வள்ளுவர் கூறும் அறம் வேறு.

வீடும் சொர்க்கமும் பெறவே அறத்தைச் செய்வதென்ருல் இவ்விரண்டையும் விரும்பாதவன் அறவழி

நிற்றலையும் அறம் செய்தலையும் மேற்கொள்ள வேண்டியதில்லை என்று முடியுமன்றோ? அறு+அம்=அறம். தீமைகளை அறுப்பது அறம்; நன்மைகளை வளர்ப்பது அறம். இதனால் இதற்கு நல்வினை என்ற பெயரும் உண்டு. உலகம் நலம் பெற்றின்பமடைய தீவினை நீங்க வேண்டும்; நன்வினை ஓங்க வேண்டும். இவற்றிற்குரிய செயல்கள் யாவும் அறமே என்பது ஆசிரியர் கருத்தாகும். எனவே மோட்ச உலகமும் சொர்க்க உலகமும் செல்லவே அறம் செய்ய வேண்டுமென்பதும், அறம் செய்தால் இவையிரண்டும்தான் கிடைக்குமென்பதும் ஆசிரியர் கருத்தன்றென அறிக.

27. "அறத்தாறிது வென வேண்டா சிவிகை பொறுத்தானோ டூர்ந்தா னிடை" என்ற குறளுக்கு, "அறத்தின் பயன் இதுவென்று யாம் ஆகம அளவை யான் உணர்த்தல் வேண்டா; சிவிகையைக் காவுவானோடு செலுத்துவானிடைக் காட்சியளவை தன்னானே உணரப்படும்" என உரை வகுக்கிறார். பல்லக்கில் செல்வது அறத்தின் பயன் என்றும் தூக்கிச்செல்வது பாவத்தின் பயன் என்றும் வள்ளுவர் சொல்லுவதாக இவர் சொல்லுகிறார். மனிதனை மனிதன் அடிமையாக்கி இரக்கமற்ற திமிர்கொண்ட, மனிதன் எளிய மனிதர்களின் தோள்களின்மேல் ஏறிச் செல்வதுதான் அறத்தின் பயன் என்றும் தூக்கிச் செல்வது அவன் செய்த பாவமென்றும் வள்ளுவர் சொல்லுவாரா? இங்ஙனம் கூறுவது இவர் கருத்தானால், எளியவர்கள் இரந்து (பிச்சை எடுத்து) உயிர்வாழ வேண்டுமென்றே பிரமனால் படைக்கப்பட்டுள்ளார்கள் என்று கூறும் அறிவிலார் கூற்றைக்கேட்ட ஆசிரியர் அதையும் சரிதான் என்று ஒப்புக்கொள்ள வேண்டும். "இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டிற் பறந்து கெடுக உலகியற்றி யான்" என்ற குறளில் அப்படி

இரந்துதான் உயிர்வாழ வேண்டுமென்று ஒருவன் உலகைப் படைத்திருந்தால் அவன் விரைந்து அழிந்து விடட்டும் என்று எவ்வளவு உணர்ச்சி வேகத்துடன் உரைக்கின்றூர்; சபிக்கின்றூர். ஆதலால், இது ஆசிரியர் கருத்துக்குப் பொருத்தமற்ற உரையாகும்.

## 5. இல்வாழ்க்கை

41. " இல்வாழ்வா னென்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றி னின்ற துணை "

42. " துறந்தார்க்குந் துவ்வாத வர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான் துணை "

43. " தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல்
கைம்புலத்தா றோம்ப றலை " [தானென்றூங்

என்ற குறட்பாக்களில் 'மூவர்க்கும்' என்பதற்கு "பிரமச்சாரி, வானப்பிரத்தன், சந்நியாசி என்ற மூவர்க்கும்" என்று உரை கூறுகிறூர். பிறர் மதம் மேற்கொண்டு (ஆரியமதக் கொள்கைகளை மேற்கொண்டு) இவ்வாறு கூறினுரென்றும் கூறுகிறூர். துறந்தார்க்கும் - களைகணுனவராற் றுறக்கப்பட்டவர்க்கும், துவ்வாதவர்க்கும்-நல்கூர்ந்தார்க்கும், இறந்தார்க்கும் - ஒருவருமின்றித் தன்பால் வந்திறந்தார்க்கும்" என்று உரை கூறுகிறூர். தென்புலத்தார்-பிதிரர் என்றும், "பிதிரராவார் படைப்புக்காலத்து அயனுற் படைக்கப்பட்டதோர் கடவுட்சாதி; அவர்க்கிடம் தென்திசை யாதலின் தென்புலத்தார் என்றூர்" என்றும் கூறுகிறூர்.

இவர் உரைப்படி ஒரு இல்வாழ்வான் என்பவன் பிரமச்சாரி, வானப்பிரத்தன், சந்நியாசி, ஆதரவற்றவர்கள், வறுமையுற்றவர்கள், ஒருவருமில்லாமல் இறந்தவர்கள், படைப்புக்காலத்து அயனுல் படைக்கப்பட்ட பிதிரர் என்னும் ஒருவகைக் கடவுட் சாதியார், தெய்வம்,

விருந்தினர்கள், சுற்றத்தார்கள் என்று சொல்லப்படும் எல்லாரையும் காப்பாற்ற வேண்டும்; தன்னையும் தன் குடும்பத்தாரையும் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். இவர்கள் யார்? ஏன் ஒரு இல்லறத்தான் இவர்களைக் காப்பாற்றவேண்டும்? எப்படிக் காப்பாற்றவேண்டும் என்று சொல்லுகிறார் என்பவைகளைப் பற்றிச் சிறிது சிந்திப்போம்.

பிரமச்சாரி="ஆசாரியனிடத்திநின்றோதுதலும் விரதங் காத்தலுமாகிய பிரமசரிய ஒழுக்கத்தான்" என்கிறார். வானப்பிரத்தன்="இல்லைவிட்டு வனத்தின்கண் தீயொடு சென்று மனையாள் வழிபடத் தவம் செய்யும் ஒழுக்கத்தான்" என்கிறார். சந்நியாசி="முற்றுந்துறந்த யோக ஒழுக்கத்தான்" என்கிறார். இம் மூவரும் வட நூல்களில் வகுக்கப்பட்டுள்ள நான்கு ஆசிரமங்களைச் சார்ந்தவர்கள். தமிழ்நாட்டில், தமிழ்நூல்களில் இந்த நால்வகைப் பகுப்பே இல்லை, இல்லாதவற்றை இடம் பார்த்துத் திணிக்க வந்தவர் ஆதலால் பிறர் தம் மதம் மேற்கொண்டு (ஆரியக் கொள்கைகளைக்கொண்டு) வள்ளுவர் கூறினார் என்கிறார்.

பிரமச்சாரி:—மணமாகுமுன் கல்வி கற்கும் பருவத்தில் உள்ளவன். இப்பருவத்தில் உள்ள பிள்ளைகளை நல்ல வழியில் வளர்த்துக் கல்வி பயிற்றுவித்து நல்லறிவுடையவர்களாகச் செய்வது பெற்றோர்களுடைய பெருங் கடமையாகும்.

" தந்தைமகற் காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல் "

என்று ஆசிரியர் கூறுவதாலும், இன்றும் பெற்றோர் இக் கடமைகளைச் செய்வதாலும் இதன் உண்மை உணரலாம். இங்ஙனமன்றிக் கல்வி கற்பவர்களை இல்லறத்தான் காக்க வேண்டுமென்றால் அவர்களைப் பெற்றவர்கள்

எங்கே? அவர்கள் ஏன் காப்பாற்றவில்லை? எங்கே யாவது திரிந்து எப்படியாவது பிச்சை எடுத்து வயிறு வளர்த்துக் கல்வி கற்றுக் கொள்ளட்டும் என்று விட்டு விட்டுக் கவலையின்றி யிருப்பார்களா? இப்படி விடுவது தான் பெற்றோரின் பெருங் கடமையா? இவ்வாறு தமிழ் நாட்டில் எப்போதாவது நடந்ததுண்டா?

இது தமிழ்நாட்டு வழக்கமுமில்லை, இது ஒரு ஒழுக் கமுமில்லை. பிள்ளைகளைப் பெற்றுப் போற்றாமல் எங்கே யாவது எப்படியாவது பிச்சை எடுத்துப் பிழைத்துக் கொள்ளட்டுமென்று விலங்குகளைப்போல விட்டுவிடு வது வடநாட்டவரின் வழக்கம் ஆகும். இதனால் அவர் களை மற்றவர்கள் காப்பாற்ற வேண்டுமென நூல்களி லும் எழுதிவைத்தார்கள். இந்த முறையை வள்ளுவரும் ஏற்று எழுதினார் என்பது எப்படிப் பொருந்தும். இது, "தந்தை மகனுக்குச் செய்யும் உதவி கற்றோரவையில் முதல்வனாயிருக்கும்படி கல்வி கேள்விகளில் வல்லவனாகச் செய்வதுதான்" என்பதற்கு முரணாகத் தோன்ற வில்லையா?

வானப்பிரத்தன் :—வீட்டை விட்டுக் காட்டிற்குச் சென்று மனைவி வழிபாடுசெய்ய தவம் செய்யும் ஒழுக்க முடையவன். இவனுக்கும் இவன் மனைவிக்கும் பசிக்கு உணவும், குளிருக்கு உடையும், நோய்க்கு மருந்தும், தங் குவதற்கு வீடும் கொடுத்து அந்நெறியில் வழுவாமல் காப்பாற்ற வேண்டியதும் ஒரு இல்லறத்தானுடைய கடமையாம்! மனைவி இருக்கவும் வீடு இருக்கவும் ஏதா வது தொழில் செய்து பிழைப்பை நடத்துவதை விட்டு, ஏன் மனைவியுடன் காட்டிற்குப் போகவேண்டும்? அப் படிப் போனவர்கள் காட்டிலுள்ள காய்கனி, கிழங்கு, தழை, சருகு இவைகளை உண்டு எப்படியாவது காலங் கழித்துக்கொள்ளாமல் இல்லறத்தானுக்கு ஏன் தொல்லை

கொடுக்கவேண்டும்? இவர்கள் காட்டிற்குச் சென்று என்ன செய்கின்ருர்கள்? இதனுல் யார்க்கு என்ன பயன்? இது சோம்பேறி வாழ்க்கையா? பிறரை ஏமாற்றி உழைப் பின்றிப் பிழைக்கும் வழியா? இச்சோம்பேறிகளுக்கு மற்ற உழைப்பாளிகள் உதவி செய்யவேண்டுமாம்! அது தான் தருமம் என்று எழுதி வைத்திருப்பதுதான் தரும சாத்திரமாம்! அதைத் தழுவியே வள்ளுவர் எழுதினுர் என்கிருர் உரை எழுதிய பரிமேலழகர்.

"அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற் றிற் போஒய்ப் பெறுவ தெவன்" என்ற குறளின் அடிக ளால் இந்த வடவருடைய மடமைக் கொள்கையை அடி யோடு வீழ்த்துகின்ருர் வள்ளுவர். இல்லாமையாலும் சோம்பேறித்தனத்தாலும் இவ்வாறு பிழைக்கின்ருர்கள் என்ருலும், "இலமென் றசைஇ யிருப்பாரைக் காணின் - நிலமென்னும் நல்லாள் நகும்' என்ற குறளில் இங்ஙன மிருப்பதும் கூடாதெனச் சாடுகின்ருர். ஆதலால் இது ஆசிரியர் கருத்துக்கு ஏற்றதன்று. இத்தகைய ஒழுக்கம் தமிழ் நாட்டிலில்லை. வடநாட்டுப் பிச்சைக்காரக் கும்பல் கணவனும் மனைவியும் இணையிணையாக வந்து தொல்லை கொடுப்பதை எல்லாரும் அறிவர். அவர்களும் இல்லை விட்டு வந்தவர்கள்தான். இவர்களைச் சேர்ந்தவர்கள் தான் போலும் வானப்பிரத்தர்கள்.

சந்நியாசி :—முற்றுந்துறந்த யோக வொழுக்கத்தான் என்கிருர். இத்தொடரின் கருத்தே முரண்பாடுடையது. வடநூன் முறைப்படி சந்நியாசம் பெற்ருல்தான் மோட் சம் உண்டு. சந்நியாசி கமண்டலம், தண்டம், பௌத் திரம் முதலானவைகளை வைத்துக்கொண்டிருக்க வேண்டு மென மனு அத்-6. சு-41ல் கூறப்பட்டுள்ளது. இவ்வள வையும் வைத்திருப்பவன் எவ்வகையில் முற்றுந் துறந்த வனுவான்? வள்ளுவர் துறவைப்பற்றிக் கூறுமிடத்து

இங்ஙனம் கூறுகின்ருரா? தனக்கென ஒரு பொருளு மில்லாமையே துறவுக்கியல்பாகும் என்கிருர். பிறப்ப றக்கலுற்ருர்க்கு உடம்புமிகை ஆதலால் பிறபொருளின் தொடர்பு எதற்கு என்கிருர். வடநாட்டு சந்நியாசி களின் புறவேடமாகிய போலிக் கோலத்தை மறுத்தே இவ்வாறு கூறுகின்ருர். நெஞ்சில் துறவு வேண்டும்; துறந்தார்போல் வஞ்சித்து வாழும் வெளிவேடம் வேண் டியதில்லை என்கிருர். பிறர் நலம்-பொதுநலத்திற்காகத் தன்னலமுற்றும் துறந்த பெரியார்களைப் போற்ற வேண் டியது இல்லறத்தானுடைய கடைமை என்கிருர். 42ஆம் குறளில் துறந்தார் என இவர்களையே குறிப்பிடுகின்ருர். பரிமேலழகர் 41ஆம் குறளில் மூவரில் சந்நியாசியைச் சேர்த்து விட்டமையால் அடுத்த குறளில் துறந்தார் என் பதற்கு துறவிகள் எனப் பொருள் கூற இடமில்லாமல் தடுமாறுகிருர். களைகணுனவரால் துறக்கப்பட்டார் என வலிந்து செயப்பாட்டு வினையில் பொருள் கூறுகிருர். இவற்ருல் மூவர் என்பவர் பிரமச்சாரி, வானப்பிரத்தன், சந்நியாசி என்பவர்களல்லர் என்பதையும் இங்ஙனங் கூறுவது ஆசிரியர் கருத்தன்று என்பதையும் அறிய வேண்டும்.

இறந்தார் :—ஒருவருமின்றித் தன்பால் வந்து இறந் தார் என்றும், இங்ஙனம் இறந்தார்க்கும் நீர்க்கடன் முதலியன செய்து நல்லுலகின்கண் செலுத்தவேண்டு மென்றும் கூறுகின்ருர்.

தெருவில் பசியால் சோர்ந்து வெயிலில் விழுந்த ஒரு வனை, அல்லது கொடும்பிணியால் வருந்தும் ஒருவனை, ஒரு இல்லறத்தான் தன் வீட்டு நிழலில் வைத்து உண வளித்துப் பிற உதவியும் செய்கிருன்; தன்னுலான உதவி செய்தும் அவன் இறந்து விடுகிருன். இந்நிலையில் அவ்வில்லறத்தான் என் செய்வது? அப்பிணத்தை வெளி யில் இழுத்தெறிந்து விடாமல் எவ்வகையிலாவது இடு காட்டிலோ சுடுகாட்டிலோ கொண்டு சேர்க்கவேண்டி யதுதான் அவன் செய்யவேண்டியதாகும். இங்ஙனம் செய்வதும் இயல்பே. இதில் இறந்தார்க்கு துணை என்ன உள்ளது ஆதலால் இதை வள்ளுவர் சொல்லவில்லை.

இதற்கு மேலும் செய்யவேண்டியது இருக்கின்றதென்று பரிமேலழகர் பகர்கிறார்! என்ன? இறந்தவன் உயிர் நல்லுலகம் செல்வதற்காக அவனுக்கு கருமக்கிரியைகள் யாவும் செய்யவேண்டும். அவன் இறந்த நாள், திதி இவைகளைக் குறித்து வைத்துக்கொண்டு அவனுக்காக மாசியம் (மாதந்தோறும் செய்வது) திதி (ஆண்டுதோறும் செய்யும் சிரார்த்தம்) செய்யவேண்டும் என்று கூறுகிறார்.

பெற்றோர்க்கு இங்ஙனம் செய்யவேண்டுமென்று பின்னால் கூறுகிறார். இங்கு வழிப்போக்கனாய் வந்து இறந்த மற்றவர்க்கும் செய்தே ஆகவேண்டு மெனவும் வற்புறுத்துகிறார். இதனால், எவன் இறந்தாலும் சரி அவனுக்கு மகனாக இருந்து இல்லறத்தான் எல்லாம் செய்யவேண்டும் என்பதும், எவன் எங்குபோய் விழுந்து இறந்தாலும் எவனிடமிருந்தாவது கருமாதி, மாசியம், திதி, திவசம் என்ற பெயர்களில் அரிசி பருப்பு முதல் செருப்பு வரையில் எல்லாப் பொருள்களையும் உழைப்பில்லாமல் பெற்று ஒருகூட்டத்தார் பிழைக்கவேண்டுமென்பதும்தான் பரிமேலழகர் விருப்பம். தன் இனத்தார் இத்தகைய உதவிகளை அடைய இடந்தேடி வைக்காமல் திருக்குறளுக்கு உரை எழுதுவதில் பெரும்பயன் என்ன? ஒன்றுமில்லையல்லவா? ஆதலால் இவ்வாறு எழுதினார். இங்ஙனம் திக்கற்றவர்கள், தெருவில் செல்பவர்கள் இறந்தால் புரோகிதர்களுக்கு அள்ளிக்கொடுத்து நல்லுலகில் செலுத்தவேண்டுமென வள்ளுவர் கூறுவரா வென்பதை ஆராய்ந்தறியவும்.

தென்புலத்தார் :—பிதிரர்; "பிதிரராவார் படைப்புக் காலத்து அயனால் படைக்கப்பட்டதோர் கடவுட் சாதி; அவர்க்கிடம் தென்திசை யாதலின் தென் புலத்தா ரென்றார்", என்கிறார். இவர் கூற்றுப்படி பிதிரர் என்பவர், பிரமன் உலகத்தைப் படைக்கும்போதே அவனால் படைக்கப்பட்ட ஒரு கடவுட் சாதியாராம். இவர்கள் தென் திசையில் இருக்கின்றார்களாம். இதனால், இவர்கள் நம் வீட்டில் இறந்த பெற்றோர்களோ முன்னோர்களோ அல்லர் என்பதும் தெள்ளிதின் விளங்கும். ஆயினும் தென் புலத்தர் கடன் என்றால் பெற்றோர்க்குப் பிள்ளைகள்

செய்யும் நீர்க்கடன் என்று கூறுகின்றார்கள். இது எவ்வாறு பொருந்தும்? இதற்கு ஆரியர் கூறும் காரணத்தை ஆராய்வோம்.

"உங்கள் பெற்றோர்களுக்கு (பிதிர்களுக்கு) மாற்றாள்களாக (பிரதிநிதிகளாக) மேற்கண்ட பிதிரர்கள் பிரமனால் படைக்கப்பட்டு இருக்கின்றார்கள். நீங்கள் புரோகிதர்கள் (பார்ப்பனர்கள்) மூலமாக இவர்களுக்குக் கொடுக்கும் பொருள்களையெல்லாம் இவர்கள் பெற்று மனமகிழ்ந்தால், உங்கள் பெற்றோர்களும் மனமகிழ்வார்கள்" என்று சொல்லுகின்றார்கள். இறந்த நம் பெற்றோர்கள் எங்கே இருக்கின்றார்கள். எந்த நிலையில் இருக்கின்றார்கள். அவர்களுக்கு இந்த உணவு முதலியன வேண்டுமா? வேண்டுமானால் உயிர் உடலுடனிருந்தபோது உணவு முதலியன கேட்டதைப்போன்று நம்மை ஏன் கேட்கலாகாது? அவர்களுக்கு நாமே ஏன் நேராகப் படைக்கலாகாது? இங்குள்ள பார்ப்பனர்களுக்குக் கொடுத்து அவை பிதிரர்களுக்குச் சென்று பிதிரர்கள் மகிழ்வால்தான் நம் பெற்றோர்களுக்கு மன நிறைவு-அமைவு (திருப்தி) உண்டாக வேண்டுமா? நம் பெற்றோர்கள் பெயரால் ஏழைமக்களின் பசியைப் போக்கினால் அது பெற்றோர்க்குப் பெருமகிழ்வளிக்காதா? பார்ப்பனர் வயிறு பருத்தால்தான் பொருத்தமாகுமா? பெற்றோர் உயிர்கள் எவ்வளவுகாலம் வரை எங்கிருக்கும்? பின் எங்கு செல்லும் என்பது யார்க்கு எப்படித் தெரியும்? தெரியாமல் ஆண்டுதோறும் ஆரியருக்கு அரிசி பருப்பு செருப்புக்கள் அளிப்பதால் பயன் என்ன? என்பதைச் சிறிதேனும் சிந்தித்தால் இதன் உண்மையை உணர்வுடையோர் உணர்ந்து கொள்ளலாம்.

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

என்ற குறளில் ஒருவன் உறங்கி விழிப்பதுபோல் இறந்தவன் பிறப்பதும் நிகழ்கின்றதென்கிறார். இங்ஙனம் இறந்த உயிர் வேறு உடல் எடுத்துப் பிறந்து விடுவதால் பார்ப்பனர் மூலம் கொடுக்கும் உணவு எங்கேயுள்ள உயிர்க்கு எப்படிப் போய்ச் சேரும்? ஆவியாய் உள்ள

உயிர்க்கா? பிறந்த பின் உடலுடன் உள்ள உயிர்க்கா போய்ச் சேருவது? உறங்கும் ஒருவனுக்கு விழிக்குமுன் உணவு கொடுப்பது இல்லை. அதுபோல இறந்த உயிர்க்கு பிறக்குமுன் உணவு தேவையில்லை. பிறந்த பின் பிறந்திருக்குமிடத்தில் உணவு கொடுப்பார்கள்; ஆதலால், பார்ப்பனர்கள் மூலம் அனுப்ப வேண்டியதில்லை.

கபிலர் என்னும் பெருந் தமிழ்ப் புலவர் இக்கொள்கையைப் பற்றிக் கூறுவதையும் இங்கு நாம் அறிந்து உணர்ந்துகொள்ள வேண்டும்.

"பார்ப்பன மாக்கள்! பகர்வது கேண்மின்!
இறந்தவராயுமை இவ்விடை யிருத்திப்
பாவனைமந்திரம் பலபட உரைத்தே
உமக்கவர் புத்திரர் ஊட்டினபோது
அடுபசியாற்குலைந்து ஆங்கு அவர்மீண்டு
கையேந்திநிற்பது கண்டதார் புகல்வீர்?
அருந்திய உண்டியால் ஆர்பசி கழிந்தது?
ஒட்டியர், மிலேச்சர், ஊணர், சிங்களர்,
இட்டிடைச் சோனகர், யவனர், சீனத்தர்
பற்பலர் நாட்டிலும் பார்ப்பாரிலையால்."

என்பதனுல், இவர்கள் இறந்தவர்களின் பெயரைச் சொல்லி இருக்கும் மக்களை ஏமாற்றி வாங்கித் தின்று வயிறு பிழைக்கின்ருர்களென்றும் கூறுகிருர். மேலும் பார்ப்பனர் இல்லாத நாடுகளில் உள்ள மக்களின் பெற்ருேர்கள் பார்ப்பனர் மூலம் உணவு கிடைக்கப்பெருமல் பட்டினி கிடக்கின்ருர்களா? என்றும் கேட்கிருர். அந்நாளிலேயே இத்தகைய அறிவியல் வாதிகள் இருந்தார்களென்பதையும் இதனுல் அறிகின்ருேம்.

இங்ஙனம் ஆரிய வருணுசிரமக் கொள்கைப்படி பிரமச்சாரி, வானப்பிரத்தன், சந்நியாசி இவர்களை ஆதரிக்க வேண்டுமெனவும், எவர்கள் இறந்தாலும் தென்புலத்தார் என்று எங்கேயோ உள்ள ஒருவகைக் கடவுட் சாதியார்க்காக இங்கு உள்ள பார்ப்பனச் சாதியார்களிடம் அரிசி, பருப்பு, காய்கறி, நெய், பால், தயிர், உடை, குடை, செருப்பு முதலானவைகளைக் கொடுத்து மகிழ்

விக்க வேண்டுமெனவும், ஆரியர் கூறும் தன்னலக் கொள் கைகள் தமிழ் நாட்டில் இடம்பெற்று விட்டதை உணர்ந்த திருவள்ளுவர் தம் நூலில் இவைகளை மறுத் துக் கூறுகின்ருர். தமிழ் மரபிற்குரிய முறைப்படி உதவி செய்வதற்குரியவர்கள் யார்யார் எனத் தொகுத்துச் சுட் டியும் வகுத்துக் காட்டியும் விளக்குகின்ருர்.

41-ஆம் குறளில், நல்லாற்றினின்ற இல்வாழ்வான் பின்கூறப்படும் இயல்புகளையுடைய மூவர்க்கும் துணை செய்ய வேண்டுமெனத் தொகுத்துக்கூறி, அம்மூவர் இன் னின்னுர் என்று 42-ஆம் குறளில் துறந்தார், துவ்வாதவர், இரந்தார் என வகுத்தும் கூறுகின்ருர். இங்கு துறந்தார் என்பவர் வடவர் கூறும் சந்நியாசிகளல்லர். பிறர் நலத் திற்காகத் தன்னலம் துறந்த பெரியோர்களாவார். 43-ம் குறளில் தென்புலத்தார் என்பது. உயர்ந்த அறிவுடைய பெருமக்களைக் குறிப்பிடுஞ் சொல்லாகும். இவர்கள் உலக மக்களின் அறிவு வளர்ச்சிக்காகவே பணிபுரிபவர் கள். ஆதலால், இவர்கள் உலகில் உள்ளவரையிலும் இவர்களைப் போற்றவேண்டியது மக்களுக்குரிய கடமை களின் ஒன்ருகும். இவர்கள் பருஉடலை நீத்த பின்னும் இவர்களின் நினைவு நாட்களைக் கொண்டாட வேண்டிய தும், அந்நாட்களில் அவர்கள் வாழ்ந்த முறை, உலகுக் கியற்றிய உதவிகள், அவர்களாக்கிய நூல்களின் சிறப்பு, நாம் அவர்களை அவர் நூல்களைப் பின்பற்றி நடக்க வேண்டிய வகைகள் முதலியனவும் மக்களுக்குத் தெரி விக்க வேண்டியதும் பயன்தரும் செயல்களாம். இது தென்புலத்தார்க்குச் செய்யும் கடமைஎன்பது வள்ளுவர் கொள்கையாம்.

இதற்கு மாருகப் பரிமேலழகர் புகுத்திய உரையில் பார்ப்பனர்களின் வயிற்றுப் பிழைப்புக்குத் திருக்குற ளிலும் வழியு உள்ளதென உரைக்கிருர். இந்த வடநூற் கொள்கைகளைக் கொண்டே வேத பாடசாலைகள், சாத் திர பாடசாலைகள், சந்நியாசி மடங்கள் இவைகளுக் காகப் பல மானியங்கள், இனும்கள் ஏற்பட்டுப் பல கோடிக்கணக்கான பொருள்கள் பயனின்றிச் செலவா கின்றன. பல்லாயிரக்கணக்கான பார்ப்பன மாக்கள்

உழைப்பின்றி உண்கின்ருர்கள். கலை வளர்ச்சிக்கும் வாழ்விற்கும் பயன்படாத வறட்டு கல்வியில் (வேத பாடம் சாத்திர பாடங்களில்) பொருளும் காலமும் வீணுகின்றன. சந்நியாசிகளின் ஆடம்பர வாழ்வும் அடாத செயல்களும் மிகுந்தன. நாட்டின் நற்கல்விக் காகவும் தொழிலுக்காகவும் பயன்படவேண்டிய பெரும் பொருள் அவர்கள் கையில் திரண்டு குவிந்து தீயசெயல் களில் செலவாகித் தீமைகளை விளைவிக்கின்றன. இறந்த வர்களின் பெயரால் ஏமாற்றி வயிறு பிழைத்து வாழ் தலும் ஏமாற்றமடைந்து எல்லாம் கொடுத்துத் தாழ் தலும் இயல்பாகி விட்டன. இவை யாவும் ஒரு நாட்டின் பொருள் வளர்ச்சிக்கும் தொழில் வளர்ச்சிக்கும் முன் னேற்றத்திற்கும் கேட்டை வரவழைக்கும் பெரும் பாட் டைகளாகவே அமைந்துள்ளன வென்பதில் ஐயமில்லை. இவற்றைத்தான் திருவள்ளுவர் தம் அறிவு நூலில் கூறுகின்ருர் என்ருல், பிறநாட்டறிஞரனைவரும் புகழும் பேரறிவாளரை, மெய்யுணர்வாளரை அறிவற்றவராக்கி விட நாம் எவ்வளவு ஆர்வமுடையவர்களாகவும் அறி வீனர்களாகவும் இருக்கின்ருேம் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

## 7. புதல்வரைப் பெறுதல்

இந்த அதிகாரத்துக்குப் புதல்வரைப் பெறுதல் என்ற தலைப்பே புதிதாகக் கொடுக்கப்பட்டதாகும். இவ் வதிகாரத்திலும் குறளில் மற்றெவ்விடத்திலும் புல்வன், புதல்வர் என்ற சொற்களே வரவில்லை. இதற்குமுன் அதிகாரத்தின் இறுதியில் "நன்மக்கட் பேறு" என்று இந்த அதிகாரத்தின் பெயரைத் தோற்றுவாயாக ஆசிரி யர் எடுத்தாண்டு இருக்கிருர். இந்த அதிகாரத்திலும் ஒவ்வொரு குறளிலும் மக்கள் என்ற பெயரையன்றிப் புதல்வன் என்ற பெயர் எடுத்தாளப்படவில்லை. இங் ஙனமாக, இவர் புதல்வரைப் பெறுதல் என்ற தலைப்பை ஏன் தந்தார் என ஆராய்வோம்.

இவர் இவ்வதிகாரத்திற்குத் தந்துள்ள விளக்கத் தைக் கவனிக்க வேண்டும். அது வருமாறு "அஃதாவது

இருபிறப்பாளர் மூவரானும் இயல்பாக இறுக்கப்படும் கடன் மூன்றனுள், முனிவர் கடன் கேள்வியானும், தேவர்கடன் வேள்வியானும், தென்புலத்தார் கடன் புதல்வரைப் பெறுதலானுமல்லது இறுக்கப்படாமையின் அக்கடனிறுத்தற் பொருட்டு நன்மக்களைப் பெறுதல்'' என்று எழுதுகிறார். மேலும், இருபிறப்பென்பது பூணூல் போடுவதற்கு (உபநயனத்திற்கு) முன்னொரு பிறப்பும் பின்னொரு பிறப்புமாகிய இரண்டு பிறப்புக்களென்றும் அந்தணர், அரசர், வணிகர் என்னும் மூன்று வருணத்தாரும் இருபிறப்பாளர் (துவிசர்) என்றும் கூறுகிறார்.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' எனக் கூறும் குறளில் இருபிறப்புக்கு இடம் எங்கே இருக்கிறது? தொல்காப்பியத்தில் சொல்லுவதைப் போல நால்வருணமும் பூணூலும் குறளில் எங்கே சொல்லப்பட்டுள்ளது? ஆரியர்களின் வேள்வியை மறுத்துக் கூறுவதல்லாமல் செய்யும்படி எங்கே சொல்லப்பட்டுள்ளது? அவர்கள் கூறும் பிதிரர்கள் தான் தென்புலத்தார் என்ற குறிப்பாவது எங்கே எதனால் தெரிகிறது? மகன் தந்தைக்கு நீர்க்கடன் செய்யவேண்டுமென்று எங்கு கூறப்பட்டுள்ளது? இவ்வளவுக்கும் இடமில்லாத குறளில் பரிமேலழகர் இடையிடையே இடம் ஏற்படுத்திக்கொண்டு வடவர் கொள்கைகளை நுழைத்துத் திணிக்கின்றார். இது வடவர் கொள்கை என்பதற்குத் தொடர்பும் காட்டுவோம்.

"தேவர்கள், இருடிகள், பிதுர்கள் இம்மூவர்க்கும் செலுத்தும் மூன்று கடனுடன் மனிதன் பிறக்கிறான். யாகம் செய்வதால் தேவர்களுடைய கடனையும், வேதம் ஓதுவதால் இருடிகளுடைய கடனையும், புத்திரர்களைப் பெறுவதால் பிதுர்களுடைய கடனையும் தீர்க்கவேண்டும்.'' மனு. அத்-6. சு-36.

"யாகம் செய்யாமலும், வேதமோதாமலும், புத்திரரைப் பெறாமலும் மோட்சத்தினை யடைய முயற்சி செய்பவன் நாசமடைவான்'' அத்-6. சு-37. இந்தக் கருத்தைத் தலைப்புக்குத் தந்துள்ள விளக்கத்தில் பொருத்தமாக அமைத்திருப்பதை அறியவும். 'புத்' என்னும் நரகத்தி

விருந்து எடுத்துப் பிதுர்க்களைக் காப்பாற்றுவதால் 'புத்ரன்' என்ற பெயர் மகனுக்கு வந்தது என்பது வடநூற் கொள்கை. புத்ரன் என்ற சொல்லிலிருந்தே புதல்வன் என்ற சொல் வந்ததென்பதும் அவர்கள் கருத்து. இதனால் புதல்வன் என்றால் பெற்றோர்க்கு நீர்க்கடன் புரியவே பிறந்தவன் என்ற பொருளில்-கொள்கையில் புதல்வரைப் பெறுதல் என்ற தலைப்பைத்தந்தார் பரிமேலழகர். இந்தக் கருத்தைக் கண்டித்து "புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்" என மணிமேகலையில் தண்டமிழ்ச் சாத்தனார் மறுத்துரைக்கின்றார். வடவர் கொள்கைக்கு இடங்கொடுக்கலாகாதென்றே வள்ளுவர் புதல்வர் என்ற சொல்லை ஒதுக்கித் தள்ளிவிட்டு மக்கள் என்ற சொல்லையே வழங்கினார்.

63. தம்பொருளென்பதம் மக்க ளவர்பொருள்
தம்தம் வினையான் வரும்.

என்ற குறளுக்கு. "தம் புதல்வரைத் தம் பொருளென் சொல்லுவார்; அப்புதல்வர் செய்த பொருள் தம் நோக்கி அவர் செய்யும் நல்வினையானே (சிரார்த் தால்) தம்பால் வரும்" என்று உரை கூறுகிறார். இ மக்கள் என்பதற்குப் புதல்வர் என்ற சொல்லையும் பு வரின் பொருள்கள் சிரார்த்தத்தின் மூலம் தமக்குவ சேருமென்ற வடநூற் கொள்கையையும் நுழைத்த அறியவும். இவ்வாறே இவ்வதிகாரத்தில் புதல்வ என்ற சொல்லை ஒன்பது இடங்களில் மக்கள் என்ப குப் பதிலாக இவர் எடுத்தாளுகிறார். "அறிவறிந்த எ தனால், மக்களென்னும் பெயர் பெண்ணை ஒழித்து பு வனைக் குறித்து நின்றது" என்று கூறுகிறார். "சான் னெக்கேட்ட தாய்" என்பதற்கு, "பெண்ணியல்ப தானாக அறியும் திறமின்மையால் கேட்டதாயென கூறினார்" என்றும் விளக்கம் எழுதுகின்றார். இவற் பெண்களுக்கு அறிவில்லை என்ற வடநூற் கொள்கை வலியுறுத்துகின்றார். இங்ஙனம் தமிழர் கொள்கைக் வள்ளுவர் உள்ளக் கருத்துக்கும் பொருத்தமில்லா நூற் கொள்கைகளை நுழைத்துக் குறளின் பெருமைக் குழிபறித்த பரிமேலழகரைத்தான் நம் புலவர் மணி

போற்றிப் புகழ்கின்றார்கள். இத்தலைப்பு மக்கட்பேறு என்றே இருக்கவேண்டும்.

## 33. கொல்லாமை

328. "நன்றாகு மாக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்-கொன்றாகு மாக்கம் கடை" என்ற குறளுக்கு "நன்று ஆகும் ஆக்கம் பெரிது எனினும்—தேவர் பொருட்டு வெள்விக்கண் கொன்றால் இன்பமிகும் செல்வம் பெரிதாம் என்று இல்வாழ்வார்க்குக் கூறப்பட்டதாயினும், சான்றோர்க்குக் கொன்று ஆகும் ஆக்கம் கடை - துறவான மைந்தார்க்கு ஒருயிரைக் கொல்லவரும் செல்வம் கடை" என்று உரை கூறுகிறார். 'இன்பமிகுஞ் செல்வமாவது தாமும் தேவராய் துறக்கத்துச்சென்று எய்தும் செல்வம்' என்று விளக்கமும் கூறுகிறார்.

இதனால், 'தேவர் பொருட்டு யாகத்தில் உயிர்களைப் பலிகொடுத்தால், அங்ஙனம் பலிகொடுத்தவர்கள் தேவர்களாய் சொர்க்க உலகத்தில் சென்று இன்பம் அடைவார்கள்' என்றும், இவ்வாறு கொலைசெய்து வேள்வி செய்யும்படி இல்வாழ்வானுக்கு வள்ளுவர் கூறியுள்ளார் என்றும் இவர் உரை கூறுகிறார். கொலைசெய்து வேள்வி செய்யும்படி வள்ளுவர் இல்வாழ்வானுக்கு எந்த இடத்தில் (எந்த அதிகாரத்தில்) கூறியுள்ளார்? மிருகங்களைப் பலியிட்டால் தேவர்களாகிவிடலாம் என்ற வடவர்களின் கொள்கையை வள்ளுவர் ஒப்புக்கொண்டாரா?

"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று"

என்று மறுத்து அன்றோ கூறுகின்றார்! இக்குறளுக்குப் பிறிதோரிடத்தில் விரிவான உரை எழுதியிருப்பதையும் கவனிக்கவேண்டும். இங்ஙனம் திருவள்ளுவர் வெளிப்படையாக கொலையையும், கொலைசெய்து இயற்றும் வேள்வியையும் மறுத்துக் கூறி இருந்தும், பரிமேலழகர் இடம்பார்த்து மனுநூலின் கொள்கையான வடவர் கொள்கையை எப்படியாவது நுழைத்துவிட வேண்டுமென நுழைத்துள்ளார். இவர், தன்னினக் கொள்கையைத் திணிக்கவேண்டுமென உரை எழுதிய மடமையை

விட இந்த உண்மை உணர்ந்து கொள்வியலாத பெரிய மடமை நம்மிடம் இன்னும் குடிகொண்டிருக்கிறதே என்பதைக் கருதித்தான் வருந்தவேண்டிய நிலைமையில் இருக்கின்றோம்.

## 45. பெரியாரைத் துணைக்கோடல்

இத்தலைப்புக்குப் பேரறிவுடையாரைத் தமக்குத் துணையாகக் கோடல் என்கிறார்; பேரறிவுடையார் யாரெனில்? அமைச்சர், புரோகிதர் என்கிறார். இங்கு, தம் இனத்தவராகிய புரோகிதரைப் பேரறிவாளரோடு சேர்த்துவைப்பதை நோக்கவேண்டும்.

> 442. " உற்றநோய் நீக்கி யுறுஅமை முற்காக்கும்
> பெற்றியார்ப் பேணிக் கொளல் "

என்ற குறளில் 'முன்காக்கும் பெற்றியார்' என்பதற்குப் புரோகிதரும் அமைச்சரும் என விளக்கம் கூறுகிறார். புரோகிதர் என்ன செய்வார் என்பது தெரிந்ததே! பலியிட்டு யாகம் செய்து மக்களைத் தேவர்களாக்குவது போல அரசாங்கப் பொருளைப் பல யாகங்களால் அழித்து அரசனையும் தேவர்களுக்கரசனுக்கி விடுவேன் என்பார். இங்ஙனம் ஏமாந்த அரசர்கள் பலர்; அழிந்த அரசர்களும் பலர். 'புரோகிதர்கள் செய்யும் சாந்திகளால் அரசனுக்கு வரும் துன்பத்தை நீக்கி விடுவார்கள்" என்றும் கூறுகின்றார். இந்தப் புரோகித ஏமாற்றம் அரசியலையும் அடிமையாக்கி விடுமன்றோ? ஆதலால் அரசியலில் புரோகிதரைப் புகுத்தினர். இப்படிப் புரோகிதம் பார்த்து முதல்நாள் இரவே உரிமை (சுதந்தரம்) பெற்றதன் பயன்தான் பல்லாயிரமக்கள் கொலைக்குப் பலியானதும், அறுபது இலக்கம் பேர்கள் அகதிகளாகத் திகைப்பதும், மங்கையர்கள் மானமும் கற்பும் அழிந்து மடிந்ததும் என்று கொள்ளவேண்டும். இன்னும் அரசியலில் இந்தப் புரோகிதம் என்னென்ன செய்யுமோ யார் அறிவார். எவ்வகையிலும் எவ்விடத்தும் தன் இனத்தவர் இடம் பெற வேண்டுமென்பதொன்றே இவர் கருத்து; இப்போதுள்ளவர்களின் கருத்தும் இதுவே.

543. "அந்தணர்நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல்"

என்ற குறளில் 'அந்தணர் நூல்' என்பதற்கு 'அந்தணர்க்குரித்தாய வேதம்' என்கிறார். "அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் - செந்தண்மை பூண்டொழுகலான்" என்ற குறளில் வேதம் ஓதி வேள்வியில் பல உயிர்களைப் பலியிடும் கொலைகாரப் பார்ப்பனர்களையா அந்தணர் என்று கூறுகின்றார்? உயிர்களிடம் செந்தண்மையான கருணைபூண்ட அருளாளரையன்றோ அந்தணரென்கின்றார். இது தெரிந்தும் வேதம் ஓதிப் பல உயிர்களைப் பலியிடும் பார்ப்பானையே அந்தணனென்று கூறும் பரிமேலழகர் பேதமைக்கு அளவேயில்லை. "பார்ப்பனர் அந்தணர் என்ற பெயரால் அழைக்கப் படுதற்குத் தகுதியுடையரல்லர் என ஆசிரியர் இடித்துக் கூறுகிறார்" என்று அறிஞர் E. J. ராபின் சன் கூறுவதை 56ஆம் பக்கம் பார்க்கவும்.

560. "ஆபயன்குன்றும் அறுதொழிலோர் நூல் மறப்பர்-என்ற குறளில் 'அறுதொழிலோர்' அந்தணர் என்கிறார். அறுதொழிலில் உயிர்ப்பலியிட்டு யாகம் செய்தலும் ஒன்று. இவரை அந்தணர் என்று ஆசிரியர் கூறுவாரா? அறியாமை நிறைந்த வேதத்தை நூல் என்று கூறுவாரா? பார்ப்பானுக்குரிய அறுதொழிலைத் தம் நூலில் எடுத்தோதுவாரா? வேறு வருணத்தார்க்குரிய தொழில்களை எங்கேனும் எடுத்துக்கூறியுள்ளாரா? இவற்றையெல்லாம் எண்ணி உண்மை உணர வேண்டாமா? இதல் உள்ள செருகலை அறியவேண்டாமா? பார்ப்பானை ஆசிரியர் அந்தணன் என்று கூறுகிறார் என்பதை எடுத்துக்காட்டவும் நிலைநாட்டவும் இவர் எவ்வளவு பாடுபடுகிறார். அந்தணர் நூல் என்பது வேதம் என்று சொல்லிவிட்டால் வேதம் ஓதுபவன் பார்ப்பான்தானே? ஆகவே பார்ப்பானைத்தானே அந்தணன் என்கிறார் என்று முடிவுகட்டி விடலாமென்பது இவர் கருத்து. இதற்காகவே,

"மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்"

என்ற குறளில் ஓத்து, பார்ப்பான் என்ற சொற்களைத் திணித்துள்ளார். 'ஓத்து' என்பதற்கு 'வேதமோதுதல்' என்று கொண்டு, 'பார்ப்பான்' என்பதற்கு 'உயர்ந்த வருணத்திற் பிறந்த பார்ப்பனன்' என்று தன் உயர்ந்த வருணத்தை எவ்வளவு உயர்த்தவேண்டுமோ அவ்வளவு உயர்த்தி இருக்கிறார்.

"ஒழுக்கமுடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்."

என்பதில் பொதுவாக மக்களுக்கு ஒழுக்கமே உயர்குடிப் பெருமையை அளிக்கும் எனக் கூறுகின்ற ஆசிரியர், பார்ப்பான் மட்டும் பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடுவான் என்று பிரித்துக் கூறுவாரா? பிறர் கெட்டுவிடலாமென்பது ஆசிரியர் கருத்தா? பார்ப்பான் பிறப்பிற்குரிய ஒழுக்கம் இவை என எங்கேயாவது விளக்கி யிருக்கின்றாரா? விளக்கியிருந்தால் பிற வருணத்தார்க்கும் உரிய ஒழுக்கங்களையும் தனித்தனி தொல்காப்பியத்தில் கூறியுள்ளதைப் போல கூறவேண்டுமன்றோ? எங்கு கூறியுள்ளார்? ஆதலால், மக்கட் பிறப்பிற்குரிய நல்லொழுக்கத்தையே சொல்லுகின்றார். இதில் பார்ப்பான் பெயரும், ஓத்தும் வருவதற்கு இடமில்லை. இவை எப்படி நுழைந்தனவென்பதையும் சிந்திக்கவேண்டும்.

இவைகளைப்போலவே, ஆரியப் புராணக் கதைகளும் கொள்கைகளும் பெயர்களும் பலவிடங்களில் வந்துள்ளன. அவை யாவும் வள்ளுவர் உடன்பட்டு எடுத்துக் காட்டுகிறார் என்றோ, உவமையாகக் கூறுகிறார் என்றோ கொள்ள எள்ளளவும் இடமில்லை. இவைகள் எப்படி இடம் பெற்றன? இவைகளுக்குரிய வேறு சொற்கள் கருத்துக்கள் எவை? பாடபேதம் எப்படி? இதற்குச் சான்றுகள் எவை? என்பவற்றைப் பற்றி விளக்கமாக "திருக்குறள் விஞ்ஞான ஆராய்ச்சி உரையும் விளக்கமும்" என்பதில் விவரித்துள்ளோம். இங்கு ஒவ்வொன்றையும் எடுத்துக்கொண்டு எழுதினால் இந்நூல் பெருகுமென விடுத்தனம். முறையாகவும் தொடர்பாகவும் உரை

எழுதுகையில் அதிகார அமைவு முன்பின் தொடர்பு ஒத்த பகுதிகள் இவைகளை எடுத்துக்காட்டி விளக்கும் போதுதான் அவை நன்கு விளங்குமெனத் தனியே அவ்வுரை எழுதியுள்ளோம்.

## தொகுப்புரை

திருக்குறளென்னும் பெருஞ் செல்வத்தினை மரபிற்குரிய உரிமையாகப் பெற்றுள்ள செந்தமிழ்ச் செல்வர்களே! தமிழ் மரபிற்குரிய தனி உணர்வாளர்களே! ஆராய்ச்சியறிவாளர்களே! இச்சிறு ஆராய்ச்சியானது திருக்குறளைப் பற்றிய உண்மையை ஒரு சிறிதளவாவது உணர உதவிசெய்யும் என யாம் உணர்கின்றோம்.

திருக்குறளின் தனிச்சிறப்பும் உலக அறிஞர்கள் இதற்களித்துள்ள பெருமதிப்பும் உணர்ந்தோம். தமிழ் மொழியிலும் உலகிலுள்ள வேறெம் மொழிகளிலும் இதற்கிணையான அறநூல் இல்லையென்பதைத் தெள்ளிதின் அறிந்தோம். இது மதத்தின் பேராலும், சமயத்தின் பேராலும் அறிவில்லாப் பொதுமக்களறிவை மயக்கி ஆட்டுமாட்டு மந்தைகள் போலக் கூட்டம் கூட்டுவதற்காக ஆக்கப்பட்ட பொய்நூலன்று; பொதுவாக மக்கட் பிறப்பெடுத்தவர்களின் அறிவைவிளக்கி சிறந்தவாழ்வில் திகழ்விப்பதற்காகச் செய்யப்பட்ட மெய்நூலாகும்.

வடநூல்களில் காணப்படும் மடமையை வளர்க்கும் கொள்கைகளும், மனிதத்தன்மைக்கு அடாத செயல்களும், வருணம் ஆசிரமம் முதலான பெயர்களில் அறிவுக்குப் பொருந்தாத மூடப் பழக்கவழக்கங்களும் இதில் இடம்பெறுத காரணத்தால் பேரறிஞர்கள் இதைப் பெரிதும் பாராட்டினுர்கள். வடநூலிற் கூறப்படும் மூடக் கொள்கைகளை மூலமாகக்கொண்டே இந்த நூலை வள்ளுவர் எழுதினுர் என்பதை எடுத்துக்காட்ட, பரிமேலழகர் அரும்பாடுபட்டுள்ளார். இதனுல் அறிஞர்கள் அளித்த பெருமதிப்பை ஆழக்குழிதோண்டித் தாழப்புதைக்கவும் முற்பட்டுவிட்டார்.

இதுவரையில் எந்தப் புலவரும் பரிமேலழகர் இடையில் நுழைத்த வடவர் கொள்கைகளைக் கண்டுபிடித்து

ஆராய்ந்து மறுத்துக் களைந்து தகுந்தபாடம் அமைத்துப் பொருந்த உரை எழுதவும் முன்வரவில்லை. ஆரிய நூற் கொள்கைகளைத் தழுவியே ஆசிரியர் நூல்செய்துள்ளார் என மட்டும் கூசாமல் கூறத் துணிவு கொண்டார்கள். இதை மறுத்து உண்மையை விளக்கும் உணர்ச்சியும் ஊக்கமும் ஆராய்ச்சியும் அறிவும் நமக்குள்ளதா? அப் படியே ஒப்புக்கொள்ளும் உணர்வற்ற மடமைத் தன்மை தான் நம்மிடம் இன்னும் மலிந்து உள்ளதா? வடநூல் வழியேதான் திருக்குறள் செய்யப்பட்டுள்ளது; வவர் கொள்கைகளுக்கு இதில் இடம் உள்ளது என ஒப்புக் கொண்டால்! அயல் நாட்டறிஞர் அளித்த பெருமைகளை யும் நம் அறியாமையால் பறிகொடுத்துவிட்டு, வள்ளு வரை வடவர்களுக் கடிமையாக்கி வைத்துவிட்டுத் தமிழ்ப் பெருங்குடி மக்களாகிய நாமும், நமக்குப் பின்னுல் பிறக் கும் பிறவிகளும் வழிவழி வடவர்களுக்கு அடிமைகளாகி 'அடியோம் அடியோம் அடியோம் அடிக்குடில்' என அடிமை வாழ்வில் வாழவே வழிகோலிக்கொண்டவர்க ளாவோம். வடநூற் கொள்கைகளின்படி திருக்குறள் ஆக்கப்படவில்லை என்பதைக் கருதியே வடவர்கொள்கை வேருனவை; வள்ளுவா கொளகைகள் அவைகளுக்கு முற்றும் மாருனவை என்பதை, வேதம் மனுநீதி முத லான நூல்களின் விதிகளையும் திருக்குறளின் அறிவுரை களையும் எடுத்துக்காட்டி விளக்கமாக வேறு நூல் வெளி யிட்டுள்ளோம். ஆரிய நூற் கருத்துக்களைக்கொண்டே திருக்குறள் ஆக்கப்பட்டதென்று அறிவிலாது கூறுவோர் வாய்க்கு ஆப்பு வைத்தடித்தாற்போல் அந்நூல் அமைந் துள்ளது.

திருக்குறளைப் பற்றித் தெரியாதிருந்த காலமும் ஒன் றுண்டு; இன்று திருக்குறளைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆர்வம் எல்லாருடைய உள்ளத்திலும் எழுந்து வளர்ந்து வருகிறது. இக்காலத்தைப் பயன்படுத் திக்கொண்டு பலவகைகளில் பலர் முனைந்து முன்வந்துள் ளார்கள். திருக்குறள் பள்ளி மாணவர்கட்கும் பாட மாக வைக்கப்பட்டுள்ளதால் அப்பகுதிகளுக்குப் பல உரைகளும் வெளிவந்துள்ளன. பத்திரிகைகளும் துண்டு

வெளியீடுகளும் இதற்காகவே பல வெளிப்பட்டுள்ளன. இவைகளில் பெரும்பாலும் பரிமேலழகர் உரை அப்படியே எழுதப்பட்டும் சிறிது முன்பின்னாக மாற்றப்பட்டும் வந்துள்ளன. சிலர் தம் கருத்துக்களுக்கேற்றபடியும் வெளியிட்டுள்ளார்கள். ஆயினும் எவ்வகையினும் அடிமைக்குரிய அடிப்படை மாறவில்லை; அப்படியே வைத்துப் பூச்சு பூசுகின்றார்கள்.

இவைகளைக் கண்ட பொதுமக்களும் பள்ளி மாணவர்களும் வள்ளுவர் கொள்கைதான் எது. வள்ளுவர் கருத்துக்குப் பொருத்தமானஉரை எது என அறியவியலாமல்அலமருகின்றார்கள். ஆனால் உண்மை அறிய ஆவல் உடையவர்களாக இருக்கின்றார்கள். இந்நிலையில் தமிழர் மரபிற்குரிய தனிப் பண்பாட்டறிவிற்கும், பகுத்தறிவு விஞ்ஞான அறிவுக்கும் மெய்யறிவியல் முறைக்கும் வள்ளுவர் உள்ளத்திற்கும் பொருத்தமான ஒரு சிறந்த உரை வெளிவரவேண்டும். அது வள்ளுவர் உள்ளத்திற்கேற்ப —கருத்துக்குப் பொருத்தமாக அமைந்துள்ள தென்பதற்குக் குறளிலிருந்தே அகச்சான்றுகள் எடுத்துக் காட்டப் படவேண்டும். இப்பண்புகளமைந்த ஒரு சிறந்த உரை விரைவில் வெளிவருமென அன்பர்களுக்கு அறிவிக்கின்றோம்.

திருக்குறளில் அறிஞர்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் ஐயப்பாட்டினை விளைவிக்கும் சொற்கள், சொற்றொடர்கள், கருத்துக்கள், கொள்கைகள், கதைகள் பல உள்ளனவென்பதைச் சொல்லாமலே அவர்கள் அறிந்திருப்பார்கள். அவைகளில் ஒவ்வொன்றைப் பற்றியும் திருவள்ளுவர் கருத்தென்ன? அது பொருத்தமாவதெங்ஙனம்? என்பவைகளைப் பற்றியும், திருவள்ளுவர் கருத்துடன் பொருத்தமிலாதவை எவை? அவைகளுக்குத் தகுந்த சான்றுகளெவை? என்பவைகளைப் பற்றியும் அவ்வுரையில் விளக்கமாகக் காணலாம். விஞ்ஞான அறிவும் ஆராய்ச்சி அறிவும் மிகுந்துள்ள இக்காலத்தில் இவற்றிற்கேற்ப திருக்குறள் விஞ்ஞான ஆராய்ச்சி உரையும் விளக்கமும் எவ்வாறு இருக்குமென ஆவலுடன் எதிர்பார்ப்பவர்கள் பலர் இருப்பார்கள். ஆதலால், யாமும்

மிகுந்த ஆவலுடன் வெளியிட விழைகின்ரேம்; தமிழ் மக்களனைவரும் ஆதரவளித்து திருவள்ளுவர் அறமுறையும் அறிவு நெறியும் உலகெலாம் பரவ உதவிசெய்ய வேண்டுமெனவும் பணிவுடன் வேண்டிக்கொள்கின்ரேம்.

## திருக்குறளில் காணப்படும் சொற்களும் சொற்ருெடர்களும்

ஆதிபகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினுன், இறைவன், ஐந்தவித்தான், அறவாழி யந்தணன், எண் குணத்தான், தாள்தொழல், அடிசேர்தல், நிலமிசை நீடு வாழ்தல், இருவினை, பிறவாழி, தாளை வணங்காத் தலை, அமிழ்தம், பூசனை, வானோர், நீத்தார், துறந்தார், இருமை, வரன் என்னும் வைப்பு, இந்திரன், நிறைமொழி, மறைமொழி, அந்தணர், சிவிகை பொறுத்தானே டூர்ந்தானிடை அறமறிதல், இயல்புடைமூவர், துறந்தார், இறந்தார், தென்புலத்தார், தெய்வம், வானுறையும் தெய்வம், புத்தேளிர்வாழுமுலகு, புதல்வர், எழுபிறப்பு, சாவா மருந்து, அமரர், ஆரிருள், அளறு, ஒத்து, பார்ப்பான், செய்யவள், தவ்வை, திரு, மேலுலகம், இன்னுஉலகம், அவ்வுலகம், இலர்பலர், அவிசொரிதல், வேட்டல், உயர்ந்த உலகம், வையத்தின் வானம் நணியதுடைத்து, ஈண்டுவாராநெறி, எழுமையுமே மாப்புடைத்து, குடம்பை, புக்கில், பற்றற்ருன், ஊழ், ஆகூழ், போகூழ், இழவூழ், வகுத்தவகை, மேற்பிறந்தார், கீழ்ப்பிறந்தார், அவியுணவு, குலம், குடி, குடும்பம், எச்சம், அந்தணர் நூல் அறுதொழிலோர், நூல் மறப்பர், துறந்தார் படிவம், அடியளந்தான், மாமுகடி, தாமரையினுள், மந்திரி, அலகை, பேய், உலகியற்றியான், தேவர், இமையார், அணங்கு, தாமரைக்கண்ணுனுலகு.

மேற்கண்ட சொற்களைப் போன்று இன்னும் குறளில் காணப்படும் மற்ற சொற்கள் தொடர்கள் கருத்துக்களைப்பற்றி அன்பர்களுக்கும் அறிஞர்களுக்கும் தோன்றியுள்ள ஐயங்கள் முதலானவற்றைத் தெரிவிக்க வேண்டுமெனவும் வேண்டிக் கொள்ளுகின்ரேம்.

---

நகர அச்சகம், மதுரை ரோடு, திருச்சிராப்பள்ளி.